## அரசறிவியல் அறிமுகம் - வரைவிலக்கணம்

1) அரசறிவியல் கற்கை நெறிக்கான அடித்தளத்தினை இட்ட கிரேக்க சிந்தணையாளர்கள் மூவரைத் தருக?
   - **சோக்கிரட்டிஸ்**
   - **பிளேட்டோ**
   - **அரிஸ்டோட்டில்**
2) அரசியல் எனும் சொற்பதத்தினை முதன்முதலில் பயன்படுத்திய அரசியல் சிந்தணையாளர்?
   - **அரிஸ்டோட்டில்**
3) அரசியல் விஞ்ஞானத்தின் கருவறை என அழைக்கப்பட்ட நகரம் எது?
   - **கிரேக்கம்**
4) பாரம்பரிய அரசியலின் தந்தையாக விளங்கியவரும் அவரால் எழுதப்பட்ட நூலின் பெயரினையும் தருக?
   - **அரிஸ்டோட்டில்**
   - **நூல்- அரசியல்**
5) அரசறிவியல் கற்கை நெறிக்கு சிந்தணையாளர்களால் வழங்கப்பட்ட சிறப்பு பெயர்கள்?
   - **அரிஸ்டோட்டில் - அரசியல்**
   - **ஆர்.ஜி.கெட்டல் - அரச விஞ்ஞானம்**
   - **சேர்.பிறட்ரிக் பொலக் - ஆட்சியியல் விஞ்ஞானம்**
   - **வில்லியம் கோட்வின் - அரசியல் விஞ்ஞானம்**
6) அரசியல் சார்ந்த கிரேக்க மொழிச் சொற்பதங்களும் அவற்றின் பொருள் விளக்கமும்?
   - POLIS – **நகர அரசு**
   - POLITECA – **அரசியல் யாப்பு**
   - POLITY – **அரசாங்கம்**
7) அரசியல் விஞ்ஞானக் கற்கையின் வரலாற்று ரீதியான வளர்ச்சிக் கட்டங்களை குறிப்பிடுக?
   - **கிரேக்கர் காலம்**
   - **உரோமர்காலம்**
   - **மத்திய காலம்**
   - **நவீண காலம்**
8) கிரேக்கர்கால அரசியல் கல்வியின் பிரதான இயல்புகள் இரண்டு தருக?
   - **நகரங்களை மையமாகக் கொண்டு அரசு தோற்றம் பெறல்**
   - **நேரடி ஜனநாயகம் அரசின் தாயகமாக விளங்கியது**
9) அரசறிவியலின் இரு பிரதான முகங்களும் எவை?
   - **மோதல்**
   - **ஒத்துழைப்பு**
10) **"அரசு பற்றிய கற்கை அரசறிவியல்"** என கருத்து முன்வைத்த அரசியல் சிந்தணையாளர்கள் மூவரைத் தருக?
   - **அரிஸ்டோட்டில்**
   - **கார்ணர்**
   - **பிளன்ஸிலி**
11) **"அரசாங்கம் பற்றிய கற்கை அரசறிவியல்"** என கருத்து முன்வைத்த அரசியல் சிந்தணையாளர்கள் இருவரைத் தருக?
   - **ஜோன் சீலி**
   - **லீக்கொக்**
12) **"அரசு,அரசாங்கம் பற்றிய கற்கை அரசறிவியல்"** என கருத்து முன்வைத்த அரசியல் சிந்தணையாளர்கள் இருவரைத் தருக?
   - **கில்கிறைஸ்**
   - **ஜெனட்**
13) **"அதிகாரம் பற்றிய கற்கை அரசறிவியல்"** என கருத்து முன்வைத்த அரசியல் சிந்தணையாளர்கள் மூவரைத் தருக?
   - **மாக்கியவள்ளி - தோமஸ் கொப்ஸ் - மெக்ஸ்வெபர்**

14) **"மனிதனது அரசியல் நடத்தைகள் பற்றிய கற்கை அரசறிவியல்"** என கருத்து முன்வைத்த அரசியல் சிந்தணையாளர்கள் மூவரைத் தருக?

- ❖ **கிரகம் வொலஸ்**
- ❖ **சாள்ஸ் ஈ மெரியம்**
- ❖ **லாஸ்வெல்**

15) நவீண அரசியலின் தந்தையாக விளங்குபவரும் அவரால் எழுதப்பட்ட நூலினையும் குறிப்பிடுக?

- ❖ **மாக்கியவள்ளி**
- ❖ **இளவரசன்** (THE PRINCE)

16) அரசறிவியல் விஞ்ஞானத்திற்கு வழங்கப்பட்ட மரபு ரீதியான வரைவிலக்கணங்கள் இரண்டு தருக?

- ❖ **அரசு பற்றிய கற்கை நெறி அரசறிவியல்**
- ❖ **அரசாங்கம் பற்றிய கற்கை நெறி அரசறிவியல்**

17) கிரேக்கத்தில் அரசியல் சிந்தணையாளர்களால் முதன்முதல் இனங்கானப்பட்ட அரசியல் சார்ந்த நிறுவனங்கள் இரண்டு தருக?

- ❖ **அரசு**
- ❖ **அரசாங்கம்**

18) அரிஸ்டோட்டில்,பிளேட்டோ நடாத்திய கல்விக் கூடங்களின் பெயரினைக் குறிப்பிடுக?

- ❖ **லைசியம் - அரிஸ்டோட்டில்**
- ❖ **அகடமி – பிளேட்டோ**

19) அரசியல் விஞ்ஞானக் கற்கையின் இரு பிரதான பிரிவுகளும் எவை?

- ❖ **கோட்பாட்டு அரசியல்**
- ❖ **பிரயோக அரசியல்**

20) அரசியல் விளையாட்டினை ஆடுவதற்கு பயன்படும் இருவழி முறைகளும் எவை?

- ❖ **ஜனநாயக வழிமுறை**
- ❖ **புரட்சிகர வழிமறை**

## நூல்களும் அவற்றை எழுதிய ஆசிரியர்களும்

**21)** அரசியல் முறைமை,அரசியல் கோட்பாடுகளின் பலவிதம், அரசியல் வாழ்க்கையின் முறைமை பகுப்பாய்வு, அரசியல் பகுப்பாய்வுக்கான அறிமுகம்,அரசியல் பகுப்பாய்வுக்கான வரைபு சட்டம் **(டேவிட்ஈஸ்டன்)**

**22)**. அரசியல் விஞ்ஞானத்தின் அறிமுகம் **(ஜோன்சீலி,கார்ணர்)**

**23)** நவீணஅரசுகளின் சுதந்திரம், அரசியல் இலக்கணம், அரசியலுக்கு ஓர் அறிமுகம், ஜனநாயகம் நெருக்கடியில், அரசின் கோட்பாடும் நடைமுறையும் **(கரல் லஸ்கி)**

**24)**. அரசியல் பரிணாமத்தின் அடிப்படைகள்**(ஸடீபன் லீக்கொக்)**

**25)**. அரசியல் விஞ்ஞானத்தின் அடிப்படைகள்**(கில்கிறைஸ்ட்)**

**26)**. நவீன அரசு, சமூகம், சமூகவிஞ்ஞானத்தின் அடிப்படைகள், அரசாங்கத்தின் வலைப்பின்னல் **(மைக்ஜவர்)**

**27)**. அரசியல் விஞ்ஞானம் **(ஆர்.ஜி.கெட்டல்)**

**28)**. ஆளும் வர்க்கம் **(மொஸ்கா)**

**29)**. அரசியலின் மனிதத்தன்மை, ஆங்கில அரசியல் மெய்யியல் **(கிரகம் வொலஸ்)**

**30)**. விஞ்ஞானப்புரட்சியின் கட்டமைப்பு **(தோமஸ்கூன்)**

## கூற்றுக்களும் அதனைக் கூறிய சிந்தனையாளர்களும்

1. "அரசறிவியல் ஓர் முதுநிலை விஞ்ஞானம்" **(அரிஸ்டோட்டில்)**
2. "அரசியல் விஞ்ஞானத்தின் எல்லைகளை வரையறுத்து கூறுவது இலகுவான பணியல்ல" **(ஆர்.எச்..சொல்ரா)**
3. "அரசியல் விஞ்ஞானம் இயற்காட்சியுடன் தொடர்புடைய அறிவுத் தொகுதியாகும்"**(கார்ணர்)**
4. "மனிதனது உளவியல் பற்றிய அறிவில்லாமல் அரசியலை கற்பது அர்த்தமற்றது" **(கிரகம் வொலஸ்)**
5. "அரசியல் என்பது நிலையான ஓர் அதிகார போராட்டமாகும்" **(மாக்கியவள்ளி)**
6. "மனிதன் பகுத்தறிவுள்ள ஓர் அரசியல் பிராணி" **(அரிஸ்டோட்டில்)**
7. அரசியல் விஞ்ஞானம் அரசோடு ஆரம்பித்து அரசுடனே முடிவடைகின்றது" **(கார்ணர்)**
8. "சகல புரட்சிகளுக்கும் காரணம் சமூக அசமத்துவமே" **(அரிஸ்டோட்டில்)**
9. "அதிகாரம் மனிதனை மாசுபடுத்துகின்றது" **(அக்டன் பிரபு)**
10. "அரசாங்க முறைகளுள் ஜனநாயக அரசாங்கமே சிறந்தது" **(மாக்கியவள்ளி)**

## பாடப்பரப்பு - இயல்பு – பயன்பாடு – கற்கும் முறை

31) 1948 யுனெஸ்கோ மாநாட்டில் அரசியல் விஞ்ஞானத்தின் உள்ளடக்கங்களாக அடயாளப்படுத்தப்பட்ட விடயங்கள் இரண்டிணை குறிப்பிடுக?
   - ❖ **அரசு மற்றும் அரசாங்கம் பற்றிய கற்கை**
   - ❖ **அதிகாரம் பற்றிய கற்கை**

32) அரசியல் விஞ்ஞானப்பாடப்பரப்பு விருத்தியடைவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் இரண்டிணைக் குறிப்பிடுக?
   - ❖ **1903இல் ஐக்கிய அமெரிக்காவில் அரசியல் விஞ்ஞான சங்கம் அமைக்கப்பட்டது**
   - ❖ **1906இல் ஐக்கிய அமெரிக்காவில் வெளியான அரசியல் விஞ்ஞான விமர்சன பத்திரிகை**

33) அரசறிவியல் பாடப்பரப்பு எவ்வாறு அமைய வேண்டும் என்பதனை தீர்மனிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் இரண்டிணைக் குறிப்பிடுக?
   - ❖ **சர்வதேச அரசியல் விஞ:ஞான சங்கம்**
   - ❖ **ஐக்கிய நாடுகள் தாபனத்தின் கல்வி பிரிவான னெஸ்கோ அமைப்பு**

34) நடத்தைவாதக் கற்கையின் பின்னர் பாடப்பரப்பினுள் உள்ளடக்கப்பட்ட ஆய்வு விடயங்கள் ஐந்து தருக?
   - ❖ **அரசியல் கலாசாரம்**
   - ❖ **அரசியல் உயர்குழாம் வகுப்பினர்**
   - ❖ **அரசியல் முறைமை பகுப்பாய்வு**
   - ❖ **அரசியல் நவீணத்துவம்**
   - ❖ **அரசியல் நடத்தை**

35) அரசியல் விஞ்ஞானப் பாடப்பரப்பின் இயல்புகள் இரண்டு தருக?
   - ❖ **இயங்கியல் தன்மை கொண்ட கற்கை நெறி**
   - ❖ **நீண்ட செயற்பரப்பெல்லையை உடைய கற்கை நெறி**

36) அரசறிவியல் பாடப்பரப்பின் மையப்பொருளாக காணப்பட்ட ஆய்வு விடயம் எது?
   - ❖ **அரசு**

37) 20ம் நூற்றாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் பாடப்பரப்பினுள் சேர்க்கப்பட்ட ஆய்வு விடயங்கள் இரண்டு தருக?
   - ❖ **அரசியல் நடத்தை**
   - ❖ **முறைமை பகுப்பாய்வு**

38) அரசறிவியலைக் கற்பதனால் நாம் அடையும் சமூகம் சார்ந்த பயன்பாடுகள் இரண்டு தருக?
   - ❖ **ஜனநாயக ரீதியில் செயற்படும் நற்பிரஜைகளை உருவாக்குதல்**
   - ❖ **தேசிய சர்வதேச அரசியல் பற்றிய அறிவினை விருத்தி செய்து கொள்ளமுடியும்**

39) அரசறிவியலைக் கற்பதனால் நாம் அடையும் பாடம் சார்ந்த பயன்பாடுகள் இரண்டு தருக?

- ❖ **அரசின் தோற்றம்,வளர்ச்சி, போன்றவற்றை அறிந்து கொள்ளமுடியும்**
- ❖ **அரசியல் யாப்பு,சட்டதிட்டங்கள், பற்றி அறிந்து கொள்ள முடியும்**

40) அரசறிவியல் கற்கை நெறியின் கோட்பாடு,நடைமுறை சார்ந்த இயல்புகள் இவ்விரண்டு தருக?

- ❖ **அரசறிவியல் சமூகவிஞ்ஞான பாடங்களுள் ஒன்றாக விளங்குகின்றது**
- ❖ **அரசறிவியல் அரசு,அரசாங்கம் பற்றிய கற்கை நெறியாக விளங்குகின்றது**

41) அரசறிவியலுடன் தொடர்புடைய சமூகவிஞ்ஞானப்பாட நெறிகள் ஐந்து தருக?

- ❖ **வரலாறு**
- ❖ **பொருளியல்**
- ❖ **உளவியல்**
- ❖ **மெய்யியல்**
- ❖ **சமூகவியல்**

42) சமூக விஞ்ஞான ஆய்வு நுட்பமுறைமைகள் நான்கு தருக?

- ❖ **அவதானம்**
- ❖ **பேட்டி முறை**
- ❖ **வினாக்கொத்து முறை**
- ❖ **கள ஆய்வு முறை**

43) அரசியல் விஞ்ஞானத்தின் கோட்பாட்டு அரசியல் பகுதிக்குள் இடம்பெறும் இரண்டு விடயங்களை குறிப்பிடுக?

- ❖ **அரசு பற்றிய கோட்பாடு**
- ❖ **அரசாங்கம் பற்றிய கோட்பாடு**

44) அரசியல் விஞ்ஞானத்தின் பிரயோக அரசியல் பகுதிக்குள் இடம் பெறும் விடயங்கள் இரண்டு தருக?

- ❖ **அரசு,அரசாங்கம்**
- ❖ **சட்டம்,சட்டத்துறை**

45) சமூக விஞ்ஞானத்திற்கும் இயற்கை விஞ்ஞானத்திற்கும் இடையிலான வேறுபாடுனள் இரண்டு தருக?

- ❖ **சமூகவிஞ்ஞானம் - நிச்சயத்தன்மை வாய்ந்த முடிவுகளை பெற்றுக் கொள்வது கடினம் சிறந்தமுறையில் காரணகாரிய,எதிர்வுகூறல் தொடர்புகளை பேணமுடியாது**
- ❖ **இயற்கை விஞ்ஞானம் - நிச்சயத்தன்மை வாய்ந்த முடிவுகளை பெற்றுக் கொள்ள முடியும்,ஆய்வுகூட பரிசோதனைகள்,காரணகாரிய,எதிர்வுகூறல் சிறப்பாக பேணப்படும்**

46) அரசியல் விஞ்ஞானம் ஓர் சமூக விஞ்ஞானம் என நிரூபிக்க பயன்படும் அளவுகோல்கள மூனறினைத் தருக?

- ❖ **பாட உள்ளடக்கம்**
- ❖ **பாடங்களை கற்பதற்கு பளன்படும் வழிமுறைகள்**
- ❖ **பாடங்களுக்கு இடையிலான தொடர்புகள்**

47) அரசியல் விஞ்ஞான கற்கையினை கற்பதற்கு பயன்படுத்தும் இரண்டு வழிமுறைகளை குறிப்பிடுக?

- ❖ **முறைசார் வழிமுறை**
- ❖ **முறைசாரா வழிமுறை**

48) அரசியல் தகவல்களை வழங்கும் முறைசார்ந்த ஊடகங்கள் இரண்டு தருக?

- ❖ **பாடசாலை**
- ❖ **பல்கலைக்கழகம்**

49) அரசியல் தகவல்களை வழங்கும் முறைசாரா ஊடகங்கள் இரண்டு தருக?

- ❖ **குடும்பம்**
- ❖ **வானொலி,தொலைக்காட்சி,**

50) பாடசாலையின் வெளிவாரியான பங்கேற்பில் அரசியல் பயிலப்படும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக?

- ❖ **தேசிய கீதம் இசைத்தல்**
- ❖ **சுதந்திர தினத்தை கொண்டாடுதல்**

## அணுகு முறைகள்

51) அணுகுமுறை என்றால் என்ன எனபதற்கு முன்வைக்கப்பட்ட வரைவிலக்கணங்கள் இரண்டு தருக?
- ❖ **குறிப்பிட்ட நிகழ்ச்சி சார்ந்த பார்வையும் விளக்கமுமாகும்**
- ❖ **அரசியல் சார்ந்ந விடயங்களை தெளிவாகவும் எளிமையாகவும் விளங்கிக் கொள்வதற்கு பயன்பதுத்தப்படுகின்ற நுட்பமுறைகள்**

52) அணுகுமுறைகளின் இரு பெறும் பிரிவுகளையும் குறிப்பிடுக?
- ❖ **மரபு ரீதியான அணுகுமுறைகள்**
- ❖ **நவீண அணுகுமுறைகள்**

53) அரசறிவியல் ஆய்வுக்காக பயன்னடுத்தப்படும் மரபு ரீதியான அணுகுறைகள் இரண்டு தருக?
- ❖ **தத்துவார்த்த அணுகுமுறை**
- ❖ **வரலாற்று அணுகுமுறை**

54) அரசறிவியலை ஆய்வுக்காக பயன்படுத்தப்படும் நவீண அணுகுறைகள் இரண்டு தருக?
- ❖ **நடத்தைவாத அணுகுமுறை**
- ❖ **முறைமைபகுப்பாய்வு அணுகுமுறை**

55) அரசறிவியலை ஆய்வு செய்வதற்காக பயன்படுத்தப்படும் விஞ்ஞானத் தன்மையுடைய அணுகுமுறைகள் இரண்டு தருக?
- ❖ **நடத்தைவாத அணுகுமுறை**
- ❖ **முறைமை பகுப்பாய்வு அணுகுமுறை**

56) தத்துவார்த அணுகுமுறைக்கும் ஒப்பீட்டு அணுகுமுறைக்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டு தருக?
- ❖ **தத்துவார்த்த அணுகுமுறை இலட்சியங்களில் தங்கியுள்ளது,கற்ப்பணை தன்மையானது**
- ❖ **ஒப்பீட்டு அணுகுமுறை நடைமுறை ரீதியானது,யதார்த்த பூர்வமானது**

57) நடத்தைவாத அணுகுமுறையின் பிரதான இயல்புகள் இரண்டு தருக?
- ❖ **மனிதர்களின் அரசியல் நடத்தைகளை விஞ்ஞான பூர்வமாக ஆய்வு செய்கின்றது**
- ❖ **விளைவுகளை காட்டிலும் நுட்பமுறைகளில் அதிக கவனம் செலுத்துகின்றது**

58) மரபு ரீதியான அணுகுமுறைகளின் இயல்புகள் இரண்டு தருக?
- ❖ **அரசியலில் மரபு ரீதியான விடயங்களை பிரதானமாக ஆய்வு செய்கின்றது**
- ❖ **பேரிண விடயங்களை மாத்திரம் ஆய்வு செய்கின்றது**

59) நவீண அணுகுமுறைகளின் இயல்புகள் இரண்டு தருக?
- ❖ **பேரிண,சிற்றிண அரசியல் பரப்புக்களை ஆய்வு செய்கின்றது**
- ❖ **விஞ்ஞான பூர்வமாக ஆய்வுகளை மேற்கொள்கின்றது**

60) மரபு ரீதியான அணுகுமுறைகளின் சாதகங்கள் இரண்டு தருக?
- ❖ **பழமையான அரசியல் விடயங்களை ஆய்வு செய்கின்றது**
- ❖ **அரசியலில் இலட்சிய பூர்வமாக ஆய்வுகளை மேற்கொள்கின்றது**

61) மரபு ரீதியான அணுகுமுறைகளின் குறைபாடுகள் இரண்டு தருக?
- ❖ **பழமையான அரசியல் விடயங்களை மாத்திரம் ஆய்வு செக்கின்றது**
- ❖ **நம்பகத் தன்னை வாய்ந்த முடிவுகளை பெற்றுக்கொள்ள முடியாது**

62) நவீண அணுகுமுறைகளின் சாதகங்கள் இரண்டு தருக?
- ❖ **அரசியல் ஆய்வினை விஞ்ஞான பூர்வமாக மாற்றுகின்றது**
- ❖ **மனிதனது நடத்தைகளில் பிரதானமா கவனம் செலுத்துகின்றது**

63) நவீண அணுகுமுறைகளின் குறைபாடுகள் இரண்டு தருக?
- ❖ **நம்பாகத் தன்மை வாய்ந்த முடிவுகளை பெற்றுக்கொள்வது கடினம்**
- ❖ **ஆய்வாளனின் அகவயத்தாக்கம் ஆய்வுகளில் இடம்பெறல்**

64) முறைமைப்பகுப்பாய்வு அணுகுமுறையின் பிரதான இயல்புகள் இரண்டு தருக?
- ❖ **அரசறிவியல் பகுதியினை கட்டமைப்பு ரீதியாக ஆய்வு செய்கின்றது**
- ❖ **இயற்கை விஞ்ஞானத்தில் இருந்து சமூக விஞ்ஞானத்திற்கு கொண்டுவரப்பட்டது**

65) அரசியலில் தனி மனிதனைப்பற்றி ஆய்வு செய்கின்ற அணுகுமுறைகள் இரண்டு தருக?
- ❖ **நடத்தைவாத அணுகுமுறை**
- ❖ **உளவியல் அணுகுமுறை**

66) நடத்தைவாத அணுகுமுறையினை அறிமுகப்படுத்திய சிந்தனையாளர்கள் இருவரைத் தருக?
- ❖ **கிரகம் வொலஸ் - சாள்ஸ் ஈ மெரியம்**

67) சமூகவியல் அணுகுமுறையில் பயன்படுத்தப்படும் ஆய்வு நுட்பமுறைகள் இரண்டு தருக?
- ❖ **பேட்டி முறை**
- ❖ **வினாக்கொத்து முறை**

68) முறைமைப்பகுப்பாய்வு அணுகுமுறையினை விருத்தி செய்த இரு அமெரிக்கர்களும் யாவர்?
- ❖ **டேவிட் ஈஸ்டன்**
- ❖ **கப்ரியல் ஆல்மண்ட**

69) அரசியல் கற்கைக்கான ஒப்பீட்டு அணுகுமுறையின் நோக்கங்கள் இரண்டு தருக?
- ❖ **பல்வேறு அரசுகளையும் அவற்றின் ஒற்றுமை வேற்றுமைகளை அறிந்து கொள்ளல்**
- ❖ **பல்வேறு அரசாங்க மாதிரிகளை கற்றல்**

## அணுகுமுறைகளும் அதனை ஆய்வு செய்த ஆய்வாரள்களும்

70) தத்துவார்த அணுகுமுறை - **பிளேட்டோ,தோமஸ்மூர்,கெகல்,கான்ட்,**
71) வரலாற்று அணுகுமுறை - **அரிஸ்டோட்டில்,லஸ்கி,பிறிமன்,மொண்டஸ்கியூ**
72) நிறுவன அணுகுமுறை - **பைனர்,சி.எப்.ஸ்ரோங்,எச்.ஜே.லஸ்கி**
73) சட்ட அணுகுமுறை - **ஏ.வி.டைசி,மொண்டஸ்கியூ,சிசரோ,குரோசியஸ்**
74) ஒப்பீட்டு அணுகுமுறை - **அரிஸ்டோட்டில்,பிறைஸ்,மொண்டஸ்கியூ**
75) நடத்தைவாத அணுகுமுறை - **கிரகம்வொலஸ்,லாஸ்வெல்,ஆதர்.எப்.பென்லி**
76) முறைமைபகுப்பாய்வு அ.மு - **டேவிட் ஈஸ்ரன்,கப்ரியல் ஆல்மண்ட்,மோர்டன் கப்லான்**
77) சமூகவியல் அணுகுமுறை - **மைக்ஜவர்,ஸ்பென்ஸர்,வெபர்,கொம்ரே**
78) உளவியல் அணுகுமுறை - **சாள்ஸ் மெரியம்,ஆர்.ஏ.டால்,கிரகம் வொலஸ்**
79) பொருளியல் அணுகுமுறை - **அடம்ஸ்மித்,காள்மாக்ஸ்,ஜே.எஸ்.மில்,மிற்சேல்**
80) மாக்ஸிச அணுகுமுறை - **காள்மாக்ஸ்,ஏங்கல்ஸ்,அடம்ஸ்மித்**
81) புள்ளிவிபரவியல் அ.மு - **காலூப்,சாள்ஸ் மெரியம்,டேவிட் தொம்ஸன்**

## கூற்றுக்களும் அதனை கூறிய சிந்தணையாளர்களும்

1. ''வரலாறு என்பது கடந்தகால அரசியல் அரசியல் என்பது சமகால வரலாறு'' **(பிறிமன்)**
2. ''அரசியல் வரலாற்று அனுபவங்களின் விளைவாக தொகுக்கப்பட்டதே அரசறிவியல் கல்வி'' **(பேராசிரியர்.லஸ்கி)**
3. ''அரசறிவியலில் எந்தவோர் ஆய்வு விடயத்தினதும் ஆரம்பமும் முடிவும் ஆராயப்பட வேண்டியது மிக முக்கியம்'' **(அரிஸ்டோட்டில்)**
4. ''வரலாறு இல்லாத அரசியல் கல்வி பழம் இல்லாத மரத்தைப் போன்றது வரலாறு இல்லாத அரசியல் கல்வி வேரில்லாத மரத்தைப் போன்றது'' **(ஜோன் சீலி)**
5. ''வரலாறு இன்றி அரசறிவியல் சாத்தியமற்றது அரசறிவியல் இன்றி வரலாறு தனது சிறப்பை இழந்து விடும்'' **(ஸ்டீபன் லீக்கொக்)**
6. ''நான் அரசறிவியல் என்ற தலைப்பிலான வினாத்தாளை காணும்போது அந்த வினாக்களுக்கு வருத்தப்படுவதில்லை ஆனால் அரசறிவியல் எனும் தலைப்பிற்கே வருந்துகின்றேன்'' **(பேராசிரியர்.மெயிட்லண்ட)**
7. ''அரசாங்கத்தைப் பற்றி விளக்குவதே அரசியல் விஞ்ஞானம்'' **(ஸ்டீபன் லீக்கொக்)**
8. ''சமத்துவமின்மை புரட்சிகளுக்கு காரணமாகின்றத'' **(அரிஸ்டோட்டில்)**
9. ''அரசறிவியல் சட்ட நடைமுறைகளுடன் இரண்டறக் கலந்ததொன்றாகும்'' **(ஏ.வி.டைசி)**
10. ''நம் தந்தையர் உயிரியல் சார்ந்து சிந்தித்தால் நாம் உளவியல் ரீதியாக சிந்திக்க வேண்டும்'' **(ஈ.பார்க்னர்)**

## நூல்களும் அவற்றை எழுதிய ஆசிரியர்களும்

82) புதிய கைத்தொழில்மயஅரசு **(கல்பிரைத்)**
83) அரசியல் மனிதன்,அரசியலும் சமூகவிஞ்ஞானங்களும் **(லிப்சட்)**
84) அரசியல் விஞ்ஞானத்திற்கானஅறிமுகம் **(ஜோன் சீலி)**
85) புராதனசட்டம்,நிறுவனங்களின் ஆரம்பவரலாறு **(கென்றிமெயின்)**
86) . குடும்பத்தின் தோற்றம்,தனியார் சொத்துடைமையும் அரசும் **(ஏங்கல்ஸ்)**
87) . அரசியல் அடிப்படைபற்றியகல்வி **(கற்லின்)**
88) . நவீண ஜனநாயகங்கள் **(தோமஸ் பிறைஸ்)**
89) . ஜனநாயகக்கோட்பாட்டுக்கு ஓர் அறிமுகம் **(மேயோ)**
90) . குடும்பமும் ஜனநாயகசமூகமும் **(போல்சம்)**
91) . அரசியல் பகுப்பாய்வின் அகராதி **(ரொபர்ட்ஸ்)**

## அரசு– அரசாங்கம் - சமூகம் - சங்கம் - தேசம்

92) அரசு பற்றிய கருத்துக்களை வெளியிட்ட ஆரம்பகால சிந்தணையாளர்கள் இருவரைத் தருக?
- ❖ **பிளேட்டோ**
- ❖ **அரிஸ்டோட்டில்**

93) அரசின் பரிணாம வளர்ச்சி கட்டங்களை குறிப்பிடுக?
- ❖ **கிரேக்க நகர அரசு**
- ❖ **உரோமப் பேரரசு**
- ❖ **மானியமுறை அரசு**
- ❖ **தேசிய அரசு**
- ❖ **நவீன அரசு**

94) அரசிற்கு கொடுக்கப்பட்டுள்ள வரைவிலக்கனங்கள் இரண்டு தருக?
- ❖ **வரையறுக்கப்பட்ட பிரதேசத்தினுள் அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்த மனிதசமூகம்**
- ❖ **நிலம்,மக்கள்,அரசாங்கம்,இறைமை ஆகிய நான்கு மூலக்கூறுகளாலான ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனம்**

95) அரசின் அடிப்படைக் கூறுகள் நான்கினை குறிப்பிடுக?
- ❖ **எல்லையிடப்பட்ட நிலப்பரப்பு**
- ❖ **நிலைத்து வாழும் மக்கள்**
- ❖ **அரசாங்கம்**
- ❖ **இறைமை**

96) மொன்டீவீடீயோ மாநாட்டில் அரசின் தேவைப்பாடுகளாக ஏற்றுக்கொள்ளப் பட்ட விடயங்கள் எவை?
- ❖ **நிலப்பரப்பு**
- ❖ **மக்கள் தொகை**
- ❖ **அரசாங்கம்**
- ❖ **இறைமை**
- ❖ **சர்வதேச அங்கீகாரம்**

97) ''குடும்பத்தன் விரிவாக்கமே அரசு'' என கூறிய சிந்தணையாளர் யார்?
- ❖ **அரிஸ்டோட்டில்**

98) சர்வதேச அங்கீகாரத்தினை அரசின் அடிப்படையாக ஏற்றுக்கொள்வது தொடர்பான உடன்படிக்கை எம்மாநாட்டில் எப்போது எட்டப்பட்டது?
- ❖ **மொன்டிவீடியோ மாநாட்டில்**
- ❖ **1933ஆம் ஆண்டு**

99) அரசையும் அரசாங்கத்தையும் முதன்முதலில் வேறுபடுத்திய சிந்தணையாளர் யார்?
- ❖ **ஜோன் லொக்**

100) அரசு - அரசாங்கம் இடையிலான வேறுபாடுகள் இரண்டு தருக?
- ❖ **அரசு – முழுமையானது,இறைமையின் உரித்தாளி,ஸ்பரிசிக்க முடியாதது,புலனீடற்றது**
- ❖ **அரசாங்கம் - பகுதியளவிலானது,ஸ்பரிசிக்ககூடியது,விமர்சிக்ககூடியது,புலனீடானது**

101) அரசிற்கே உரித்தான அடிப்படைப் பண்புகள் இரண்டு தருக?

- ❖ **அனைத்து மக்களையும் பிரதிநிதித்தவப்படுத்தக் கூடியது**
- ❖ **இறைமையதிகாரம் கொண்டது,புலனீடற்றது,விமர்சிக்க முடியாதது,ஆல்புலமுடையது**

102) அரசு – சமூகம் இடையிலான வேறுபாடுகள் இரண்டு தருக?

- ❖ **அரசு நிச்சயிக்கப்பட்ட எல்லைப் பரப்பினுள் மாத்திரம் செயற்பட சமூகமானது தனது எல்லை கடந்தும் செயற்படக்கூடியது**
- ❖ **அரசு காலத்தால் பிந்தியது சமூகம் காலத்தால் முந்தியது**

103) அரசு – சங்கம் இடையிலான வேறுபாடுகள் இரண்டு கருக?

- ❖ **அரசு அனைத்து மக்களையும் தனது அங்கத்தவர்களாக உள்ளடக்கியிருக்க சங்கம் குறிப்பிட்ட சில பகுதியினரை மாத்திரம் அங்கத்தவர்களாக உள்ளடக்கியிருக்கும்**
- ❖ **அரசு சமூகம் உள்ளவரை நிலைத்திருக்கும் ஆனால் சங்கங்கள் குறித்த நோக்கம் உள்ளவரை மாத்திரமே நிலைத்திருக்கும்**

104) அரசு – தேசம் இடையிலான வேறுபாடுகள் இரண்டு தருக?

- ❖ **அரசு என்பது நிலம்,மக்கள்,அரசாங்கம்,இறைமை,சர்வதேச அங்கீகாரம் எனும் மூலக்கூறுகளை அடித்தளமாகக் கொண்டிருக்கும்.**
- ❖ **தேசம் பிறப்பினாலும்,மரபினாலும்,பொது மொழியினாலும் ஒன்று பட்ட மக்கள் கூட்டமாக விளங்குகின்றது**
- ❖ **அரசு அரசியல் மற்றும் சட்ட ரீதியானது,இறைமை அதிகாரம் கொண்டது**
- ❖ **தேசம் கலாசார ரீதியானது,இறைமை அதிகாரமற்றது**

105) அரசு – சமூகம் இடையிலான தொடர்புகள் இரண்டு தருக?

- ❖ **அரசிற்கும் சமூகத்திற்கும் அடிப்படையாக அமையும் மூலக்கூறு மக்கள் தொகை**
- ❖ **அரசின் செயற்பாடுகள் வெற்றியளிப்பதற்கும் சமுதாயத்தின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதற்கும் இரண்டிணதும் ஒருமைப்பாடு அவசியமானதாகும்**

106) ஒரு குடிமகன் அரசுக்கு செய்ய வேண்டிய கடமைகள் இரண்ட தருக?

- ❖ **அரசின் சட்விதிமுறைகளுக்கு கட்டுபட்டு நடத்தல் வேண்டும்**
- ❖ **அரசியல் யாப்பிற்கு மதிப்பளித்தல் வேண்டும்**

107) அரசாங்கத்தின் இயல்புகள் இரண்டு தருக?

- ❖ **அரசின் விருப்பங்களை நடைமுறைப்படுத்தும் ஓர் முகவர்**
- ❖ **புலனீடானது,விமர்சிக்ககூடியது,எல்லை கடந்தும் செயற்பட கூடியது**

108) அரசாங்கம் மேற்கொள்ளும் பணிகளை இருவிதமாக பாகுபடுத்த முடியும் அவ்விருமுறைகளையும் குறிப்பிடுக?

- ❖ **உள்வாரியான பணிகள்**
- ❖ **வெளிவாரியான பணிகள்**

109) ஒரு நல் அரசாங்கத்திற்கு இருக்க வேண்டிய பண்புகள் இரண்டு தரக?

- ❖ **அரசியல் யாப்பிற்கு மதிப்பளித்து செயற்படல் வேண்டும்**
- ❖ **பொது மக்களின் கேள்விகளுக்கு எச்சந்தர்பத்திலும் பொறுப்புடையதாக இருத்தல் வேண்டும்**

110) அரசாங்கம் மக்களுக்கு இடக்கூடிய தடைகள் இரண்டு தருக?

- ❖ **வாக்குரிமையை இரத்துச்செய்தல்**
- ❖ **பொருளாதார உரிமையை இரத்துச் செய்தல்,நாடுகடத்தல்**

111) அரசாங்கம் அதிகாரத்தை பிரயோகிப்பதற்கு பயன்படுத்தும் உபகரணங்கள் இரண்டு தருக?

- ❖ **சிவில் சேவை அல்லது பணிக்குழு ஆட்சி**
- ❖ **பொலிஸ் சேவை**

112) ஆல்புல எல்லை கடந்தும் செயற்படக் கூடிய சங்கங்கள் இரண்டு தருக?

- ❖ **சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்**
- ❖ **உரோமன் கத்தோலிக்க திருச்சபை**

113) இனக்குழுமம் என்பன் விளக்கம் விளக்கம் யாது?

- ❖ **குறிப்பிட்ட பிரதேசத்தில் வரலாற்று ரீதியாக கலாசாரம்,மொழி,சமயம் போன்றவற்றில் ஒரே தன்மையினைக் கொண்டவர்களை இனக்குழுமம் எனலாம்.**

114) ஒரு நாட்டிற்கு அரசாங்கம் அவசியமாவதற்கான காரணிகள் இரண்டு தருக?

- ❖ **சமூகத்தை ஒழுங்கமைத்து கட்டுப்படுத்தி நல்வழிப்படுத்துவதற்கு.**

- ❖ **பொதுத்துறை கொள்கையினை உருவாக்கி அவற்றை சிறந்த முறையில் நடைமுறைப் படுத்துவதற்கு,அரசின் வெற்றிகரமான செயற்பாட்டிற்கு**

**115)** அரசாங்கத்தின் அதிகாரங்களை கட்டுப்படுத்துவதற்கு பயன்படும் கட்டுப்பட்டு பொறிமுறைகள் இரண்டு தருக?

- ❖ **அரசியல் யாப்பு**
- ❖ **வலுவேறாக்கல் கோட்பாடு,நீதிப்புனராய்வு**

**116)** அரசாங்கம் குடிமக்கள் மீது அதிகாரத்தை பிரயோகிக்கும் வழிமுறைகள் இரண்டு தருக?

- ❖ **ஒப்பந்தம்**
- ❖ **பலவந்தம்**

**117)** காவல்துறையின் பணிகள் இரண்டு தருக?

- ❖ **சட்டங்களை மீறுவோரை நீதிமன்றத்தின் முன்னிலையில் நருத்துதல்**
- ❖ **குற்றங்கள் மற்றும் ஏனைய சட்டவிரோத செயற்பாடுகளை தவிர்த்தல்**

**118)** சங்கங்களின் பிரதான நோக்கங்கள் இரண்டு தருக?

- ❖ **தமது சங்க உறுப்பினர்களுக்கான சேவைகளை பெற்றுக்கொடுத்தல்**
- ❖ **சர்வதேச ரீதியில் மக்களை விழிப்புனர்வு ஊட்டுதல்**

**119)** தேசம் ஒன்றினை அடயாளம் காண்பதற்கு ஏதுவாய் அமையும் காரணிகள் இரண்டு தருக?

- ❖ **வெவ்வேறுபட்ட இனக்குழுமங்களை உள்ளடக்கியிருக்கும்**
- ❖ **பொதுவிருப்பத்தினையும்,சிந்தணையினையும் உணர்வுபூர்வமாக கொண்டிருப்பர்**

## கூற்றுக்களும் அதனை கூறிய சிந்தணையாளர்களும்

1. ''இயற்கையின் படைப்பே அரசு''**(அரிஸ்டோட்டில்)**
2. ''ஜென்ம பாவத்தின் விளைவே அரசு'' **(செய்ன் ஒகஸ்டின்)**
3. ''கடவுளின் படைப்பு அரசு'' **(தாந்தே)**
4. ''பொதுச் சித்தத்தின் வெளிப்பாடு அரசு'' **(ஜீன் ஜக்யூ ரூசோ)**
5. ''வர்க்க முரண்பாடுகளின் வெளிப்பாடே அரசு'' **(காள்மாக்ஸ்)**
6. ''மனிதனது சிறந்த படைப்பே அரசு'' **(மாக்கியவள்ளி)**
7. ''அகவுணர்ச்சியின் வெளிப்பாடே அரசு'' **(கெகல்)**
8. ''நானே அரசு'' ''எனது எண்ணமே சட்டம்'' **(14ம் லூயி)**
9. ''மனிதன் அரசில்லாமல் வாழ முடியுமாயின் நிச்சயமாக அவன் கடவுள் அல்லது தேவதையாக இருக்க வேண்டும்'' **(அரிஸ்டோட்டில்)**
10. ''சமூகத்துடன் இணைந்திருக்கின்ற ஓர் கட்டமைப்பே அரசு'' **(மைக்ஐவர்)**
11. ''எல்லாம் அரசிற்குள்ளே அரசிற்கு வெளியேயும் எதிராகவும் எதுவுமில்லை'' **(மம்லினி)**
12. ''சங்கங்கள் பொதுவான தொடர்புகளை கொண்டிருக்கும் மக்கள் குழுவாகும்'' **(ஜி.டி.எச்.கோல்)**
13. ''சமூகம் தொண்டு செய்யும் கூட்டு நிறுவனமாகும்'' **(பார்கர்)**
14. ''மொழி,மரபு ஆகியவற்றின் அடிப்படையில் ஒன்றுபடுதலே தேசியம்'' **(லீக்கொக்)**
15. ''மொழி,இலக்கியம்,பழக்கவழக்கங்கள்,கருத்தக்கள் ஆகியவற்றால் ஒன்றுபட்ட மக்கள் தொகுதியே தேசியம்'' **(பிறைஸ்)**

## (அரசு) – கிரேக்கர்காலம், உரோமர்காலம், மத்தியகாலம், நவீனகாலம்

**120)** ஆரம்பகால பழங்குடியினரையும் அவர்கள் வாழ்விடங்களை அமைத்து கொண்ட பிரதேசங்களையும் குறிப்பிடுக?

- ❖ **நோமட்டிக் பழங்குடியினர்**
- ❖ **நைல்நதி,யூப்ரட்டிஸ்,ரைகிரிஸ்,மஞ்சள்ஆறு**

**121)** கீழைத்தேய பேரரசுகளின் பிரதான இயல்புகள் இரண்டினை குறிப்பிடுக?

- ❖ **அரசு பரம்பரை மன்னர்களால் ஆழப்பட்டது**
- ❖ **மக்கள் தங்களது உரிமைகள் சுதந்திரங்கள் தொடர்பாக ஏதும் அறிந்திருக்கவில்லை**

122) கிரேக்க நகரஅரசு முறைமையின் பிரதான இயல்புகள் இரண்டு தருக?

- **நகரங்களை மையமாகக் கொண்டு அரச தோற்றம் பெற்றது**
- **அரசியலில் நேரடி ஜனநாயகம் நடைமுறையிலிருந்தமை**

123) கிரேக்க நகரஅரசு முறைமையில் காணப்பட்ட சமூகவகுப்புக்கள் இரண்டினை குறிப்பிடுக?

- **பிரபுக்கள் அல்லது அடிமைகளின் எஜமான்கள் வகுப்பு**
- **அடிமைகள் வகுப்பு**

124) கிரேக்க நகரஅரசு முறைமை பற்றி ஆய்வு செய்த ஆய்வாளர்கள் இருவரைக் குறிப்பிடுக?

- **பிளேட்டோ**
- **அரிஸ்டோட்டில்**

125) கிரேக்க நகரஅரசுகளில் நேரடி ஜனநாயகம் வெற்றிகரமாக நடைமுறை படுத்துவதற்கு ஏதுவாய் அமைந்த காரணிகள் இரண்டிணைக் குறிப்பிடுக?

- **அரசின் ஆள்புலப் பரப்பு சிறிதாகக் காணப்பட்டமை**
- **அரசியல் அதிகாரம் பிரஜைகளுக்கு மாத்திரம் உரித்தாகியிருந்தமை**

126) கிரேக்க நகரஅரசு முறையில் அரசியல் உரிமைகளில் இருந்து ஒதுக்கப்பட்ட இரு சமூகப்பிரிவினரைக் குறிப்பிடுக?

- **பெண்கள்**
- **வெளிநாட்டவர்கள்,அடிமைகள்**

127) கிரேக்க நகரஅரசுகள் வீழ்ச்சியடைவதற்கான காரணிகள் இரண்டு தருக?

- **நகர அரசுகளுக்கு இடையிலான மோதல்கள் (எதேன்ஸ்-ஸ்பாட்டா)**
- **வெளிநாடுகளின் ஆக்கிரமிப்புக்கள்**

128) உரோம பேரரசின் பிரதான இயல்புகள் இரண்டினை குறிப்பிடுக?

- **உரோமில் நிலவிய குடியரசில் இரண்டை நிர்வாக முறைமை காணப்பட்டது**
- **ஐரோப்பாவில் பல நாடுகளை கைப்பற்றி தன்னை ஓர் பேரரசாக வெளிக்காட்டியது**

129) உரோம பேரரசு பற்றி ஆய்வு செய்த ஆய்வாளர்கள் இருவரைத் தருக?

- **சிசரோ**
- **பொலிவியஸ்**

130) உரோமில் நிலவிய குடியாட்சியில் இரட்டை நிர்வாக முறைமை காணப்பட்டது அவ்விரு முறைகளையும் குறிப்பிடுக?

- **பரம்பரை மரபின் வழி வந்த ஆட்சியாளர்கள்**
- **மக்களால் தெரிவு செய்யப்பட்ட செனற்சபை**

131) உரோம அரசு தமது ஆட்சிபிரதேசங்களாக்கிய ஐரோப்பிய நாடுகள் இரண்டினை குறிப்பிடுக?

- **பிரான்ஸ்**
- **ஸ்பெயின்**

132) உரோம சாம்ராஜ்ஜியத்தின் வளர்ச்சியினை மூன்று கட்டங்களாக வகைப்படுத்தலாம் அவை மூன்றையும் குறிப்பிடுக?

- **மன்னராட்சி நகர அரசுகள்**
- **குடியரசு முறையிலான ஆட்சிமுறைமை**
- **கொடுங்கோண்மை ஆட்சிமுறைமை**

133) உரோம பேரரசில் அரசியல்,சமூக,பொருளாதார நடவடிக்கைகளில் இருந்து ஒதுக்கப்பட்ட மக்கள் இனம் எது?

- **பிலிப்பைன்சு இன மக்கள்**

134) உரோமர்களில் ஆட்சிமுறைமைக்கு அடிப்படையாக விளங்கிய சட்ட முறைமை எது?

- **தேசங்களின் சட்டம்**

135) உரோமர்கால அரசில் மேன்மை பெற்ற மதம்?

- **கிறிஸ்தவ மதம்**

136) உரோம பேரரசு வீழ்ச்சியடைவதற்கு ஏதுவாய் அமைந்த காரணிகள் இரண்டினை குறிப்பிடுக?

- **சிவில் சேவையில் துணிச்சலற்ற தன்மை,அச்சவுணர்வு நிலவியது**
- **மக்கள் மன்னர்கள் மீது அவநம்பிக்கை கொண்டனர்,நிலப்பிரபுக்களின் ஆதிக்கம்**

137) நிலமானிய அரசு முறை தோற்றம் பெற ஏதுவாய் அமைந்த காரணிகள் இரண்டினை குறிப்பிடுக?

- **நிலப்பிரபுக்கள் அரசர்களைவிட அதிகாரம் பெற்றவர்களாக விளங்கினர்**
- **படைமானிய பிரபுக்களின் ஆதிக்கம்,உரோம பேரரசின் வீழ்ச்சி**

138) நிலமானிய அரசு முறைமையின் பிரதான இயல்புகள் இரண்டிணை குறிப்பிடுக?

- ❖ **சமயத்தின் ஆதிக்கம் அதிகமாகக் காணப்பட்டது**
- ❖ **நிலப்பிரபுக்களுக்ஆக மேலான தலமைத்துவம் வழங்கப்பட்டது**

139) நிலமானிய அரசு முறைமையில் முதன்மை பெற்று விளங்கிய தொழில்?

- ❖ **விவசாயம்**

140) நிலமானிய அரசு முறைமை வீழ்ச்சியடைவதற்கு ஏதுவாய் அமைந்த காரணிகள் இரண்டிணை தருக?

- ❖ **ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி**
- ❖ **சிலுவைப்போர்,கைத்தொழில் புரட்சி**

141) தேசிய அரசு முறை தோற்றம் பெறுவதற்கு ஏதுவாய் அமைந்த காரணிகள் இரண்டு தருக?

- ❖ **கைத்தொழில் புரட்சி**
- ❖ **முதலாளித்தவத்தின் எழுச்சி**

142) தேசிய அரசின் பிரதான இயல்புகள் இரண்டு தருக?

- ❖ **ஒரு தேசத்திற்கு ஒரு அரசு காணப்படல்**
- ❖ **அரசுகள் ஒவ்வொன்றும் இறைமை அதிகாரத்தின் அடிப்படையில் சமமானவை**

143) தேசிய அரசின் தோற்றத்திற்கு காரணமாக இருந்த அறிஞர்கள் இருவரைத் தருக?

- ❖ **மார்டின் லூதர்**
- ❖ **கல்வின்,நொக்ஸ்**

144) தேசிய அரசின் தோற்றத்திற்கு காரணமாக இருந்த மதசீர்திருத்தம் யாது?

- ❖ **புரட்டஸ்தாந்து சமய சீர்திருத்த இயக்கம்**

145) **"கோல்"** தேசம் என அழைக்கப்பட்ட தேசிய அரசின் பெயர் யாது?

- ❖ **பிரான்ஸ்**

146) ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற தேசிய அரசுகள் இரண்டிணைத் தருக?

- ❖ **பிரித்தானியா**
- ❖ **பிரான்ஸ்**

147) முதன்முதல் தேசிய அரசுகள் தோற்றம் பெற்ற நாடுகள் இரண்டிணை குறிப்பிடுக?

- ❖ **பிரித்தானியா**
- ❖ **பிரான்ஸ்**

148) தேசிய அரசினை அங்கீகரிப்பதற்கான உடன்படிக்கை எத்தனையாம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது?

- ❖ **1648ம் ஆண்டு**

149) தேசிய அரசுகள் எழுச்சியடைவதற்கு ஏதுவாய் அமைந்த காரணிகள் இரண்டிணை குறிப்பிடுக?

- ❖ **தேசிய ஒருமைப்பாடு**
- ❖ **மத்திய தரவ ர்க்கத்தின் தோற்றம்**

150) தேசிய அரசினுள் பொருளாதாரக் காரணி உட்புகுந்ததும் அவ்வரசின் வடிவம் மூன்றாக பிளவடைந்தது அவ்வரசு முறைகளை குறிப்பிடுக?

- ❖ **தலையிடா அரசு**
- ❖ **நலன்புரி அரசு**
- ❖ **குறைந்த பட்ச அரசு**

151) தேசிய அரசிற்கு உரித்தான அடிப்படைக் கூறுகள் எவை?

- ❖ **நிலம்,மக்கள்**
- ❖ **அரசாங்கம்,இறைமை**

152) ஐரோப்பாவில் நிலவிய முடியாட்சிக்கு எதிராக மக்களால் நடாத்தப்பட்ட புரட்சிகளை குறிப்பிடுக?

- ❖ **1688- பிரித்தானிய மான்புறு புரட்சி**
- ❖ **1789- பிரான்ஸிய புரட்சி**
- ❖ **1917- ரஸ்ய புரட்சி**
- ❖ **1776- அமெரிக்கப் புரட்சி**

153) நவீன அரசுகள் என்பதன் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது?

- ❖ **இரண்டாம் உலகப்போரின் பின்னர் குடியேற்ற நாட்டு நிலைமையில் இருந்து சுதந்திரம் பெற்ற ஆசிய,ஆபிரிக்க,இலத்தீன அமெரிக்க நாடுகளே நவீண அரசுகளாகும்**

154) ஆசியாவில் தோற்றம் பெற்ற நவீன அரசுகள் மூன்றினை குறிப்பிடுக?

- ❖ **இலங்கை**

- **இந்தியா**
- **பாகிஸ்தான்**

**155)** ஆபிரிக்காவில் தோற்றம் பெற்ற நவீன அரசுகள் மூன்றினை குறிப்பிடுக?

- **கானா**
- **தன்சானியா**
- **அல்ஜீரியா**

**156)** நவீன அரசின் பிரதான இயல்புகள் இரண்டிணை குறிப்பிடுக?

- **அபிவிருத்தி அடைந்து வரும் தன்மையை கொண்டுள்ளது**
- **சமூகம் பல்வகைத் தன்மையைக் கொண்டதாக இருத்தல்**

**157)** நவீன அரசுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மூன்று தருக?

- **பொருளாதாரம் அபிவிருத்தியடைவதில் பிரச்சினை**
- **அரசியல் ரீதியாக அபிவிரத்தியடையாமை**

**158)** மூன்றாம் உலக நாடுகள் என வர்ணிக்கப்படும் ஆசிய,ஆபிரிக்க நாடுகள் இவ்விரண்டு தருக?

- **ஆசிய நாடுகள்- இலங்கை,இந்தியா,பாகிஸதான்**
- **ஆபிரிக்க நாடுகள்- கானா,தன்சானியா,அல்ஜீரியா**

**159)** மூன்றாம் மண்டல அரசுகள் எனும் வகைப்பாட்டினை மேற்கொண்டவர் யார்?

- **1952ம் ஆண்டு குடித்தொகை ஆய்வாளர் அல்பிறட் சாவி**

## அரசு பற்றிய கோட்பாடுகள்

**160)** தெய்வீகஉரிமைக் கோட்பாடு பற்றி ஆய்வு செய்த ஆய்வாளர்கள் இருவரைத் தருக?

- **செய்ன் ஒகஸ்டின்**
- **தோமஸ் அக்கியூனஸ்**

**161)** தெய்வீக உரிமைக் கோட்பாட்டின் இயல்புகள் இரண்டு தருக?

- **அரசு இறைவனால் படைக்கப்பட்டது,மன்னன் இறைவனின் பிரதிநிதி**
- **மன்னனின் நிர்வாகம் இறைவனின் நிர்வாகமாக காணப்பட்டது**

**162)** தெய்வீகஉரிமைக் கோட்பாட்டின் முக்கியத்துவங்கள் இரண்டு தருக?

- **சமுதாயத்தில் ஐக்கியம்,பலம்,ஒற்றுமையினை கட்டியெழுப்பியது**
- **சமுதாய மனிதர்கள் மத்தியில் கீழ்ப்படிவு பழக்கத்தை கற்றுக்கொடுத்தது**

**163)** தெய்வீஉரிமைக் கோட்பாட்டின் குறைபாடுகள் இரண்டு தருக?

- **விஞ்ஞானத் தன்மையற்ற கற்ப்பணை ரீதியான விளக்கம் அரசிற்கு முன்வைக்கப்பட்டது**
- **மதத்தின் பெயரால் மக்கள் மத்தியில் மூடநம்பிக்கை பரவியமை**

**164)** தெய்வீகஉரிமைக் கோட்பாட்டிற்கு ஆதரவாக கருத்துக்களை வெளியிட்ட சிந்தணையாளர்கள் இருவரைத் தருக?

- **தாண்டே,ஸ்டுவர்ட் மன்னன்**
- **செய்ன் ஒகஸ்டின்,14ம் லூயி மன்னன்**

**165)** கி.பி 1300ம் ஆண்டளவில் ஆண்மீகத்திலும் அரசியலிலும் செல்வாக்கு செலுத்திய பாப்பரசரின் பெயர்?

- **பொனிபொஸ்**

**166)** தெய்வீகஉரிமைக் கோட்பாட்டினை சிறப்பித்துக் கூறும் பிரதான நூலினையும் அதனை எழுதிய ஆசிரியரையும் குறிப்பிடுக?

- **சுதந்திர அரசம் உண்மைச் சட்டங்களும்**
- **1ம் ஜேம்ஸ் மன்னன்**

**167)** தெய்வீகஉரிமைக் கோட்பாட்டின் தோற்றத்திற்கு அடித்தளமாய் அமைந்த காரணிகள் இரண்டிணை குறிப்பிடுக?

- **மதம்**
- **அதிகாரம்**

**168)** “சுதந்திர அரசம் உண்மைச்சட்டங்களும” எனும் நூலில் தெய்வீக அரசு எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது?

- **அரசு இறைவனின் படைப்பு,ஆட்சியாளன் இறைவனின் பிரதிநிதி**
- **அரசினுள் பரம்பரை ரீதியான முடியாட்சி முறை நிலவியது**

- ❖ **ஆட்சியாளன் பதில் சொல்ல வேண்டியது மக்களுக்கல்ல இறைவனுக்கே**

169) தெய்வீகஉரிமைக் கோட்பாடு வழுவிழந்தமைக்கான காரணிகள் இரண்டு தருக?

- ❖ **நவீண சிந்தணையாளர்களின் கருத்துக்கள் வலுப்பெற்றமை**
- ❖ **சமூக ஒப்பந்தக் கோட்பாடு எழுச்சி பெற்றமை**

170) தெய்வீகஉரிமைக் கோட்பாடுடன் தொடர்புடைய இங்கிலாந்து அரசர் யார்?

- ❖ **முதலாம் ஜேம்ஸ் மன்னன்**

171) ஒப்பந்தம் பற்றி சிறப்பித்து கூறும் கீழத்தேச,மேலைத்தேச இலக்கியம் யாது?

- ❖ **அர்த்த சாஸ்திரம்**

172) சமூக ஒப்பந்த கோட்பாடு பற்றி ஆய்வு செய்த ஆய்வாளர்கள் மூவரைக் குறிப்பிடுக?

- ❖ **தோமஸ்கொப்ஸ்**
- ❖ **ஜோன் லொக்**
- ❖ **ஜீன் ஜக்யூ ரூசோ**

173) இங்கிலாந்தைச் சேர்ந்த சமூகஒப்பந்த கோட்பாளர்கள் இருவரைத் தருக?

- ❖ **தோமஸ் கொப்ஸ்**
- ❖ **ஜோன் லொக்**

174) சமூகஒப்பந்தம் பற்றி கூறும் பிரதான நூல்களையும் அதனை எழுதிய ஆசிரியர்களையும் குறிப்பிடுக?

- ❖ **லெவியதன்- தோமஸ் கொப்ஸ்**
- ❖ **சிவில் அரசாங்கத்தின் இரு உடன்படிக்கைகள்- ஜோன் லொக்**
- ❖ **சமூக ஒப்பந்தம்- ஜீன் ஜக்யூ ரூசோ**

175) சமூகஒப்பந்த கோட்பாட்டாளர்கள் மூவரும் முன்வைத்த அரசுமுறைமைகளை குறிப்பிடுக?

- ❖ **தோமஸ் கொப்ஸ்- வரம்பற்ற முடியரசு**
- ❖ **ஜோன் லொக்- வரம்புடைய முடியரசு**
- ❖ **ஜீன்ஜக்யூ ரூசோ- குடியரசு**

176) சமூகஒப்பந்த கோட்பாட்டாளர்கள் சமுதாயத்தினை இருபெரும் பிரிவுகளாக பாகுபடுத்தியுள்ளனர் அவ்விரு பிரிவுகளையும் குறிப்பிடுக?

- ❖ **இயற்கைச் சமூகம்**
- ❖ **சிவில் சமூகம்**

177) தோமஸ் கொப்ஸ் கூறிய இயற்கை சமூகத்தில் மனிதனிடம் காணக்கூடிய இயல்புகள் இரண்டு தருக?

- ❖ **மனிதன் காட்டு மிராண்டிதனமாக வாழ்ந்தான்**
- ❖ **சுயநல பண்புடையவனாகவும்,குழப்பங்களை உண்டு பண்ணுபவர்களாகவும் இருந்தனர்**

178) ஜோன் லொக் கூறிய இயற்கை சமூகத்தில் மனிதனிடம் காணக்கூடிய இயல்புகள் இரண்டு தருக?

- ❖ **மனிதன் விட்டுக்கொடுப்பவராக,நல்லெண்ணம் கொண்டவராக வாழ்ந்தனர்**
- ❖ **மனிதன் சுதந்திரமாகவும் சமத்துவத்துடனும் வாழ்ந்தனர்**

179) ரூசோவின் பொதுவுடமைக் கோட்பாட்டை செயற்படுத்தும் சாதனங்கள் இரண்டு தருக?

- ❖ **குடியொப்பம்**
- ❖ **பொதுஜன அபிப்பிராயம்**

180) ரூசோவின் சமூக ஒப்பந்தத்தில் பங்கு கொள்ளும் பங்குதாரர்கள் யாவர்?

- ❖ **ஆட்சியாளன்**
- ❖ **பொதுமக்கள்**

181) லொக்கின் கருத்துப்படி அதிகாரப்பிரிப்பு எவ்வாறு நடைமுறைப்படுத்தப் படுகின்றது?

- ❖ **ஆதிகாரம் ஆட்சியானுக்கும் மக்களுக்கும் இடையே ஒப்பந்தத்தின் மூலம் பிரிக்கப் படுகின்றது**

182) ரூசோவின் கருத்துக்களின் விளைவாக தோற்றம் பெற்ற ஜனநாயக ரீதியான கோட்பாடுகள் இரண்டினை குறிப்பிடுக?

- ❖ **மக்கள் இறைமை கோட்பாடு**
- ❖ **பொதுச் சித்தம்**

183) லொக் அரசாங்கங்கத்தை எவ்வாறு வகைப்படுத்தியுள்ளார்?

- ❖ **இயற்கைச் சமூகம்**
- ❖ **சிவில் சமூகம்**

184) ரூசோவின் கருத்துப்படி தோற்றம் பெற்ற அரசு மேற்கொள்ளும் பிரதான பணிகள் இரண்டு தருக?
- **மக்களின் பொது நல சோவைகளை மேற்கொள்ளல்**
- **பொது மக்களின் கேள்விகளுக்கு பொறுப்பு கூறல்**

185) சமூகஒப்பந்த கோட்பாட்டின் நன்மைகள் இரண்டு தருக?
- **கொடூரமான வாழ்கை முறை நிலவிய இயற்கை சமுதாயம் முடிவுகட்டப்பட்டது**
- **ஒப்பந்தம் மேற்கொள்வதன் விளைவாக மக்களின் அரசியல் அறிவு வளர்சியடைந்தது**

186) சமூகஒப்பந்த கோட்பாட்டின் குறைபாடுகள் இரண்டு தருக?
- **சமூக ஒப்பந்த கோட்பாடளர்களின் கருத்துக்கள் வேறுபட்டு காணப்பட்டது**
- **இயற்கை நிலை சித்தரிப்பு வெவ்வேறுபட்ட தன்மையுடையதாக சித்தரிக்கப்பட்டது**

187) தாராண்மைவாதம் எனும் சிந்தனை டுஜடீசுவுலு,டுஜடீநுசுயுடுஜவுலு எனும் கிரேக்க மொழிச் சொற்களின் விளைவாகும் இதன் பொருள் யாது?
- **LIBERTY- தனிமனித சுதந்திரம்**
- **LIBERALITY- தாராளம்**

188) ஆரம்பகால தாராண்மைவாதிகள் இருவரைக் குறிப்பிடுக?
- **ஜோன் லொக்**
- **அடம்ஸ்மித்,டேவிட்றிக்கார்டோ**

189) தாராண்மைவாத சிந்தணை வலுப்பெறுவதற்கு ஏதுவாய் அமைந்த முக்கிய புரட்சிகள் மூன்றினைக் குறிப்பிடுக?
- **1688- பிரித்தானிய புரட்சி**
- **1789- பிரான்ஸிய புரட்சி**
- **1776- அமெரிக்கப் புரட்சி**

190) பிரான்ஸிய புரட்சியுட்ன் தொடர்புடைய சிந்தணையாளர்கள் இருவரைக் குறிப்பிடுக?
- **ரூசோ**
- **மொன்டஸ்கியூ**

191) பழைய தாராண்மைவாதம் என்பதன் பொருள் யாது?
- **எல்லோரதும் நன்மையினை பேணத்தக்க வகையில் ஏற்படுத்தப்பட்ட பாரிய பொதுநல தாபனமே அரசு**

192) நவீண தாராண்மைவாதத்தின் இயல்புகள் இரண்டு தருக?
- **அரசின் பணிகளை குறுகியதாக்கியது**
- **அரசு முகாமையாளனாக செயற்படல்**

193) தாராண்மைவாத அரசின் பிரதான இயல்புகள் இரண்டு தருக?
- **அரசு பொது நலன் பேணும் தாபனம்**
- **அரசுமக்களின் பொது விருப்பின் அடிப்படையில் தோற்றம் பெற்ற தாபனம்**

194) தாராண்மைவாத அரசு சிறப்பாக செயற்படுவதற்கு தேவையான நிபந்தணைகள் இரண்டு தருக?
- **சட்டத்தின் ஆட்சி நிலவுதல்**
- **நீதித்துறை சுதந்திரம் நிலவுதல்**

195) தராண்மைவாத அரசின் நன்மைகள் இரண்டு தருக?
- **மக்களின் அதிகபட்ச தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டது**
- **மக்கள் இறைமை உருதிப்படுத்தப்படல்**

196) தாராண்மைவாத அரசின் பிரதான குறைபாடுகள் இரண்டு தருக?
- **தனியார் சொத்துரிமையால் முதலாளிகள் எழுச்சி பெறல்**
- **பொருளாதாரத்தில் அரசின் மிதமிஞ்சிய தலையீட்டால் பொருளாதார நெருக்கடி**

197) தாராண்மைவாத அரசினுள் பொருளாதாரக் காரணி உள்வாங்கப்பட்டதும் அரசின் வடிவங்கள் மாற்றமடைந்தன அவ்வரசின் வடிவங்களை குறிப்பிடுக?
- **தலையிடா அரசு**
- **நலன்புரி அரசு**
- **குறைந்தபட்ச அரசு**

198) தலையிடா அருசு முறையின் பிரதான இயல்புகள் இரண்டு தருக?
- **பொருகாதாரத்தின் அரசின் தலையிடாத் தன்மை**
- **அரசு சட்டத்தையும்,ஒழுங்கையும் நிலைநாட்டும் தாபனம்**

199) தலையிடா அரசு முறைக்கு வழங்கப்படும் சிறப்பு பெயர்கள் இரண்டினை குறிப்பிடுக?
- ❖ **பொலிஸ் அரசு**
- ❖ **இரவுக்காவலாளி**

200) தலையிடா அரசு முறைமையின் பரதான குறைபாடுகள் இரண்டு தருக?
- ❖ **சமுதாயத்தில் பாட்டாளி மக்கள் புறந்தள்ளப்பட்டனர்**
- ❖ **முதலாளித்துவ சமுதாயத்தின் ஆதிக்கம் பெருகிக் காணப்பட்டது**

201) நலன்புரி அரசின் தோற்றத்திற்கு ஏதுவாய் அமைந்த காரணிகள் இரண்டினை குறிப்பிடுக?
- ❖ **கம்யூனிசத்தின் எழுச்சி,மக்களின் தேவைப் பெருக்கம்**
- ❖ **கைத்தொழில் புரட்சியின் விளைவால் பலம் பொருந்திய பாட்டாளி வர்க்கம் தோற்றம் பெற்றமை**

202) நலன்புரி அரசு மேற்கொள்ளும் பாரிய பணிகள் இரண்டினை குறிப்பிடுக?
- ❖ **பொருளாதார முகாமைத்துவ முகவராக அரசு செயற்படல்**
- ❖ **பொது மக்களுக்கு பல்வேறு நலண்புரி சேவைகளை மேற்கொள்ளல்**

203) நலன்புரி அரசின் பிரதான இயல்புகள் இரண்டு தருக?
- ❖ **அரசு பொருளாதாரத்தில் நேரடியாக தலையிடுதல்**
- ❖ **அரசு கொடையாளியாகவும் முதலீட்டாளனாகவும் செயற்படல்**

204) நலன்புரி அரசினால் அரசறிவியல் பாடத்திட்டத்தினுள் நுழைந்து கொண்ட முக்கிய விடயம் யாது?
- ❖ **பொதுநல அரசு**

205) தலையிடா அரசு பற்றி ஆய்வு செய்த அரசியல்,பொருளியல் கோட்பாட்டாளர்கள் யாவர?
- ❖ **அரசியல்- ஜோன்லொக்**
- ❖ **பொருளியல்- அடம்ஸ்மித்**

206) தலையிடா அரசுமுறைமையினை சிறப்பித்து கூறும் பிரதான நூல்கள் அரண்டினையும் அவற்றின் ஆசிரியர்களையும் குறிப்பிடுக?
- ❖ **சிவில் அரசாங்கத்தின் இரு உடன்படிக்கைகள்**
- ❖ **தேசங்களின் செல்வம்**

207) குறைந்தபட்ச அரசு கொள்கை எழுச்சியடைந்த காலப்பகுதினை குறிப்பிடுக?
- ❖ **1970இன் பின்னர்**

208) குறைந்தபட்ச அரசு பற்றிய சிந்தணைக்கு சட்ட அந்தஸ்த்து வழங்கிய தத்துவம் யாது?
- ❖ **மில்டன் பிரீட்மனின் "முதலாளித்துவமும் சுதந்திரமும்"எனும் தத்துவம்**

209) குறைந்தபட்ச அரசுக் கொள்கையினை பின்பற்றிய நாடுகள் இரண்டினை குறிப்பிடுக?
- ❖ **பிரித்தானியா**
- ❖ **அமெரிக்கா**

210) குறைந்த பட்ச அரசுக் கொள்கை தோற்றம் பெற ஏதுவாய் அமைந்த காரணிகள் இரண்டு தருக?
- ❖ **அரசிற்கு பொருளாதார நெருக்கடிநிலை உருவாகிமை**
- ❖ **அரச நிறுவனங்களின் வங்குளோத்து நிலை அதிகரித்தமை**

211) குறைந்தபட்ச அரசின் பரதான இயல்புகள் இரண்டு தருக?
- ❖ **உற்பத்தி பங்கீடு போன்ற விடயங்களில் அரசு தனியாருக்கும் வாய்ப்புக்களை வழங்கியது**
- ❖ **அரசு தனது சேவைகளை சுருக்கிக்கொள்வதுடன் குறைந்தபட்ச தலையீட்டையும் மேற்கொள்கின்றது**

212) விஞ்ஞான பூர்வமானதும் புரட்சிகரமானதுமான சோசலிச கோட்பாட்டை முன்வைத்தவர் யார்?
- ❖ **காள்மாக்ஸ்**

213) மாக்சீயவாத கோட்பாட்டின் முன்னோடியாகத் திகழ்ந்த சிந்தணையாளர் யார்?ஏன் அவ்வாறு கருதப்படுகின்றார்?
- ❖ **காள்மாக்ஸ்**
- ❖ **காள்மாக்ஸின் பின்னர் பலர் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.**

214) காள்மாக்ஸினால் எழுதப்பட்ட நூல்கள் இரண்டினைத் தருக?
- ❖ **மூலதனம் (தாஸ்கப்பிட்டால்)**
- ❖ **தத்துவத்தின் வறுமை**

215) காள்மாக்ஸினால் குறிப்பிடப்பட்ட வர்க்கப்பிரிவுகள் இரண்டினை குறிப்பிடுக?
- ❖ **பொருளாதாரம் உடைய வர்க்கம்**
- ❖ **பொருளாதாரம் அற்ற வர்க்கம்**

216) மாக்சிசம் எனும் சர்வலோகக் கோட்பாட்டினை முன்வைத்தவர் யார்?

- ❖ **காள்மாக்ஸ்**

217) வர்க்கப்போர் என்றால் என்ன?

- ❖ **ஒன்றிற்கொன்று முரண்பட்ட இரண்டு வர்க்கங்களுக்கு இடையில் இடம்பெறும் முரண்பாடே வர்க்கப்போர் எனப்படும்**

218) மிகை மதிப்பு என்பதன் பொருள் விளக்கம் யாது?

- ❖ **தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தை காட்டிலும் முதலாளிகள் அதிக இலாபம் ஈட்டிக்கொள்வது ஆகும்**

219) சோசலிச சமூகத்திற்கு வழங்கப்படும் வேறு சிறப்புப் பெயர்கள் இரண்டு தருக?

- ❖ **கம்யூனிச சமூகம்**
- ❖ **பொதுவுடைமை சமூகம்,சமதர்ம சமூகம்**

220) முதலாளித்துவ சமுதாயத்தின் நோக்கங்கள் இரண்டு தருக?

- ❖ **கூடிய வேலை நேரம்,குறைந்தளவான கூலி வழங்குதல்**
- ❖ **அதிக இலாபம் ஈட்டுதல்**

221) தொழிலாளர் சமுதாயத்தின் நோக்கங்கள் இரண்டு தருக?

- ❖ **குறைந்களவான வேலைநேரம்,அதிக சம்பளம்**
- ❖ **பாட்டாளிகளின் உரிமைகளுக்கு உறுதியான பாதுகாப்பு**

222) மதம் பற்றி காள்மாக்ஸ் குறிப்பிட்ட கருத்துக்களை தெளிவுபடுத்துக?

- ❖ **மதம் மனிதனை உருவாக்குவதில்லை மனிதனே மதத்தை உருவாக்குகின்றான்.இது பணக்கார வர்க்கத்தின் படைப்பாகும்.இதயமற்ற உலகின் உணர்ச்சி இது மக்களின் போதைப்பொருள்.**

223) இயங்கியற் பொருள் முதல்வாதத்தில் இடம் பெறும் மூன்று கோள்களும் எவை?

- ❖ **முதல் கோள்**
- ❖ **முரண் கோள்**
- ❖ **முற்றுக் கோள்**

224) தொழிலாளர்களை ஒடுக்குவதற்காக முதலாளிகள் பயன்படுத்திய அடக்குமுறைக் கருவிகள் இரண்டினைத் தருக?

- ❖ **பொலிஸ்,இராணுவம்**
- ❖ **சிறைச்சாலை**

225) காள்மாக்ஸின் கோட்பாட்டிற்கு செயல் வடிவம் கொடுத்த இரு அறிஞர்களை குறிப்பிடுக?

- ❖ **லெனின்**
- ❖ **மா ஓ சேதுங்**

226) மாக்சிச அரசின் எதிர்காலம் பற்றி காள்மாக்ஸ் எவ்வாறு சித்தரித்துள்ளார்?

- ❖ **"வர்க்கங்கள் தோன்றிய போது தோற்றம் பெற்ற அரசு அவ்வர்க்க நலனுக்காக பாடுபட்டு வர்க்கங்கள் அழியும் போது வாடி மடிந்து உதிர்ந்து விடும்"**

227) இயக்கவியல் தத்துவத்தை உருவாக்கியவர் யார்?

- ❖ **கெகல்**

228) கோள் என்பதன் விளக்கம் யாது?

- ❖ **வரலாற்று ரீதியாக தோற்றம் பெற்ற ஒவ்வொரு சமூகத்தினையும் கோள் என அழைப்பர்**

229) காள்மாக்ஸினால் வகைப்படுத்தப்பட்ட சமுதாய கட்டமைப்புக்களை பட்டியற் படுத்துக?

- ❖ **ஆதிகால கம்யூனிசம்**
- ❖ **ஆண்டான் அடிமைச் சமூகம்**
- ❖ **நிலமானிய முறைச் சமூகம்**
- ❖ **முதலாளித்துவ சமூகம்**
- ❖ **சோசலிச சமூகம்**
- ❖ **நவீண கம்யூனிச சமூகம்**

230)சோசலிச அரசின் பிரதான இயல்புகள் இரண்டினை தருக?

- ❖ **பொருளதாரத்தில் பொதுவுடைமை நிலவுதல்**
- ❖ **பாட்டாளி மக்களின் சர்வாதிகார ஆட்சி இடம்பெறல்**

231)1917ம் ஆண்டு ஏற்ப்பட்ட புரட்சியினை எவ்வாறான நாமங்களில் அழைப்பர்?

- ❖ **ரஸ்ய புரட்சி**

- **கம்யூனிச புரட்சி**
- **லெனினிச புரட்சி**

232) காள்மாக்ஸ் கூறிய பொதுவுடமைச் சமூகம் காணப்படும் நாடுகள் இரண்டினை குறிப்பிடுக?
- **ரஸ்யா**
- **கியூபா**
- **சீனா,ருமேனியா**

233) முதலாளித்துவ சமுதாயத்தின் தோற்றத்திற்கு ஏதுவாய் அமைந்த காரணிகள் இரண்டு தருக?
- **கைத்தொழில் புரட்சி,புதிய இயந்திரங்களின் கண்டு பிடிப்பு**
- **தொழிற்சாலைகள் போககுவரத்து தொழிநுட்பம் அபிவிருத்தியடைந்தமை**
- **அரசு முதலாளிகளுக்கு சாதகமாக முன்னோக்கிச் சென்றமை**

234) பூஸ்வாக்கள் வர்க்கத்தினரின் இரு பெரும் பிரிவுகளை குறிப்பிடுக?
- **மிகைச் செல்வம் மிக்க பூஸ்வாக்கள்**
- **சிறிய பூஸ்வாக்கள்**

235) தனிக்கட்சி ஆதிக்கம் நிலவுகின்ற சோசலிச நாடுகள் இரண்டு தருக?
- **சீனா**
- **கியூபா**

236) விஞ்ஞான சோசலிசத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
- **காள்மாக்ஸ்**

237) மாக்சிச கொள்கையினை அடியொற்றிய இரு பிரதான சோசலிச கொள்கையினை குறிப்பிடுக?
- **லெனினிசம்**
- **மாவோயிசம்**

238) சோசலிச அரசுக் கொள்கையின் பிரதான குறைபாடுகள் இரண்டு தருக?
- **தனியார் அல்லது முதலாளிகளின் சுதந்திரமான செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்படல்**
- **பொருளாதாரம் அரசுடமையாக இருப்பதனால் இலஞ்ஞும்,ஊழல் போன்ற மோசடிகள் இடம்பெற வாய்ப்புண்டு**

239) 16ம்,17ம்,18ம் நூற்றாண்டு காலப்பகுதிகளில் கைத்தொழில் புரட்சி இடம்பெற்ற நாடுகளை முறையே குறிப்பிடுக?
- **16- நெதர்லாந்து**
- **17- இங்கிலாந்து**
- **18- பிரன்ஸ்**

240) பிரான்ஸிய புராட்சியின் முக்கிய மூன்று கோசங்களையும் அடையாளப் படுத்துக?
- **சுதந்திரம்**
- **சமத்தவம்**
- **சகோதரத்துவம்**

241) பாசிஸ ஆட்சிமுறைமை முதன்முதல் தோற்றம் பெற்ற நாடுகள் இரண்டினை குறிப்பிடுக?
- **பிரான்ஸ்,இலத்தீன் அமெரிக்கா**
- **ஆனால் பாசிஸம் முழுமையான வடிவத்துடன் இத்தாலி,ஜேர்மன் போன்ற நாடுகளிலேயே தோற்றம் பெற்றது.**

242) 1922,1933 ஆகிய காலப்பகுதிகளில் பாசிஸ ஆட்சிமுறைமை தோற்றம் பெற்ற நாடுகளை குறிப்பிடுக?
- **1922- இத்தாலி**
- **1933- ஜேர்மன்**

243) பாசிஸ அரசு முறையினை சிறப்பித்து கூறும் நூல்கள் இரண்டினை தருக?
- **த மெயின் கேம் (எனது போராட்டம்)**
- **இத்தாலிய களைக் களஞ்சியம்**

244) பாசிஸ அரசில் ஆட்சியாளனிடம் காணக்கூடிய நடத்தைசார் இயல்புகள் இரண்டினை குறிப்பிடுக?
- **யுத்தத்தின் மீது நாட்டம் கொண்டவராக விளங்கினர்**
- **ஆக்கிரமிப்பு தன்மை உடையவர்களாக விளங்கினர்**

245) பாசிஸ அரசின் பிரதான இயல்புகள் இரண்டு தருக?
- **யுத்தத்தின் விளைவாகவே அரசு தோற்றம் பெறல்**
- **சர்வாதிகார ஆட்சிமுறைமை நிறைந்திருத்தல்**

246) முசோலினியின் பாசிஸத்தினதும் கிட்லரின் நாசிஸத்தினதும் பிரதான வேறுபாட்டைத் தருக?
- ❖ **பாசிஸம்- தேசியவாதம்**
- ❖ **நாசிஸம்- இனவாதம்**

247) பாசிஸத்திற்கும் ஜனநாயகத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டு தருக?
- ❖ **பாசிஸத்தில் இறுதி தீர்மானம் எடுக்கும் அதிகாரம் ஆட்சியாளனிடம் காணப்படும் ஜனநாயகத்தில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் க்களிடம் காணப்படும்**
- ❖ **பாசிஸத்தில் மக்களது உரிமைகள் சுதந்நிரம்மறுக்கப்பட்ட நிலையில் காணப்படும் ஆனால் ஜனநாயகத்தில் மக்களின் உரிமைகள் சுதந்திரம் உறுதிப்படுத்தப்படும்**

248) பாசிஸத்திற்கும் சோசலிசத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டு தருக?
- ❖ **பாசிஸம் தனியார் சொத்துரிமையினை ஏற்றுக்கொள்ள சோசலிசம் பொதுவுடைமையினை ஏற்றுக்கொள்கின்றது**
- ❖ **பாசிஸம் சமத்துவத்திற்கு எதிரதன ஓர் ஆட்சிமுறையாக விளங்க சோசலிசம் சமத்துவத்தை அடித்தளமாகக் கொண்ட ஓர் ஆட்சி முறையாகும்**

249) பாசிஸ அரசு நிராகரிக்கும் விடயங்கள் இரண்டிணை குறிப்பிடுக?
- ❖ **ஜனநாயகம்**
- ❖ **சோசலிசம்**

250) பாசிஸ அரசின் தாரக மந்திரம் யாது?
- ❖ **“எல்லாம் அரசிற்குள்ளேயே அரசிற்கு வெளியானதும் வேறானதும் எதுவுமில்லை”**

251) பாசிஸ அரசில் ஆட்சியாளர்களின் உபதேசங்கள் எவை?
- ❖ **நம்பு,கீழ்ப்படி,போர்புரி**

252) முதலாம் உலகப்போரின் பின்னர் ஜேர்மன் எதிர்நோக்கிய சவால்கள் இரண்டு தருக?
- ❖ **வேர்சாய் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டமை**
- ❖ **வெற்றி பெற்ற நாடுகளுக்கு பெரும்தொகைப் பணத்திணைநஸ்ட ஈடாக செலுத்தியது**

253) பாசிஸ ஆட்சியாளர்களான முசோலினி,கிட்லர் ஆகியோரால் ஸ்தாபிக்கப்பட்ட அரசியற்கட்சிகளை குறிப்பிடுக?
- ❖ **கிட்லர்- நாஜிக்கட்சி**
- ❖ **முசோலினி- பாசிஸ கட்சி**

254) ஜேர்மனிய அரசிற்கு இழுக்கை ஏற்படுத்தக்கூடிய ஆட்சிமுறைமை எது?
- ❖ **வைமர் எனப்படும் கூட்டாட்சிமுறை**

255) கிட்லர் குறிப்பிடும் கலப்பற்ற துாய ஆரியர் இனம் எது?
- ❖ **நோர்டிக் இனம்**

256) பாசிஸ அரசில் பொது மக்களின் நிலை எவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ளது?
- ❖ **அரசுக்கு எதிராக கேள்விளை கேட்க முடியாது**
- ❖ **அரசுக்காக தமது உரிமைகளை தியாகம் செய்தல் வேண்டும்**

257) பாசிஸ அரசு முற்றாக எதிர்கும் ஜனநாயக கோட்பாடுகள் இரண்டு தருக?
- ❖ **தாராண்மைவாத கோட்பாடு**
- ❖ **மாக்சிஸவாத சோசலிச கோட்பாடு**

258) கிட்லர் ஆரிய இனத்தின் மேன்மைக்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் இரண்டு தருக?
- ❖ **பல இலட்சக் கணக்கான யூதர் இனமக்களை நச்சு வாயூட்டி கொலை செய்தார்**
- ❖ **கலப்பு இரத்தத்தினால் உருவானது யூதர் இனம் என இழிவு படுத்தி நாட்டில் இருந்து அவர்களை வெளியேற்றினார்**

259) ஜேர்மனிய இராணுவம் கிட்லருக்கு வழங்கிய உயர்விருது யாது?
- ❖ **“இரும்புச் சிலுவை”**

260) கிட்லர் ஜேரமனிய அரசாங்க முறையில் பொறுப்பேற்றுக்கொண்ட முக்கிய அரச பதவிகள் இரண்டு தருக?
- ❖ **சான்சளர் (பிரதமர்)**
- ❖ **ஜனாதிபதி**

261) படிமுறை வளர்ச்சி கோட்பாட்டிற்கு வழங்கப்படும் வேறு சிறப்பு பெயர்கள் இரண்டு தருக?
- ❖ **வரலாற்றுக் கோட்காடு**
- ❖ **சமூக அபிவிருத்தி கோட்பாடு**

262) படிமுறைவளர்ச்சி போட்பாடு பற்றி ஆய்வு செய்த ஆய்வாளர்கள் இருவரை தருக?

❖ **கார்ணர் - கெட்டல்,வேக்ஸ்**

**263)** படிமுறை வளர்ச்சி கோட்பாட்டின் படி அரசின் தோற்றத்தில் தாக்கம் செலுத்தும் காரணிகள் இரண்டு தருக?

❖ **இரத்த உறவு**

❖ **மதம்,போர்**

**264)** மதத்தின் ஆதிக்கம் அரசியலில் காணப்படுகின்றது என்பதற்கு எடுத்துக்காட்டாக உள்ள நாடுகள் இரண்டிணை தருக?

❖ **தென் ஆசிய நாடுகள்**

❖ **தென்கிழக்காசிய நாடுகள்**

❖ **மத்திய கிழக்காசிய நாடுகள்**

**265)** தந்தைவழி கோட்பாட்டினை முதன்மைப்படுத்தியவர் யார?

❖ **சேர்.கென்றி மெயின்**

**266)** தந்தைவழி கொட்பாட்டினை சிறப்பித்து கூறும் நூல்கள் இரண்டிணையும் அதன் ஆசிரியர்களையும் குறிப்பிடுக?

❖ **புராதன சட்டம்**

❖ **நிறுவனங்களின் ஆரம்பகால வரலாறு**

**267)** தந்தைவழி கோட்பாட்டினை ஆய்வுசெய்த ஆய்வாளர்கள் இருவரைத் தருக?

❖ **கென்றி மெயின்**

❖ **ஜெங்ஸ்**

**268)** தந்தைவழி கோட்பாட்டில் ஆண்களின் நிலை எவ்வாறு சித்தரிக்கபட்டுள்ளது?

❖ **ஆண்களின் கைகளிலேயே அதிகாரம் குவிக்கப்பட்டுள்ளது**

❖ **இறுதி முடிவு ஆண்களினாலேயே எடுக்கப்படுகின்றது**

**269)** தாய்வழி கோட்பாடு பற்றி ஆய்வு செய்த ஆய்வாளர்கள் இருவரைத் தருக?

❖ **மெக்லெனன்**

❖ **மோர்கன்**

**270)** தாய்வழி கோட்பாட்டுடன் நெருங்கிய தொடர்புடைய நாட்டைக் குறிப்பிடுக?

❖ **அவுஸ்திரேலியா**

**271)** தாய்வழிக் கோட்பாட்டில் பெண்களின் நிலை எவ்வாறு சித்தரிக்கப் பட்டுள்ளது?

❖ **அதிகாரம் பெண்களின் கைகளிலேயே குவிக்கப்பட்டிருக்கும்**

❖ **குடும்பத்தில் இறுதி முடிவு பெண்களாலேயே மேற்க்கொள்ளப்படும்**

**272)** தாய்வழிக் கோட்பாட்டில் பெண்களுக்கு உரித்தான அதிகாரங்கள் இரண்டு தருக?

❖ **திருமண உறவினைத் தீர்மானித்தல்**

❖ **வாரிசு உரிமையினை தீர்மானித்தல்**

**273)** பலவந்தக் கோட்பாட்டின் படி அரசின் தோற்றத்திற்கு அடித்தளமாய் அமைந்த காரணிகள் இரண்டிணைக் குறிப்பிடுக?

❖ **யுத்தம்**

❖ **அதிகாரம்**

**274)** பலவந்தக்கோட்பாட்டின் கருப்பொருள் யாது?

❖ **யுத்தம்**

**275)** பலவந்தக்கோட்பாட்டினை ஆதரித்த சிந்தணையாளர்கள் இருவரைத் தருக?

❖ **லீக்கொக்**

❖ **கியூம்**

**கூற்றுக்களும் அதனை கூறிய சிந்தணையாளர்களும்**

1. ‘‘அரசன் தெய்வீக உரிமைப்படியே ஆட்சி புரிகின்றான’’ **(ப்பூற்செற்ட்)**
2. ‘‘இறைவனிடம் இருந்து வருகின்ற அதிகாரத்தை பிரஜைகள் ஏற்றுக்கொள்ள வேண்டும’’ **(சென் போல்)**
3. ‘‘ஆட்சியாளன் இறைவனுக்கும் தனது மனசாட்சிக்கும் கட்டுப்பட்டவனே ஒழிய மக்களுக்கு அல்ல’’ **(செய்ன் ஒகஸ்டின்)**

4. ‘‘இயற்கையில் மனிதன் சுயநலம் மிக்கவன் பேராசையுள்ள ஆக்கிரமிப்பாளன்’’ **(தொமஸ் கொப்ஸ்)**
5. ‘‘பொது விருப்பின் அடிப்படையில் பிறந்த ஸ்தாபனம் அரசு’’ **(ரூசோ)**
6. ‘‘மக்களிடம் வழங்கப்பட்ட அதிகாரம் மாற்ற முடியாதது,பிரிக்க முடியாதது’’ **(ரூசோ)**
7. ‘‘நீங்கள் அனைவரும் மன்னர்கள்’’ **(ரூசோ)**
8. ‘‘மனிதன் பிறக்கும் போது சுதந்திரமாக பிறக்கின்றான பின்னர் அடிமைச் சங்கிலியால் பிணைக்கப்படுகின்றான்’’ **(ரூசோ)**
9. ‘‘தவறுகள் செய்தவனை மன்னிக்கலாம் துரோகம் செய்தவனை மன்னிக்க முடியாது’’ **(ரூசோ)**
10. ‘‘உரிமைகள் இயற்கைச் சட்டத்தின் மூலம் பாதுகாக்கப்படுகின்றது’’ **(ஜோன் லொக்)**
11. ‘‘மனித வாழ்வு வேதனை,மகிழ்ச்சி எனும் இரு எஜமான்களின் கட்டுபாடுகளுக்கு உட்பட்டது’’ **(ஜெரமி பென்தம்)**
12. ‘‘முதலாளித்துவத்தின் முகமூடியே ஜனநாயகம் ஜனநாயகம் வெறும் பாசாங்கு’’‘‘மனிதன் ஓர் உழைக்கும் விலங்கு’’ முதலாளித்துவம் தனது அழிவுக்கான வித்துகளை கொண்டுள்ளது’’ பழைய சமூகுத்துதீல் இருந்து புதிய சமூகம் பிறப்பதற்கு புரட்சி எனும் மருந்து பயன்படுகின்றது’’ **(காள்மாக்ஸ்)**
13. ‘‘உலகத் தொழிராளர்களே ஒன்று படுங்கள் நீங்கள் இழப்பதற்கு கை விலங்குகளைத்தவிர வேறு ஒன்றுமில்லை’’ **(காள்மாக்ஸ்)**
14. ‘‘வர்க்கங்கள் தோன்றிய போது உருவான அரசு அவ்வர்க்க நலனுக்காக பாடுபட்டு வர்க்கங்கள் அழியும் போது வாடி மடிந்து உதிர்ந்து விடும்’’ **(கால்மாக்ஸ்)**
15. ‘‘போர் தனது தலை சிறந்த நண்பன்’’‘‘பாராளுமன்றம் என்பது பேசும் கடை’’‘‘சமாதானம் என்பது கோழைகளின் கூக்குரல்’’‘‘எனது நிகழ்ச்சி பேச்சல்ல செயல்’’ **(முசாலினி)**
16. ‘‘ஆண்களின் கடமை போர் புரிதல் பெண்களின் கடமை மகப்பேறு’’ **(முசோலினி)**
17. ‘‘ஒரு பொய்யை ஆயிரம் தடவை சொன்னால் மெய்’’‘‘கலை என்று கூறும் போது என் கண் முன்னால் துப்பாக்கி சுழல்கின்றது’’ **(கிட்லர்)**
18. ‘‘எல்லாம் அரசிற்குள்ளேயே இருக்கிறது அரசிற்கு எதிராகவும் வெளியிலும் எதுவும் இல்லை’’ சமாதானமாக வாழ்நாள் முழுவதும் வாழ்வதை விட போர்களத்தில் செலவிடும் ஒரு நிமிடம் மேலானது’’ ‘‘யுத்தம் செய்ய முடியாத நாடுகள் அனைத்தும் தேங்கி நிற்கும் நீருக்குச் சமன்’’ **(முசோலினி)**
19. ‘‘ஒவ்வொரு மனித சமுதாயத்தினதும் அடிப்படை பலமாகும்’’ **(ஆகஸ்ட் கொம்டே)**
20. ‘‘மனித ஆக்கிரமிப்பில் இருந்து வந்ததே அரசாங்கமாகும்’’ **(லீக்கொக்**)

## நூல்களும் அவற்றை எழுதிய ஆசிரியர்களும்

276) மாக்சிசமும் அரசியலும் **(மில்பண்ட்)**
277) தொகுக்கப்பட்டபத்திரிகைகள் **(மெயிட்லண்ட்)**
278) அரசியலின் விஞ்ஞானம் **(ஆமோஸ்)**
279) அரசியல் நடத்தைபற்றிய கல்வி**(பட்லர்)**
280) அரசியல் முறைமையும் விஞ்ஞானமும் **(ஜோர்ஜ் கெட்லின்)**
281) அரசியலின் தன்மை**(மில்லர்)**
282) ஆங்கில அரசியற் கோட்பாடு**(ஐவர் பிரௌன்)**
283) அரசியல் அதிகாரத்தின் ஒழுக்க அடிப்படைகள் **(வில்லோபி)**
284) அரசியல் அதிகாரமும் அதன் உள்ளடக்கமும் **(சாள்ஸ் மெரியம்)**
285) இங்கிலாந்தின் அரசியல் சிந்தனை **(பார்கர்)**

## இறைமை அதிகாரம்

286) இறைமை அதிகாரம் பற்றி ஆய்வு செய்த முன்னோடி ஆய்வாளர்கள் இருவரைத் தருக?
- ❖ **ஜோன்ஒஸ்ரின்**
- ❖ **ஜீன்போடின்**

287) இறைமை அதிகாரத்தை சிறப்பித்து கூறும் நூல்கள் இரண்டையும் அவற்றை எழுதிய ஆசிரியர்களையும் குறிப்பிடுக?
- ❖ **ஜோன்ஒஸ்ரின்- சட்டவியலுக்கான சொற்பொழிவுகள்**
- ❖ **ஜீன்போடின்- குடியரசு பற்றிய ஆறு நூல்கள்**

288) இறைமை அதிகாரத்தின் இருபெரும் பிரிவுகளைக் குறிப்பிடுக?
- ❖ **உள் இறைமை**
- ❖ **வெளி இறைமை**

289) இறைமை அதிகாரத்தின் சிறப்பு பண்புகள் இரண்டினை குறிப்பிடுக?
- ❖ **அரசிற்கே உரித்தான அதிகாரம்**
- ❖ **வரம்பற்றது,பிரிக்கமுடியாதது,எல்லையற்றது**

290) இறைமை அதிகாரம் பற்றிய ஒருமுகக் கோட்பாட்டாளர்கள் இருவரைத் தருக?
- ❖ **ஜோன் ஒஸ்ரின்**
- ❖ **தோமஸ் கொப்ஸ்**

291) இறைமை அதிகாரம் பற்றிய பண்முகக் கோட்பாட்டாளர்கள் இருவரைத் தருக?
- ❖ **ஓட்டோ கீர்க்**
- ❖ **மேயிற்லண்ட**

292) தற்காலத்தில் இறைமை வழுவிழந்தமைக்கான காரணிகள் இரண்டு தருக?
- ❖ **தற்கால அரசியல் சூழ்நிலை**
- ❖ **சர்வதேச சட்டங்கள்,சர்வதேச முகவராண்மை நிறுவனங்கள்**

293) அக இறைமையை பாதிக்கும் காரணிகள் இரண்டு தருக?
- ❖ **உள்நாட்டு குழப்பங்கள்**
- ❖ **பொருளாதார சீர்கேடுகள்**

294) ஜோன் ஒஸ்ரினின் இறைமைக் கோட்பாடு வழுவிழந்தமைக்கான காரணிகள் இரண்டு தருக?
- ❖ **தற்காலத்தில் தோற்றம் பெற்றுக்க மக்களாட்சி முறைமை**
- ❖ **சமஸ்டியாட்சி பற்றிய கொள்கை வலுப்பெற்றமை**

295) இறைமையின் உறைவிடமாக ரூசோ குறிப்பிடும் விடயம் யாது?
- ❖ **பொதுச்சித்தம்**

296) ஒஸ்ரினின் இறைமை கோட்பாட்டின் பிரதான இயல்புகள் இரண்டு தருக?
- ❖ **இறைமை முழுநிறைவானது,எல்லையற்றது,பிரிக்கமுடியாதது**
- ❖ **இறைமையின் அடிப்படையில் அரசுகள் அனைத்தும் சமமானவை**

## அதிகாரப்பிரிவினை கோட்பாடு

297) அரசியல் அதிகாரம் என்பதன் பொருள் யாது?
- ❖ **சமூகத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் நீதியையும் நிலை நாட்டுவதற்கு உள்ள அதிகாரமாகும்**

298) அதிகாரம் பற்றிய ஆய்வில் ஈடுபட்ட சிந்தனையாளர்கள் இருவரை குறிப்பிடுக?
- ❖ **மாக்கியவள்ளி**
- ❖ **தோமஸ் கொப்ஸ்**

299) அதிகாரப் பகிர்வின் இரு பிரதான வடிவங்களையும் குறிப்பிடுக?
- ❖ **பிரதேச ரீதியான அதிகார பகிர்வு**
- ❖ **பணி ரீதியான அதிகார பகிர்வு**

300) அதிகாரப்பிரிவினை கோட்பாடு பற்றி கருத்து வெளியிட்ட சிந்தனையாளர்கள் இருவரைக் குறிப்பிடுக?
- ❖ **மொன்டஸ்கியூ**
- ❖ **ஜீன்போடின்**

301) அதிபாரப்பிரிவினை பற்றி சிறப்பித்து கூறும் நூல்கள் இரண்டிணையும் அதன் ஆசிரியர்களையும் குறிப்பிடுக?

- ❖ **சட்டத்தின் உயிர்- மொன்டஸ்கியூ**
- ❖ **ஜீன்போடின்- குடியரசு**

302) அதிகாரப்பிரிவினை கோட்பாட்டின் முக்கியத்துவங்கள் இரண்டு தருக?

- ❖ **ஆரசாங்கத்தின் தன்னிச்சையான ஆட்சிமுறையினை தடுப்பதற்கு**
- ❖ **ஆரசாங்க அதிகாரம் சட்ட,நிருவாக,நீதித்துறைகள் சார்ந்து பிரிக்கப்படுவதற்கு**

303) அதிகாரப்பிரிவினை கோட்பாட்டை அரசியல் யாப்பினில் இணைத்துள்ள நாடுகள் இரண்டிணை குறிப்பிடுக?

- ❖ **ஐக்கிய அமெரிக்கா**
- ❖ **பிரித்தானியா**

304) அதிகாரப்பிரிவினை கோட்பாட்டை தெளிவுறுத்த மொண்டஸ்கியூ முன்வைத்த மூன்று நிபந்தணைகளை குறிப்பிடுக?

- ❖ **சட்டத்துறையும் நிருவாகத்துறையும் ஒன்றாகத் தோன்றி ஒன்றாக மறையக்கூடாது**
- ❖ **ஒரு துறையின் ஆயுள் மற்றுமோர் துறையினால் நிர்ணயம் செய்யப்படலாகாது**
- ❖ **ஒரு துறையின் அதிகாரம் மற்றுமோர் துறையினால் கட்டுப்படுத்தக்கூடாது**

305) அதிகாரப்பிரிவினை கோட்பாட்டினை பின்பற்றுவதால் ஏற்படும் பயன்பாடுகள் இரண்டு தருக?

- ❖ **அரசாங்கத்தின் தன்னிச்சையான ஆட்சி நிலவுவது தடுக்கப்படும்**
- ❖ **மக்களின் உரிமைகள் சுதந்திரங்கள் மதிக்கப்படும்**

306) அதிகாரப்பிரிவிணை கோட்பாட்டை ஓர் நாட்டில் முழுமையாக பின்பற்றினால் ஏற்படும் பாதகங்கள் இரண்டு தருக?

- ❖ **சட்டத்துறைக்கும் நிருவாகத்துறைக்கும் இடையிலான தொடர்பு முற்றாக துண்டிக்கப்பட்டு விடும்**
- ❖ **அரசாங்கத்தை திறம்பட கொண்டு நடாத்த முடியாத நிலை உருவாகும்**

307) தற்கால அரசுகளில் அதிகாரப்பிரிவினை கோட்பாட்டை முழுமையாக நடைமுறைபடுத்த முடியாமைக்கான காரணிகள் இரண்டு தருக?

- ❖ **ஆட்சிமுறைமைகள் (மந்திரிசபை)**
- ❖ **பூரண அதிகாரப்பிரிப்பு நிருவாகத்தில் காலதாமதத்தை உண்டுபண்ணும்**

308) சமநிலை தலையீடு என்பதன் விளக்கம் யாது?

- ❖ **அரசாங்கத்தின் சட்டத்துறையோ,நிருவாகத்தறையோ,நீதித்துறையோ தனக்கு வழங்கப்பட்டுள்ள தனக்குரிய அதிகார எல்லைகளை தாண்டி செயற்படும் போது ஏனைய துறைகள் தன்னிச்சையாக செயற்படம் துறையினை தடுத்து மீண்டும் உரிய நிலைக்கு சமப்படுத்துதல்**

309) பிரித்தானிய அரசியல் திட்டத்தில் அதிகாரப்பிரிவினை கோட்பாடு முழுமையாக பின்பற்ற முடியாமைக்கான காரணிகள் இரண்டு தருக?

- ❖ **சட்டத்துறையில் இருந்தே நிருவாகத்துறை தோற்றம் பெறுகின்றது**
- ❖ **நிருவாகத்துறையின் ஆதிக்கம் நீதித்துறையில் நிலவுதல்**

310) அதிகார பங்கீடு என்பதன் விளக்கம் யாது?

- ❖ **அதிகாரங்கள் பிரதேச ரீதியாகவோ அல்லது தொழிற்பாட்டு ரீதியாகவோ பிரிக்கப்படுவதனை அல்லது வேறாக்கப்படுவதனை அதிகாரப்பங்கீடு என அழைப்பர்**

311) அதிகார பரவலாக்கம் என்பதன் விளக்கம் யாது?

- ❖ **மத்தியில் குவிந்திருக்கும் அதிகாரங்களை பல பிரதேசங்களுக்கு செறிவடையச் செய்வது இது சட்ட ரீதியாக மேற்கொள்ளப்படுபவை**

312) அதிகார பரவலாக்கத்திற்கும் அதிகார பங்கீட்டிற்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டு தருக ?

- ❖ **அதிகார பரவலாக்கம் என்பது பிரதேசங்களுக்கு அதிகாரத்தினை ஓடச்செய்வது அதிகாரப்பகிர்வு அதிகாரங்களை பிரதேசங்களுக்கு பிரித்தக் கொடுப்பது**
- ❖ **அதிகார பரவலாக்கம் சட்டங்களின் வாயிலாக மேற்கொள்ளப்படுவது அதிகார பங்கீடு யாப்பு ரீதியாக மேற்கொள்ளப்படுவது**

313) சமநிலை தலையீடு எனும் கோட்பாடு தற்காலத்தில் பின்பற்றப்படும் நாடுகள் இரண்டிணை குறிப்பிடுக?

- ❖ **ஐக்கிய அமெரிக்கா**
- ❖ **பிரித்தானியா**

## நூல்களும் அவற்றை எழுதிய ஆசிரியர்களும்

314) அரசியல் ஆய்வுமுறைகள் **(டி.ஸ்மித்)**
315) அரசியலில் பகுத்தறிவுவாதம்**(மைக்கள் ஒக்சொட்)**
316) ஜனநாயககோட்பாட்டுக்கு ஓர் அறிமுகம்,நவீனஅரசியல் பகுப்பாய்வு**(ரொபர்ட் டால்)**
317) பொதுத்துறைநிருவாகக் கல்விக்கானஅறிமுகம் **(எல்.டீ.வைற்)**
318) அரசுஎதிர் மனிதன் **(ஸ்பென்ஸர்)**
319) அரசுபற்றியகோட்பாடு**(பிளன்சிலி)**
320) அரசியல் முறைமைகள் **(வைஸ்மேன்)**
321) உள்ளமும் சமூகமும் **(பரட்டே)**
322) அரசியல் விஞ்ஞானவரலாற்றுக்கு ஓர் அறிமுகம் **(பிறட்ரிக் பொலக்)**
323) அரசியலின் அடிப்படைகள்**(எச்.சிட்விக்)**

## அரசியல் யாப்புக்கள்,யாப்புறுவாதம்

324) அரசியல் யாப்பு என்பதன் பொருள் விளக்கம் யாது?
- ❖ **அரசொன்றின் அரசாங்கத்தின் கட்டமைப்பு,அதிகாரம் தொழிற்பாடு,மக்களின் உரிமைகள் சுதந்திரங்கள்,மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான தொடர்புகள் பற்றி விபரித்து கூறுகின்ற சட்ட ஆவணம்**

325) அரசியல்யாப்பு பற்றி ஆய்வுகளை மேற்கொண்ட ஆய்வாளர்கள் இருவரைத் தருக?
- ❖ **ஏ.வி.டைசி**
- ❖ **பிறைஸ் பிரபு**

326) சிறந்த அரசியல் யாப்பு ஒன்று உட்கொண்டிருக்க வேண்டிய விடயங்கள் இரண்டு தருக?
- ❖ **அரசாங்கத்தின் முத்துறைகள் பற்றிய விளக்கம்**
- ❖ **மக்களின் அடிப்படை உரிமைகள் சுதந்திரம்**

327) அரசியல் யாப்பினில் உள்ளடக்கக்கூடாத விடயங்கள் இரண்டு தருக?
- ❖ **அரசியர் கட்சிகளின் கொள்கைகள்,எண்ணிக்கை**
- ❖ **அரசாங்கத்தினால் வழங்கமுடியாத சேவைகள்**

328) ஓர் அரசுக்கு அரசியல் யாப்பு ஏன் அவசியம் என்பதற்கான ஆதாரங்கள் இரண்டு தருக?
- ❖ **அரசாங்கத்தின் தன்னிச்சையான ஆட்சியினை கட்டுப்படுத்தி ஜனநாயக ஆட்சிமுறையினை நிலைநாட்டுவதற்கு**
- ❖ **மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாத்து உறுதிப்படுத்துவதற்கு**

329) அரசியல் யாப்பின் நோக்கங்கள் இரண்டு தருக?
- ❖ **அரசாங்கத்தின் ஆட்சிமுறைகளை சிறந்த முறையில் எடுத்துக்கூற வேண்டும்**
- ❖ **ஆட்சியாளர்களுக்கும் மக்களுக்கும் இடையே தொடர்பினை கட்டி எழுப்புதல் வேண்டும்**

330) அரசியல் யாப்பு விதிகளை நிர்ணயிக்கும் காரணிகள் இரண்டு தருக?
- ❖ **கடந்தகால சட்ட விதிமுறைகள்**
- ❖ **பழக்கவழக்கங்கள்,மரபுகள் வழக்காறுகள்**

331) அரசியல் யாப்பு உருவாக்கப்படும் வழிமுறைகள் இரண்டு தருக?
- ❖ **அரசியல் யாப்பு நிர்ணய சபை மூலம்**
- ❖ **விசேட மாநாடுகள் மூலம்**

332) அரசியல் யாப்பு ஒன்று உருவாக்கப்படும் சந்தர்பங்கள் இரண்டு தருக?
- ❖ **காலனித்துவ ஆட்சியில் இருந்து விடுதலை பெற்று புதிய அரசு உருவாகும் போது**
- ❖ **புதிய அரசாங்கம் ஆட்சியினை நிலைநிருத்தும் சந்தர்ப்பத்தில்**

333) அரசியல் யாப்பின் இயல்புகள் இரண்டு தருக?
- ❖ **வரையப்பட்ட,வரையப்படாத சட்ட மூலமாக காணப்படலாம்**
- ❖ **மக்கள் கருத்துக்களின் பிரதிபலிப்பாக அமைதல் வேண்டும்**

334) அரசியல் யாப்பின் வகைப்பாடுகளை குறிப்பிடுக?
- ❖ **வரையப்பட்ட,வரையப்படாத யாப்புக்கள்**

- ❖ **நெகிழும்,நெகிழா யாப்புக்கள்**
- ❖ **ஒற்றையாட்சி,சமஸ்டியாட்சி யாப்புக்கள்**
- ❖ **சட்டரீதியாக இயற்றப்பட்ட,படிமுறையாக வளர்ச்சியடைந்து வரும் யாப்புக்கள்**
- ❖ **ஜனாதிபதித்துவஆட்சி,மந்திரிசபைஆட்சி யாப்புக்கள்**

335) அதிகார அடிப்படையில் அரசியல் யாப்புக்கள் எவ்வாறு பாகுபடுத்தப் படுகின்றது?
- ❖ **ஒற்றையாட்சி யாப்பு**
- ❖ **சமஸ்டியாட்சி யாப்பு**

336) தற்காலத்திற்கு அதிகம் பொருத்தப்பாடுடைய அரசியல் யாப்பாக விளங்கும் யாப்புக்களை குறிப்பிடுக?
- ❖ **ஒற்றையாட்சி யாப்பு**
- ❖ **சமஸ்டியாட்சி யாப்பு**

337) நெகிழா அரசியல் யாப்பின் நன்மைகள் இரண்டு தருக?
- ❖ **கால மாற்றங்களுக்கு ஏற்றப யாப்பினில் மாற்றம் செய்ய முடியும்**
- ❖ **பல்லின சமூகம் வாழ்கின்ற நாடுகளின் அனைத்த மக்களதும் பிரச்சினைகள் இலகுவாக உள்டக்கமுடியும்**

338) நெகிழா அரசியல் யாப்பினை பின்பற்றும் நாடுகள் இரண்டினை குறிப்பிடுக?
- ❖ **அமெரிக்கா**
- ❖ **இலங்கை**

339) யாப்புறுவாதம் என்பதன் விளக்கம் யாது?
- ❖ **அரசியல் யாப்பனை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி இடம்பெறுவதே யாப்புறு வாதமாகும்**

340) யாப்புறுவாதம் நிலவுவதற்கு இருக்க வேண்டிய பண்புகள் இரண்டினை தருக?
- ❖ **யாப்புறு பக்தி**
- ❖ **மக்களின் எண்ணங்களுடன் முன்னோக்கி செல்ல யாப்புக்குள்ள திறன்**

341) யாப்பின் மீது மக்களுக்கு பக்தி ஏற்பட வேண்டுமாயின் யாப்பு கொண்டிருக்க வேண்டிய பண்புகள் இரண்டு தருக?
- ❖ **யாப்பு பக்கச்சாற்பின்றி சகலருக்கும் சமமானதாக இருக்க வேண்டும்**
- ❖ **சமமான பிரஜைகள் சமமான வாய்ப்புக்கள் எனும் சித்தாந்தத்தின் அடிப்படையில் யாப்பு அமைதல் வேண்டும்**

342) வரையப்பட்ட அரசியல் திட்டத்தின் நன்மைகள் இரண்டு தருக?
- ❖ **அரசு மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும்**
- ❖ **ஆட்சி நடைமுறைகளை கொண்டு நடாத்துவது இலகுவானதாக இருக்கும்**

343) யாப்பு வடிவத்தை அடிப்படையாகக் கொண்டு யாப்புக்களை எவ்வாறு பாகுபடுத்தலாம்?
- ❖ **வரைந்த யாப்பு**
- ❖ **வரையப்படாத யாப்பு**

344) அரிஸ்டோட்டிலின் அரசியல் யாப்பு வகைப்பாட்டில் இடம்பெறும் பாகுபாடுகளை தருக?
- ❖ **ஒருவராட்சியாப்பு**
- ❖ **சிலராட்சியாப்பு**
- ❖ **பலராட்சி யாப்பு**

345) தாராண்மைவாத யாப்பு முறையின் பிரதான பண்புகள் இரண்டு தருக?
- ❖ **மக்கள் இறைமை அங்கீகரிக்கப்பட்டிருத்தல்**
- ❖ **உரிமைகள்,சுதந்திரம்,சமத்துவம் போன்ற விடயங்கள் முக்கியம் பெறல்**

346) சமதர்ம யாப்பின் பிரதான இயல்புகள் இரண்டு தருக?
- ❖ **ஒருகட்சி ஆட்சிமுறையும் அக்கட்சியின் ஏகாதிபத்தியமும் இடம்பெறல்**
- ❖ **கம்யூனிச கோட்பாட்டை அடிப்படையாக கொண்டு அரசாங்கம் செயற்படல்**

347) சமூக ஜனநாயக யாப்பின் முக்கிய பண்புகள் இரண்டு தருக?
- ❖ **பொருளாதாரத்தை முகாமைத்துவப் படுத்தவதில் அரசின் அதிகபட்ச தலையீடு இருத்தல்**
- ❖ **நீதித்துறை சுதந்திரம்,அரசியற்கட்சிகள்,அமுக்கக்குழுக்களின் செயற்பாடுகள் முக்கியம் பெறல்**

348) பாசிஸவாத யாப்பின் பிரதான பண்புகள் இரண்டு தருக?
- ❖ **தனியொருவரால் பிரயோகிக்கப்படும் சர்வாதிகார ஆட்சி இடம்பெறல்**
- ❖ **தீவிர இனவாதமும்,அரசின் அதீத ஆட்சியும் இடம்பெறல்**

## ஒற்றையாட்சி,சமஸ்டியாட்சி,கூட்டுசமஸ்டி ஆட்சிமுறைகள்

349) ஒற்றையாட்சி முறையினை பின்பற்றும் நாடுகள் இரண்டினை குறிப்பிடுக?
- ❖ **பிரித்தானியா**
- ❖ **இலங்கை,பிரான்ஸ்**

350) ஒற்றையாட்சி முறையின் இயல்புகள் இரண்டு தருக?
- ❖ **அதிகாரங்கள் அனைத்தும் மத்திய அரசிடம் குவிக்கப்பட்டிருக்கும்**
- ❖ **இறைமை அதிகாரம் பிரிக்கப்படாதிருக்கும்**

351) ஒற்றையாட்சி முறையின் நன்மைகள் இரண்டு தருக?
- ❖ **தனித்து மத்திய அரசாங்கத்தின் ஆட்சி நிலவுவதால் நாடு முழுவதற்கும் தனி நிர்வாக முறைமை**
- ❖ **ஒரே வகையான சட்ட,நிருவாக,நீதித்துறை நிலவுதல்**

352) ஒற்றையாட்சி முறையின் பிரதிகூலங்கள் இரண்டு தருக?
- ❖ **மத்திய அரசாங்கத்தின் தன்னிச்சையான ஆட்சி நிலவுதல்**
- ❖ **பல்லின சமுதாயம் வாழ்கின்ற நாடுகளுக்கு பொருத்தமற்றது**

353) சமஸ்டியாட்சி முறை பற்றி விளக்கிய கெமில்டனின் நூல் யாது?
- ❖ **சமஸ்டி அறிக்கைகள்**

354) சமஸ்டியாட்சி முறையினை பின்பற்றும் நாடுகள் இரண்டு தருக?
- ❖ **அமெரிக்கா**
- ❖ **சுவிட்சர்லாந்து**

355) சமஸ்டியாட்சி முறை வெற்றிகரமாக தொழிற்படவேண்டுமாயின் இருக்க வேண்டிய பண்புகள் இரண்டு தருக?
- ❖ **எழுதப்பட்ட அரசியல் யாப்பு**
- ❖ **சமஸ்டி நீதிமன்றம்**

356) சமஸ்டியாட்சி முறையில் அதிகார பங்கீடுகள் மேற்கொள்ளப்படும் மூன்று முறைகளை குறிப்பிடுக?
- ❖ **மத்திய அரசு தனக்கு தேவையான அதிகாரங்களை எடுத்துவிட்டு எஞ்சியதை மாநில அரசுகளுக்கு வழங்கும்**
- ❖ **மாநில அரசுகள் தனக்கு தேவையான அதிகாரங்களை எடுத்துவிட்டு எஞ்சியதை மத்திய அரசிற்கு வழங்கும்**
- ❖ **பட்டியல் ரீதியான அதிகார பங்கீடு**

357) சமஸ்டியாட்சி முறைமையின் நன்மைகள் இரண்டு தருக?
- ❖ **வேற்றுமைகளுக்கு மத்தியில் ஒற்றுமையினை கட்டியெழுப்பி ஒருமைப்பாட்டினை கட்டியெழுப்புகின்றது**
- ❖ **மத்திய அரசின் தன்னிச்சையான ஆட்சிமுறை தடுக்கப்படுகின்றது**

358) சமஸ்டியாட்சி முறைமையின் பிரதிகூலங்கள் இரண்டு தருக?
- ❖ **ஒருமைத் தன்மையான ஆட்சி முறையினை ஏற்படுத்த முடியாது**
- ❖ **மத்திய மாநில அரசுகள் மத்தியில் முரண்பாடுகள் இடம்பெறல்**

359) சமஸ்டியாட்சி முறையின் சிறப்பு பண்புகள் இரண்டு தருக?
- ❖ **எழுதப்பட்ட நெகிழாத அரசியல் திட்டம் நிலவுதல்**
- ❖ **சிறப்பான அதிகார பங்கீடு இடம்பெறல்**

360) சமஸ்டியாட்சி முறை தோற்றம் பெறுவதற்கு ஏதுவாய் உள்ள காரணிகள் இரண்டு தருக?
- ❖ **பொதுப் பாதுகாப்பு**
- ❖ **வல்லரசு நாடுகளின் ஆயுத≠அணுவாயுத அச்சுறுத்தல்கள்**

361) சமஸ்டி அரசியல் யாப்பு உட்கொண்டிருக்க வேண்டிய விடயங்கள் இரண்டு தருக?
- ❖ **வரையப்பட்ட,நெகிழா அரசியல் யாப்பு**
- ❖ **சமஸ்டி நீதிமன்றம்**

362) கூட்டுசமஸ்டி என்பதன் விளக்கம் யாது?
- ❖ **இறைமையுடைய பல அரசுகள் பொதுபாதுகாப்பு,தேசிய நலன் கருதி ஓர் பொதுவான அமைப்பின் கீழ் ஒன்றுபடுவது ஆகும்**

363) கூட்டுசமஸ்டி ஆட்சிமுறையின் பிரதான இயல்புகள் இரண்டினை குறிப்பிடுக?

- **கூட்டுச் சேர்கின்ற அத்தனை நாடுகளும் இறைமை அதிகாரம் கொண்டவை**
- **கூட்டுச் சேர்ந்த நாடுகள் எச்சந்தர்ப்பத்திலும் விலகிக் கொள்ள முடியும்**

364) தற்காலத்தில் சிறப்புற்று விளங்கும் கூட்டுசமஸ்டி அமைப்புக்கள் இரண்டிணை குறிப்பிடுக?
- **சுதந்திர நாடுகளின் பொதுநலவாயம்**
- **ஐரோப்பிய யூனியன்**

365) சமஸ்டியாட்சி முறைக்கும் கூட்டுசமஸ்டியாட்சியாட்சி முறைக்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டு தருக?
- **சமஸ்டியாட்சியில் மத்திய,மாநில அரசுகள் எனும் இருவகையான அரசுகள் காணப்பட கூட்டுசமஸ்டியில் பல நாடுகள் ஒன்று சேர்ந்த பொதுமைப்படுத்தப்பட்ட அரசு முறையினை காணலாம்**

366) கூட்டுசமஸ்டியாட்சி முறைமை தோற்றம் பெறுவதன் முக்கிய நோக்கங்கள் இரண்டு தருக?
- **நாட்டின் தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு**
- **பற்றாக்குறையான வளங்களை பெற்றுக்கொள்வதற்கு**

367) கூட்டுசமஸ்டி ஆட்சி முறையில் இணைந்துள்ள நாடுகளின் அதிகாரங்கள் இரண்டிணை குறிப்பிடுக?
- **தாம் விரும்பிய சந்தர்ப்பத்தில் பிரிந்து செல்ல முடியும்**
- **பொது அமைப்பிற்கு அதிகாரங்களை வழங்குதல்**

368) கூட்டுசமஸ்டியாட்சி முறையின் நன்மைகள் இரண்டு தருக?
- **பல நாடுகள் கூட்டாக ஒன்றுசேர்ந்து ஐக்கியம் கட்டியெழுப்பப்படுகின்றது**
- **பின்தங்கிய நிலையில் உள்ள நாடுகள் அபிவிருத்தியடையும்**

## ஜனாதிபதி,மந்திரிசபை,கலப்பு அரசாங்கமுறைமைகள்

369) ஜனாதிபதித்துவ ஆட்சிமுறையின் பிரதான இயல்புகள் இரண்டு தருக?
- **சட்டத்துறை,நிருவாகத்துறை என்பன தனித்தனியாக செயற்படும்**
- **வினைதிறன்,செயற்திறன் மிக்கதோர் ஆட்சிமுறைமை**

370) ஜனாதிபதித்துவ ஆட்சிமுறையினை பின்பற்றுகின்ற நாடுகள் இரண்டு தருக?
- **அமெரிக்கா**
- **பிரான்ஸ்**

371) ஜனாதிபதித்துவ ஆட்சி முறைமையின் நன்மைகள் இரண்டு தருக?
- **அதிகாரப்பிரிவினை கோட்பாடு பின்பற்றப்படல்**
- **உறுதியான அரசாங்கம் உருவாக்கப்படும்**

372) ஜனாதிபதித்துவ ஆட்சிமுறையின் பிரதிகூலங்கள் இரண்டு தருக?
- **ஜனாதிபதியின் சர்வாதிகார ஆட்சி இடம்பெறல்**
- **பதவி நீக்கம் செய்வது மிகவும் கடினமானது**

373) ஜனாதிபதித்துவ ஆட்சிமுறைமையில் ஜனநாயகத்தன்மை குறைவாக இருப்பதற்கான காரணிகள் இரண்டு தருக?
- **நிருவாகச் செயற்பாடுகளில் சட்டத்துறையின் பங்களிப்பு இல்லாததாலும்,பொறுப்புறும் பங்கு இல்லாததனாலும் ஜனநாயகத் தன்மை குறைவான ஆட்சி என அழைப்பர்**

374) ஜனாதிபதித்துவ அரசாங்க முறைமை உறுதியான ஓர் அரசாங்க முறையாகும் என்பதற்கான ஆதாரங்கள் இரண்டு தருக?
- **ஜனாதிபதியானவர் விசேட காரணங்களைத்தவர குறித்த பதவிகாலம் முடியும் வரை பதவி வகிக்கக்கூடியவராக இருக்கின்றார் பதவி நீக்கம் செய்வது மிகவும் கடினம் என்பதனால் உறுதியான அரசாங்க முறைஎனலாம்**

375) மந்திரிசபை ஆட்சிமுறையின் பிரதான இயல்புகள் இரண்டு தருக?
- **சட்டத்துறை நருவாகத்துறை இரண்டும் இணைந்தித்தல்**
- **நிருவாகத்துறை உண்மை நருவாகம்,நாமநிருவாகம் எனும் இரு பகுதிகளாக காணப்படும்**

376) மந்திரிசபை ஆட்சிமுறைமைக்கு எதிராக கூறப்படும் கருத்துக்கள் இரண்டு தருக?
- **பாராளுமன்றம் கலைக்கப்படும் போது அமைச்சரவை கலைக்கப்படுவதால் உறுதியற்ற ஓர் அரசாங்க முறையாகும்**
- **அமைச்சரவையின் சர்வாதிகார ஆட்சிமுறை தோற்றம் பெறுவதற்கு சந்தர்ப்பம் உண்டு**

377) மந்திரிசபை ஆட்சிமுறைமையின் சாதகங்கள் இரண்டு தருக?
- **ஆளுங்கட்சியின் செயற்பாடுகளை அவதானிக்க சிறப்பான எதிர்கட்சி காணப்படும்**
- **சட்டத்துறையிலும் நிருவாகத்துறையிலும் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் ஆட்சி புரிவதனால் மக்கள் இறைமைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது**

378) மந்திரிசபை ஆட்சிமுறையினை பின்பற்றுகின்ற நாடுகள் இரண்டு தருக?
- **பிரித்தானியா**
- **இந்தியா**

379) மந்திரிசபை ஆட்சிமுறை உறுதியற்ற ஓர் ஆட்சிமுறையாகும் என்பதற்கான ஆதாரங்கள் இரண்டு தருக?
- **சட்டத்துறை கலையும் போது நிருவாத்துறையும் கலைந்து செல்வதனால் உறுதியற்ற ஓர் அரசாங்க முறையாகும்**
- **ஓர் துறையின் ஆயுள் இன்னோர் துறையால் தீர்மானிக்கப்படல்**

380) மந்திரிசபை ஆட்சிமுறைக்கும் ஜனாதிபதித்துவ ஆட்சிமுறைக்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டு தருக?
- **ஜனாதிபதித்துவ ஆட்சிமுறையில் தனிமனித ஆட்சி இடம்பெற மந்திரிசபையாட்சியில் கூட்டுமனிதர்களின் ஆட்சி இடம்பெறும்**
- **ஜனாதிபதித்துவ ஆட்சியில் சட்டத்துறை நிருவாகத்துறை என்பன தனித்தனி தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் மந்திரிசபையாட்சியில் சட்டத்துறையும் நிருவாகத்துறையும் ஒரே தேர்தலில் தெரிவு செய்யப்படும்**

381) மந்திரிசபை ஆட்சிமுறையில் நிருவாகத்துறை இரு பெரும் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது அவற்றை குறிப்பிடுக?
- **உண்மை நிருவாகம்**
- **நாம நிருவாகம்**

382) மந்திரிசபை ஆட்சிமுறையில் சட்டத்துறைக்கும் நிருவாகத்துறைக்கும் இடையிலான தொடர்புகள் இரண்டு தருக?
- **சட்டத்துறையில் அங்கம் வகிப்பவர் நிருவாகத்துறையில் அங்கம் வகிக்கின்றனர்**
- **சட்டத்துறை கலையும் போது நிருவாகத்துறையும் கலைந்த செல்கின்றது**

383) ஜனாதிபதித்துவ ஆட்சிமுறையில் சட்டத்துறைக்கும் நிருவாகத்துறைக்கும் இடையிலான தொடர்புகள் இரண்டு தருக?
- **சட்டமன்றத்தினால் இயற்றப்படும் சட்டங்களுக்கு இறுதி ஒப்பம் இடுபவர் ஜனாதிபதி**
- **சட்டத்துறையின் சட்டங்களை சிறந்தமுறையில் நடைமுறைப்படுத்துதல்**

384) கலப்பு அரசாங்கமுறைமை நடைமுறையில் உள்ள நாடுகள் இரண்டினை குறிப்பிடுக?
- **சுவிட்சர்லாந்து**
- **பிரான்ஸ்**

385) கலப்பு ஆட்சிமுறையின் பிரதான இயல்புகள் இரண்டு தருக?
- **ஜனாதிபதித்துவ,மந்திரிசபை அரசாங்க முறைகள் இரண்டிணையும் அடிப்படையாகக் கொண்டிருக்கும்**
- **ஜனாதிபதியின் சர்வாதிகாரம் கட்டுப்படுத்தப்படல்**

386) கலப்பு அரசாங்க முறைமையின் பிரதிகூலங்கள் இரண்டு தருக?
- **சட்டத்துறையில் நிருவாகத்துறையின் தலையீடு நிலவுதல்**
- **நிருவாகத்துறை மக்களால் தெரிவு செய்யப்படாததால் மக்களாட்சி கோட்பாட்டிற்கு தடையாக அமைகின்றது**

387) கலப்பு அரசாங்கமுறையின் அனுகூலங்கள் இரண்டு தருக?
- **பல்லினத் தன்மையுடைய மக்கள் வாழ்கின்ற நாடுகளுக்குப் பொருத்தமான முறைமை**
- **வேலைப்பழுக்கள் குறைக்கப்படுவதுடன் நிருவாக செயற்பாடுகள் துரித கதியில் இடம்பெறும்**

388) கலப்பு அரசாங்கமுறைமையில் சட்டத்துறைக்கும் நிருவாகத்துறைக்கும் இடையிலான தொடர்புகள் இரண்டு தருக?
- **சட்டத்துறையே நிருவாகத்த்துறையினை தேர்வு செய்கின்றது**
- **சட்டத்துறையின் கடமைகளை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம் உண்டு**

## நூல்களும் அவற்றை எழுதிய ஆசிரியர்களும்

389) விஞ்ஞானமனிதன் எதிர் அதிகாரஅரசியல் **(எச்.ஜே.மொகன்தோ)**
390) அரசியல் கலாசாரமும்,அரசியல் அபிவிருத்தியும் **(லூசியான்,சிட்னிவெர்பா)**
391) அரசியல் கோட்பாடுபற்றியகல்வி**(தோமஸ் ஜென்கின்)**
392) வளர்முகநாடுகளின் அரசியல் **(ஆல்மண்ட்,கோல்மன்)**
393) நவீனஅரசியலும் அரசாங்கமும் **(அலன் பெல்)**
394) அரசியல் கோட்பாடு**(ஆர்னல்ட் பிரட்ச்)**
395) அரசியல் ஆய்விற்கானஅணுகுமுறைகள் **(ரோலன் யங்)**
396) இங்கிலாந்தின் அரசியல் சிந்தனை**(ஏர்னஸ்ட் பார்கர்)**
397) அரசின் தன்மை**(வில்லோபி)**
398) அரசியல் பகுப்பாய்விற்கானஅறிமுகம் **(டேவிட் ஈஅப்டர்)**

## அரசியற்கட்சிகள்,அமுக்கக்குழுக்கள்,பொதுஜன அபிப்பிராயம்

399) அரசியல் கட்சிக்கு சரியான வரைவிலக்கணம் தருக?
- ❖ **அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக ஒத்த கொள்கையினை உடையவர்கள் ஒன்றினைந்து கொள்ளும் அமைப்பாகும்**

400) அரசியல் கட்சியின் பொதுவான இயல்புகள் இரண்டைத் தருக?
- ❖ **தமக்கே உரித்தான அரசியல் பொருளாதார சமூக கொள்கையினை கொண்டிருக்கும்**
- ❖ **பொது நோக்கினை அடிப்படையாகக் கொண்டு செயற்படும்**

401) அரசியற்கட்சிகளை மொரிஸ்டுவேஜர் எவ்வாறு வகைப்படுத்தியுள்ளார்?
- ❖ **காடர் கட்சி**
- ❖ **மகாஜன கட்சி**

402) அரசியற்கட்சிகளை மைக்ஜவர் எவ்வாறு வரைவிலக்கணப்படுத்தியுள்ளார்?
- ❖ **அரசியல் திட்டப்படி சில கொள்கைகள் மூலம் அரசாங்கத்தை நடாத்த விழையும் கூட்டம் அரசியற்கட்சி ஆகும்**

403) தாராண்மைவாத ஜனநாயக அரசிலுள்ள கட்சிகளுக்கும் கம்யூனிச அரசிலுள்ள கட்சிகளுக்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டு தருக?
- ❖ **தாராண்மைவாத அரசில் பலகட்சி முறை,பல்லினப்பாங்கான சேவைகள் வழங்கப்படும்**
- ❖ **கம்யூனிச அரசில் தனிக்கட்சி முறை,பொதுவுடைமைக் கொள்கையினை அடிப்படையாகக் கொண்டிருக்கும்**

404) அரசியல் கட்சியின் பணிகள் இரண்டைத் தருக?
- ❖ **மக்களின் பொதுஜன அபிப்பிராயங்களை ஒன்று திரட்டுதல்**
- ❖ **பொது நல சேவைகளை வழங்குதல்**
- ❖ **அரசியல் ரீதியாக மக்களை அறிவூட்டுதல்**

405) அரசியல் கட்சியின் நன்மைகள் அடங்கிய பட்டியல் இரண்டைத் தருக?
- ❖ **மக்களின் மத்தியில் காணப்படும் பொதுப் பிரச்சினைகளை இனங்கண்டு தீர்த்து வைக்கின்றது**
- ❖ **வாக்காளர்களை அரசியல் ரீதியாக அறிவூட்டுகின்றது**

406) அரசியல் கட்சியின் தீமைகள் அடங்கிய பட்டியல் இரண்டைத் தருக?
- ❖ **சிலவேளை மக்களுக்கு முறையற்ற அரசியல் கற்கையினை வழங்குகின்றது**
- ❖ **ஊழல் மோசடிகளுக்கான வழகாட்டல்களாக காணப்படுகின்றது**

407) அரசியல் கட்சிகளின் முக்கியத்துவம் இரண்டினைத் தருக?
- ❖ **மக்களின் தேசிய ஒருமைப்பாட்டினை கட்டியெழுப்புதல்**
- ❖ **உறுதியான அரசாங்கத்தினை உருவாக்குதல்**

408) ஒரு கட்சி முறையை வரைவிலக்கணப்படுத்துக?
- ❖ **ஒரு நாட்டு அரசாங்க அரசியல் முறைமைகளில் தனித்து ஒரு கட்சி மாத்திரம் ஆதிக்கம் செலுத்துமாயின் அதனை ஒருகட்சி முறைமை என அழைப்பர்.**

409) ஆரம்பகால கட்டங்களில் ஒருகட்சி முறைமை நிலவியமைக்கான ஆதாரங்கள் இரண்டு தருக?
- ❖ **1922- இத்தாலியில் பாசிஸகட்சி**
- ❖ **1933- ஜேர்மனில் நாஜிக்கட்சி**

410) ஒரு கட்சி முறை பின்பற்றப்படும் நாடுகள் இரண்டைத் தருக?
- ❖ **சீனா**

❖ கியூபா

411) நவீன அரசுகளில் நடைமுறையிலுள்ள கட்சி முறை இரண்டைத் தருக?

❖ **ஒருகட்சி முறைமை**

❖ **இருகட்சி முறைமை**

❖ **பலகட்சி முறைமை**

❖ **ஆதிக்க ஒருகட்சி**

❖ **ஆதிக்க இருகட்சி**

412) இரு கட்சி முறையை வரைவிலக்கணப்படுத்துக?

❖ **ஒரு நாட்டு அரசாங்க முறையில் அல்லது அரசியலில் இரண்டு கட்சிகள் மாறிமாறி ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி ஆட்சியமைக்குமாயின் அவை இருகட்சி முறையென அமைப்பர்.**

413) ஒரு கட்சி முறையால் ஏற்படும் தீமைகள் இரண்டைத் தருக?

❖ **தனிக்கட்சியின் சர்வாதிகாரப்போக்கு இடம்பெறும்**

❖ **பல்வேறு கொள்கைகளை உடைய அரசியல் கருத்துக்கள் புறக்கணிக்கப்படும்**

414) ஒரு கட்சி முறையால் ஏற்படும் நன்மைகள் இரண்டைத் தருக?

❖ **கொள்கைகளில் ஒருமைத் தன்மை பேணப்படும்**

❖ **வீனான காலதாமதம் தவிர்க்கப்பட்டு விரைவான ஆட்சிமுறைமை இடம்பெறும்**

415) இரு கட்சி முறையை பின்பற்றும் நாடுகள் இரண்டைத் தருக?

❖ **பிரித்தானியா**

❖ **அமெரிக்கா**

416) இருகட்சிமுறைமைக்குப் பெயர் பெற்ற நாடுகள் இரண்டு தருக?

❖ **பிரித்தானியா**

❖ **அமெரிக்கா**

417) இரு கட்சிமுறைக்கு எதிராக கூறப்படும் விமர்சனங்கள் இரண்டைத் தருக?

❖ **வாக்காளரின் விருப்பத்தெரிவு இருகட்சிகளுக்குள்ளேயே கட்டுப்படுத்தப்படுகின்றது**

❖ **சிறுபாண்மையின கட்சிகள் பிரதிநிதித்துவம் பெறுவது தடுக்கப்படுகின்றது**

418) பலகட்சி முறை என்றால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

❖ **ஒரு நாட்டு அரசாங்க அல்லது அரசியல் முறைகளில் ஒன்றிற்கு மேற்ப்பட்ட அரசியற் கட்சிகள் போட்டித் தன்மையுடன் செயற்படுமாயின் அதனை பலகட்சி முறை என அழைப்பர்.**

419) பலகட்சி முறையை பின்பற்றும் நாடுகள் இரண்டைத் தருக?

❖ **இந்தியா**

❖ **இலங்கை**

420) ஒரு நாட்டில் பல கட்சி முறைமை தோற்றம் பெறுவதற்கு அடிப்படையாகவுள்ள காரணிகள் இரண்டு தருக?

❖ **பல்லினத் தன்மையுடைய சமூகம்**

❖ **விகிதாசார பிரதிநிதித்துவம்**

421) பல கட்சி முறையுடன் நெருங்கிய தொடர்புடைய ஆட்சிமுறைமை எது?

❖ **மந்திரிசபை ஆட்சிமுறைமை**

422) இரு கட்சி முறைக்கு கூறப்படுகின்ற நன்மைகள் இரண்டைத் தருக?

❖ **சிறுபாண்மையின கட்சிகள் பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொள்கின்றது**

❖ **மக்களின் சகல அபிப்பிராயங்களும் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றது**

423) பலகட்சி முறைக்கு கூறப்படுகின்ற தீமைகள் இரண்டைத் தருக?

❖ **பலமான அரசாங்கத்தை அமைத்துக் கொள்வது கடினம்**

❖ **நாட்டு மக்கள் மத்தியில் இன,மத,பிரதேச பிரிவினையை உண்டுபண்னுகின்றது**

424) மகாஜன கட்சிகள் என்பதன் விளக்கம் யாது?

❖ **பரந்த மக்கள் தளத்துடன் உறுப்பினர்களின் சந்தாப்பணத்தில செயற்படும் முறையான ஒழுங்கமைப்பினைக் கொண்ட கட்சிகளாகும்.**

425) காடர் கட்சிகள் என்பதன் விளக்கம் யாது?

❖ **தேர்தல் காலங்களில் மாத்திரம் செயற்படும் பலவீனமான ஒழுங்கமைப்பினை கொண்ட கட்சிகளாகும்**

426) வாக்காளரை அரசியல் ரீதியாக அறிவூட்ட அரசியற்கட்சிகள் மேற்கொள்ளும் வழிமுறைகள் இரண்டு தருக?

❖ **தேர்தல் பிரச்சாரங்கள்**

❖ **துண்டு பிரசுரங்கள்**

427) அரசியல் கட்சிகள் ஏன் அவசியம் என்பதற்கான ஆதாரம் இரண்டைத் தருக?

❖ **பாராளுமன்ற அரசாங்க முறையினை வலுவூட்டுவதற்கு**

❖ **மக்களின் அரசியல் அறிவு,பங்கேற்பு ஆகியவற்றை விருத்தி பெற செய்வதற்கு**

428) ஆளுங்கட்சியின் பிரதான பணிகள் இரண்டு தருக?

❖ **உறுதியான அரசாங்கத்தை அமைத்தல்**

❖ **கட்சியை உள்ளும் புறமும் சிதைவடையாது பாதுகாத்தல்**

429) எதிகட்சியின் பிரதான பணிகள் இரண்டு தருக?

❖ **ஆளுங்கட்சியின் செயற்பாட்டில் விழிப்புணர்வுடன் இருத்தல்**

❖ **ஆளுங்கட்சியுடன் இணைந்து அபிவிருத்தி செயற்பாடுகளில் ஈடுபடல்**

430) அமுக்கக்குழு என்பதன் விளக்கம் யாது?

❖ **அரசியல் அதிகாரத்தை கைப்பற்றாது மறைமுகமாக அரசியலில் செல்வாக்குச் செலுத்துவதுடன் அரசாங்கத்திற்கு அழுத்தங்களை கொடுத்த தமது நோக்கங்களை நிறைவேற்றும் குழுக்கள் அமுக்கக்குழுக்களாகும்.**

431) அமுக்கக் குழுவின் கடமைகள் இரண்டைத் தருக?

❖ **தமது நலன்களுக்காக அரசாங்கம் மீது அழுத்தங்களை பிரயோகிக்கும்**

❖ **தனிப்பட்ட நலன்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது**

432) அமுக்கக் குழு ஆற்றும் பணிகள் இரண்டைத் தருக?

❖ **அரசுக்கும் மக்களுக்கும் இடையே உறவினை ஏற்படுத்தல்**

❖ **எதிர்கால அரசியல் தலைவர்களுக்கு பயிற்சியளித்தல்**

433) இலங்கையிலுள்ள அமுக்கக்குழுக்கள் இரண்டைத் தருக?

❖ **பொதுபல சேனா**

❖ **இராவனாபல சேனா**

❖ **பிக்குமார் சம்மேளனம்**

434) அமுக்கக் குழுவின் பண்புகள் இரண்டைத் தருக?

❖ **அரசியலில் மறைமுகமாகத் தாக்கம் செலுத்துதல்**

❖ **பொதுக்கொள்கை உருவாக்கத்திற்கான தகவல்களை அரசாங்கத்திற்கு வழங்குதல்**

435) அமெரிக்காவிலுள்ள அமுக்கக் குழுக்கள் இரண்டைத் தருக?

❖ **தொழிற்ச்சங்கங்கள்**

❖ **மத நிறுவனங்கள்**

436) இந்தியாவிலுள்ள அமுக்கக் குழுக்கள் இரண்டைத் தருக?

❖ **வர்த்தக அமைப்புக்கள்**

❖ **தொழிற்சங்கங்கள்**

437) சுவிஸ் நாட்டிலுள்ள அமுக்கக்குழுக்கள் இரண்டிணைத் தருக?

❖ **சுவிட்சர்லாந்து கைத்தொழில் வர்த்தக சங்கம்**

❖ **சுவிட்சர்லாந்து உழவர் சங்கம்**

438) அமுக்கக் குழுவுக்கும் அரசியல் கட்சிக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் இரண்டைத் தருக?

❖ **அரசியற்கட்சிகள் அதிகாரத்தினை கைப்பற்றுவதனை கைப்பற்றுவதனை நோக்கமாகக் கொள்ள அழுக்கக்குழுக்கள் தமது தனிப்பட்ட நலன்களை நோக்கமாக கொண்டு செயற்படுகின்றது**

❖ **அரசியற்கட்சிகள் பொதுநல நோக்கம் கொண்டவை அமுக்கக்குழுக்கள் தனிப்பட்ட நோக்கம் கொண்டவை.**

439) அமுக்கக்குழுக்கள் எத்தகைய அமைப்புக்கள் மீது செல்வாக்குச் செலுத்துவதன் மூலம் தமது நோக்கங்களை அடைந்து கொள்கின்றது?

❖ **பாராளுமன்றம்**

❖ **உள்ளூராட்சி சபைகள்**

440) அமுக்கக் குழு எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் யாவை?

❖ **மக்களை ஒழுங்குபடுத்துவதில் உள்ள சிரமம்**

❖ **போதிய அரசியல் அறிவு காணப்படாமை**

441) அமுக்கக் குழுவின் நன்மைகள் இரண்டைத் தருக?

❖ **சமூக ஏற்றத்தாழ்வுகளை சீர் செய்ய உதவுகின்றது**

❖ **மக்களை அரசியல் மயப்படுத்துகின்றது**

442) அமுக்க குழுவின் தீமைகள் இரண்டைத் தருக?

❖ **அரசாங்கத்தால் வழங்க முடியாத சேவைகளை வழங்கும்படி அழுத்தம் கொடுத்தல்**

❖ **தத்தமது தனிப்பட்ட பிரிவினரின் நலன்களுக்காக மாத்திரமே செயற்படுகின்றது**

443) அமுக்க குழு ஏன் மக்களுக்கு அவசியம் என்பதற்கான நியாயங்கள் இரண்டு தருக?

❖ **அரசியலில் ஆட்சிசியாளர்களின் கண்மூடித்தனமான செயற்பாடுகளை தடுத்து நிருத்தி சுமூகமான ஆட்சியினை கொண்டு நடாத்துவதற்கு**

❖ **சட்டவாக்கம் செய்பவர்களுக்கு பல தகவல்களை வழங்குவதற்கு,மக்களுக்கு தேவையான சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு அவசியமாகின்றது**

444) அரசாங்கத்திற்கு எவ்வகையான அழுத்தங்களை அமுக்கக் குழு பிரயோகிக்கின்றன அவற்றில் இரண்டைத் தருக?

❖ **ஆர்ப்பாட்டம்,கிளர்ச்சி**

❖ **வேலைநிறுத்தம்**

445) ஆர்வக்குழுக்கள் என்றால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

❖ **சமுதாயத்தின் நலன் கருதி பல சேவைகளை வழங்குவதற்காக ஒழுங்கமையும் மக்கள் குழுமம் ஆகும்**

446) பொதுசன அபிப்பிராயம் (மக்கள் கருத்து) என்றால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

❖ **அரசாங்கம் மற்றும் சந்கைத்தாபனங்கள் அரசியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த நபர்கள் சம்பவங்கள் தொடர்பாக பொது மக்களால் வெளிப்படுத்தப்படும் கருத்துக்களின் பொகுப்பு ஆகும்**

447) பொதுசன அபிப்பிராயம் ஜனநாயகத்திற்கு ஆற்றும் இரு பங்களிப்புக்களை குறிப்பிடுக?

❖ **மக்களின் கருத்துக்களை அரசியல் அரங்கிற்குள் கொண்டு செல்கின்றது**

❖ **மக்களை அரசியல் பங்கேற்கச் செய்கின்றது**

448) தற்கால அரசுகளில் பொதுசன அபிப்பிராயத்தினை கட்டுப்படுத்தும்காரணிகள் இரண்டு தருக?

❖ **அவசர காலச்சட்டம்**

❖ **ஊரடங்கு சட்டம்**

449) பொதுசன அபிப்பிராயங்களை உருவாக்கும் முகாண்மைகள் இரண்டு தருக?

❖ **குடும்பம்,அரசியற்கட்சிகள்**

❖ **பத்திரிகைகள்,ஊடகங்கள்**

450) பொதுசன அபிப்பிராயத்தின் இயல்புகள் இரண்டைத் தருக?

❖ **நிகழ்காலத்துடன் தொடர்புபட்டவையாக காணப்படும்**

❖ **உடன்பாடு ஏற்பட்டவுடன் பொதுசன அபிப்பிராயம் முற்றுப்பெற்று விடும்**

451) பொதுசன அபிப்பிராயம் உருவாகுவதில் பாதிப்புச் செலுத்தும் காரணிகள் இரண்டைத் தருக?

❖ **மக்களின் அரசியல் ரீதியான அறிவு**

❖ **பத்திரிகைகள்,அரசியற்கட்சிகள்**

452) பொதுவன அபிப்பிராயம் பலமானதாக இருக்க வேண்டிய முன் நிபந்தனைகள் இரண்டைத் தருக?

❖ **மக்கள் சிறந்த அரசியல் அறிவினைப் பெற்றிருத்தல் வேண்டும்**

❖ **மக்கள் பொது விடயங்களில் அதிகம் ஈடுபடுவோராக இருத்தல் வேண்டும்**

453) பொதுசன அபிப்பிராயத்தின் நன்மைகள் இரண்டைத் தருக?

❖ **பெரும்பாலான மக்களின் பொது விருப்பங்கள் வெளிப்படுத்தப்படுகின்றது**

❖ **மக்களின் அரசியல் ஈடுபாட்டினை வலுப்படுத்துகின்றது**

454) பொதுசன அபிப்பிராயத்தின் தீமைகள் இரண்டைத் தருக?

❖ **ஊடக சுதந்திரம் மறுக்கப்பட்ட நாடுகளில் பொதுசன அபிப்பிராயம் கேள்விக ்குரியாக மாறுகின்றது**

❖ **அரசியல் ரீதியான அறிவு,விருப்பு,நாட்டம் இல்லாத மக்களிடம் பொதுசன அபிப்பிராயம் சாத்தியமற்றது**

455) ஆர்வக்குழுக்களின் பிரதான பணிகள் இரண்டு தருக?

❖ **உரிமைகளைப் பாதுகாத்தல்**

❖ **சுற்றாடல்,முகாமைத்துவம் சம்பந்தமான செயற்பாடுகளை மேற்கொள்ளல்**

456) அரசியற்கட்சிகள் எவ்வாறான செயற்பாடுகள் மூலம் பொதுசன அபிப்பிராயங்களை உருவாக்குகின்றது?

❖ **பாராளுமன்றத்தில் விவாதங்களை மேற்கொள்ளல்**

- **ஓவியங்கள்,வர்ணப்படங்கள்,செய்திகளின் ஊடாக பொதுசன அபிப்பிராயத்தை வெளிப்படுத்தல்**

## நூல்களும் அவற்றை எழுதிய ஆசிரியர்களும்

457) குடியரசு,தேசியமாந்தன்,சட்டம்,அரசியலாளன் **(பிளேட்டோ)**
458) லெவியதன் **(தோமஸ் கொப்ஸ்)**
459) சிவில் அரசாங்கத்தின் இரு உடன்படிக்கைகள்,மனிதர்களைபுரிதல் **(ஜோன் லொக்)**
460) சமூகஒப்பந்தம்,எமிலி**(ஜீன் ஜக்யூ ரூசோ)**
461) அரசியல் **(அரிஸ்டோட்டில்)**
462) உரோன் வரலாறு**(பொலீவியஸ்)**
463) சமூகமுரண்பாடு**(ஜோர்ஜ் சிமல்)**
464) POSD CORB **(லூதர் கிளிக்)**
465) சனத்தொகை**(மல்தூஸ்)**
466) தேசங்களின் செல்வம் **(அடம் ஸ்மித்)**

## சட்டத்துறை, நிருவாகத்துறை, நீதித்துறை

467) சட்டத்துறை என்பதற்கு சரியான வரைவிலக்கணம் தருக?
- **ஓர் நாட்டிற்கு தேவையான சட்டங்களை இயற்றுகின்ற முதன்மைத்துவம் ஓர் துறையாகும்**

468) சட்டத்துறையின் பணிகள் இரண்டைக் குறிப்பிடுக?
- **நாட்டிற்குத் தேவையான சட்டங்களை இயற்றுதல்**
- **அரசியல் யாப்பில் திருத்தங்கள் மாற்றங்களை மேற்க்கொள்ளல்**

469) ஓரவைச் சட்டமன்றத்துக்கு ஆதரவாக கூறப்படும் கருத்துக்கள் இரண்டைக் குறிப்பிடுக?
- **காலதாமதம் தவிர்க்கப்பட்டு சட்டங்கள் இயற்றப்படும்**
- **புதிய அரசுகளுக்கும் சிறிய அரசுகளுக்கும் அதிகம் பொருத்தமானது**

470) ஓரவைச் சட்டமன்றத்துக்கு எதிராக கூறப்படும் கருத்துக்கள் இரண்டைக் குறிப்பிடுக?
- **சட்டத்துறை விடும் பிழைகளை சுட்டிக்காட்டுவது கடினமானதாகும்**
- **அதிகாரம் ஒரு சபையிடம் குவிக்கப்படுவதனால் சர்வாதிகாரம் தோற்றம் பெறும்**

471) ஓரவைச் சட்டமன்றம் உள்ள நாடுகள் இரண்டைத் தருக?
- **இலங்கை**
- 

472) ஈரவைச் சட்டமன்றத்துக்கு ஆதரவாக உள்ள கருத்துக்கள் இரண்டினைத் தருக?
- **முதலாம் மன்றம் விடுகின்ற தவறுகள் இரண்டாம் மன்றத்தால் சுட்டிக்காட்டப்படும்**
- **முதலாம் மன்றத்தின் வேலைப்பழுக்கள் குறைக்கப்படும்**

473) ஈரவைச் சட்டமன்றம் உள்ள நாடுகள் இரண்டைத் தருக?
- **பிரித்தானியா**
- **அமெரிக்கா**

474) நிருவாகத் துறை ( நிறைவேற்றுத் துறை) என்றால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
- **சட்டமன்றத்தினால் இயற்றப்படுகின்ற சட்டங்களை சிறந்த முறையில் நாட்டில் நடைமுறைப்படுத்தும் ஓர் பிரதான அமைப்பாகும்**

475) நிருவாகத் துறையின் பணிகள் இரண்டைக் குறிப்பிடுக?
- **சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுதல்**
- **வெளிநாடுகளுடன் ஒப்பந்தங்கள் உடன்படிக்கைகளை மேற்கொள்ளுதல்**

476) சட்டத்துறைக்கும் நிருவாகத்துறைக்கும் உள்ள இடைத் தொடர்புகள் இரண்டைத் தருக?
- **சட்டவாக்கம் செய்ய வேண்டிய சில கொள்கைகளை நிருவாகத்துறை சட்டமன்றத்திற்கு சிபார்சு செய்தல்**
- **சட்டத்துறையினை மூட்டுதல்,கலைத்தல்,ஒத்திவைத்தல் போன்ற செயற்பாடுகளை நிருவாகத்துறை மேற்கொள்கின்றது**

477) சட்டத்துறையும் நிருவாகத்துறையும் நெருங்கிய தொடர்புடைய நாடுகள் இரண்டு தருக?
- **பிரித்தானியா**
- **இந்தியா**

478) நீதித்துறை என்றால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
- **சட்டமன்றத்தினால் இயற்றப்படுகின்ற சட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படும் சந்தேகங்கள்,முரண்பாடுகளை தீர்த்து மக்களின் உரிமைகள் சுதந்திரங்களை பாதுகாக்கும் ஓர் அமைப்பாகும்**

479) நீதிமன்றத்தால் மக்கள் அடையும் நன்மைகள் இரண்டைத்தருக?
- **மக்கள் மத்தியில் உருவாகும் முரண்பாடுகளை தீர்த்து வைக்கின்றது**
- **பக்கச்சாற்பின்றி தீர்ப்பு வழங்குவதுடன் உரிமைகள் சுதந்திரங்களையும் பாதுகாக்கின்றது**

480) நீதித்துறை சுதந்திரம் என்றால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
- **பிறதுறைகளின் எந்தவிதமான கட்டுபாடுகளும் இன்றி தமது பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்றுவதற்கு நீதித்துறைக்குள்ள சுதந்திரமாகும்.**

481) சட்டத்துறையில் ஒரங்க மன்ற முறைக்கும் ஈரங்க மன்ற முறைக்கும் உள்ள வேறுபாடுகள் இரண்டைக் குறிப்பிடுக?
- **ஓரங்கமன்ற சட்டத்துறை ஒற்றையாட்சி நாடுகளில் காணப்பட ஈரங்கமன்ற சட்டத்துறை சமஸ்டியாட்சி நாடுகளில் காணப்படும்**
- **ஓரங்கசட்ட மன்றம் சிறிய அரசுகளுக்குப் பொருத்தமானதாக காணப்பட ஈரங்கசட்ட மன்றம் பாரிய அரசுகளுக்கு பொருத்தமானது**

482) நிருவாகத்துறையினை பதவிநீக்கம் செய்வதற்காக சட்டத்துறை மேற்கொள்ளும் வழிமுறைகள் இரண்டு தருக?
- **குற்றப்பிரேரணையை முன்வைத்தல்**
- **நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்வைத்தல்**

483) சட்டம் ஒழுங்கினை நிலை நாட்டுவதற்கு நிருவாகத்துறை பயன்படுத்தும் கருவிகள் இரண்டு தருக?
- **பொலிஸ்,இராணுவம்**
- **சிறைச்சாலை,நீதிமன்றம்**

484) தற்கால அரசுகளில் நீதித்துறை சுதந்திரத்தின் அவசியம் இரண்டைக் குறிப்பிடுக?
- **நாட்டில் ஜனநாய ஆட்சிமுறையினை நிலைநாட்டுவதற்கு**
- **மக்களின் உரிமைகள் சுதந்திரங்கள் மீறப்படுவதனை தடுப்பதற்கு**

485) நீதித்துறை சுதந்திரத்தை பாதுகாப்பதற்காக தற்கால அரசுகளினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் இரண்டு தருக?
- **நீதிபதிகளின் நியமன முறைகள் தெளிவுபடுத்தப்படல்**
- **சேவைப் பாதுகாப்பு**

486) தற்கால உலகில் நீதித்துறையிலுள்ள நீதிமன்ற நீதிபதிகளை தெரிவு செய்கின்றமுறைகள் இரண்டைக் குறிப்பிடுக?
- **பொதுமக்களால் தெரிவு செய்யப்படல்**
- **சட்டமன்றத்தினால் தெரிவு தெரிவு செய்யப்படல்**
- **நிருவாகத்துறையால் தெரிவு செய்யப்படல்**

487) நீதிப் புணராய்வின் அதிகாரத்தின் மூலம் கிடைக்கும் நன்மைகள் இரண்டைக் குறிப்பிடுக?
- **சட்டங்களில் உள்ள சந்தேகங்கள் தீர்க்கப்படுகின்றது**
- **அரசியல் யாப்பு,மக்களின் உரிமைகள் சுதந்திரங்கள் பாதுகாக்கப்படுகின்றது**

488) நீதிப்புணராய்வு அதிகாரம் என்பதை வரைவிலக்கணப்படுத்துக?
- **சட்டமன்றத்தினால் இயற்றப்படுகின்ற சட்டங்கள் நாட்டிற்கும் மக்களுக்கும் பாதகமாக அமையும் சந்தர்பத்தில் அதனை தடுத்து நிருத்தி பரீசீலணை செய்யும் அதிகாரமாகும்**

489) நீதிப் புணராய்வு அதிகாரத்தின் மூலம் கிடைக்கும் தீமைகள் இரண்டைக் குறிப்பிடுக?
- **சட்டத்துறையினை இறைமை அதிகாரம் பாதிக்கப்படுகின்றது**
- **நீதித்துறையின் மேலாதிக்கம்,காலதாமதம் போன்ற செயற்பாடுகளை ஏற்படுத்துகின்றது**

490) நீதித்துறையின் சுதந்திரத்திற்கு அத்தியாவசியமான நிபந்தனைகள் இரண்டைத் தருக?
- **அதிகாரப்பிரிவினைக் கோட்பாடு**
- **யாப்புறுவாதம்**

## ஆட்சியில் பொதுமக்களை தொடர்புபடுத்தும் முறைகள்

491) ஆட்சியில் பொதுமக்களை தொடர்புபடுத்தும் முறைகள் இரண்டைத் தருக?
- **பிரதிநிதித்தவ முறைமைகள் (தேர்தல்முறைகள்)**
- **நேரடி ஜனநாயகம்**

492) பிரதிநிதித்துவம் என்பதற்கு சரியான வரைவிலக்கணம் தருக?
- **மக்கள் தாமே நேரடியாக ஆட்சி அலுவல்களில் பங்கு பெற இயலாத நிலையில் தமது பிரதிநிதிகளின் மூலமாக ஆட்சியில் பங்கு பெறும் வழிமுறையே பிரதிநிதித்துவமாகும்.**

493) தற்கால அரசுகளில் ஏன் பிரதிநிதித்துவம் தேவைப்படுகின்றது என்பதற்கான காரணங்கள் இரண்டைத் தருக?
- **சனத்தொகை பெருக்கம்**
- **நிலப்பரப்பின் அதிகரிப்பு**

494) ஒரு சிறந்த பிரதிநிதித்துவ முறைக்கு இருக்க வேண்டிய பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக?
- **காலத்துக்குக்காலம் சுதந்திரமாகவும் நேர்மையாகவும் தேர்தல்கள் நடாத்தப்படல்.**
- **தாம் பெற்றுக்கொள்ளும் வாக்குப்பலத்துக்கேற்ற பிரதிநிதித்துவத்தை அரசியற்கட்சிகளுக்குப் பெற்றுக்கொடுத்தல்.**

495) பிரதிநிதித்துவ முறையின் வகைகள் இரண்டைத் தருக?
- **இனவாரிப் பிரதிநிதித்துவ முறை**
- **விகிதாசார பிரதிநிதித்துவ முறை**

496) பிரதேசவாரி பிரதிநிதித்துவ முறை நடைமுறைப்படுத்தப்படும் இரு விதங்களை தருக?
- **சாதாரண பெரும்பாண்மை முறை**
- **எளிய பெரும்பாண்மை முறை**

497) பிரதேசவாரி பிரதிநிதித்துவ முறையின் பண்புகள் இரண்டைத் தருக?
- **பிரதேசங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சிந்தனையைக் கொண்டது**
- **ஆட்சியாளர்களுக்கும் மக்களுக்கும் இடையே நெருக்கமான தொடர்பு நிலவுதல்**

498) வாக்காளர் நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் இரண்டைக் குறிப்பிடுக?
- **அரசியல் அறிவு**
- **மதம்,புவியியல் காரணிகள்**

499) சாதாரணமாக பெரும்பான்மை பிரதிநிதித்துவ முறை என்றால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
- **குறித்த ஒரு தேர்தல் மாவட்டத்தில் அல்லது தொகுதியில் பல்வேறு வேட்பாளர்கள் போட்டியிடும் போது மக்கள் தாம் விரும்பிய வேட்பாளர் ஒருவருக்கு வாக்களிப்பர்.இதன் போது கூடுதலான வாக்குகளை பெற்றுக் கொண்டவர் வெற்றி பெற்றவராக கருதப்படும் ஓர் முறையாகும்**

500) சாதாரண பெரும்பான்மை பிரதிநிதித்துவ முறையின் பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக?
- **வேட்பாளர்கள் சுடேச்சையாகப் போட்டியிடுவர்**
- **இருகட்சி முறைமை வளர்ச்சியடைந்த நாடுகளுக்குப் பொருத்தமான முறைமை**

501) சாதாரண பெரும்பான்மை பிரதிநிதித்துவ முறை பின்பற்றப்படும் நாடுகள் இரண்டைக் குறிப்பிடுக?
- **அமெரிக்கா**
- **பிரித்தானியா,கனடா**

502) எளிய பெரும்பான்மை பிரதிநிதித்துவ முறையின் நன்மைகள் இரண்டைத் தருக?
- **வாக்காளனுக்கும் பிரதிநிதிக்குமிடையில் நெருங்கிய தொடர்பு ஏற்படல்**
- **இடைத்தேர்தல்கள் காரணமாக ஒரு புறம் காலத்துக்கேற்ற பொதுசன அபிப்பிராயத்தை அறிந்து கொள்ளல்.**

503) எளிய பெரும்பான்மை பிரதிநிதித்துவ முறையின் தீமைகள் இரண்டைத் தருக?
- **சில வேளைகளில் பெரும்பான்மை பிரதிநிதித்துவப்படுத்தப்படல் தவிர்க்கப்படுகின்றது.**
- **கூடுதலான வாக்குகளைப்பெறுவோரே ஆசனம் பெற முடிவதால் சகல அரசியற்கட்சிகளும் பிரதிநிதித்துவம் பெற முடியாமை**

504) எளிய பெரும்பான்மை பிரதிநிதித்துவ முறை என்றால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

- ❖ **குறித்த தேர்தல் மாவட்டம் அல்லது தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு மக்கள் தமது விருப்பு வாக்குகளை அளிப்பர் இதன்போது 50 வீதத்திற்கு மேற்ப்பட்ட வாக்கு தொகையினை பெற்றுக் கொண்டவர் வெற்றி பெற்றவராக கருதப்படும் முறையாகும்.**

505) எளிய பெரும்பான்மை பிரதிநிதித்துவ முறையை பின்பற்றும் நாடுகள் இரண்டைத் தருக?
- ❖ **இலங்கை (ஜனாதிபதி தெரிவு)**
- ❖ **பிஜி (பாரளுமன்ற உறுப்பினர் தெரிவு)**

506) விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையை வரைவிலக்கணப்படுத்துக?
- ❖ **மக்கள் அளிக்கும் வாக்குகளின் விகிதாசாரத்திற்கு ஏற்ப ஆசனங்கள் பகிர்ந்தளிக்கப்படும் ஓர் தேர்தல் முறைமையாகும்**

507) விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் பிரதான பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக?
- ❖ **அளிக்கப்பட்ட வாக்குகளின் விகிதாசாரத்திற்கு ஏற்ப பிரதிநிதித்துவம் வழங்கப்படல்**
- ❖ **பல அரசியற்கட்சி முறையினை ஊக்குவிக்கின்றது**

508) விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை பின்பற்றப்படும் நாடுகள் இரண்டைத் தருக?
- ❖ **டென்மார்க்**
- ❖ **இலங்கை**

509) விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் பட்டியல் முறையை பின்பற்றும் நாடுகள் இரண்டைத் தருக?
- ❖ **பெல்ஜியம்**
- ❖ **சுவீடன்**

510) விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை நடைமுறைப்படுத்தப்படும் இரு முறைகளையும் குறிப்பிடுக?
- ❖ **தனிமாற்று வாக்கு முறை**
- ❖ **பட்டியல் முறை**

511) விகிதாசார பிரதிநிதித்துவ தனிமாற்று வாக்கு முறையை வரைவிலக்கணப்படுத்துக?
- ❖ **மக்கள் தாம் விரும்பிய தனிப்பட்ட பிரதிநிதியினை தெரிவு செய்வதற்காக பயன்படுத்தும் முறையாகும் நிருவாகத்துறையினரை தெரிவு செய்ய பெரும்பாலான நாடுகளில் பயன்படுத்தப்படுகின்றது**

512) தனிமாற்று வாக்குமுறையை பின்பற்றும் நாடுகள் இரண்டைக் குறிப்பிடுக?
- ❖ **டென்மார்க்**
- ❖ **இலங்கை**

513) விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் நன்மைகள் இரண்டைக் குறிப்பிடுக?
- ❖ **சிறுபாண்மையின மக்கள் பிரதிநிதித்துவம் பெற்றுக்கொள்ள முடிகின்றது**
- ❖ **அரசியற்கட்சி முறைகளின் வளர்ச்சியினை துரிதப்படுத்துகின்றது**

514) விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைக்கு பாதகமாகக் கூறப்படுகின்ற கருத்துக்கள் இரண்டைத் தருக?
- ❖ **மக்களுக்கும் பிரதிநிதிகளுக்கும் இடையில் தூரமான தொடர்பு நிலவுதல்**
- ❖ **வாக்கு கணீப்பீட்டு முறைமை சிக்கலானது நிராகரிக்கப்படும் வாக்குகளின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படும்.**

515) கலப்பு பிரதிநிதித்துவ முறை என்றால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
- ❖ **சாதாரண பெரும்பாண்மை,விகிதாசார பிரதிநிதித்துவ முறைகளின் சாதகமான பண்புகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட தேர்தல் முறையாகும்.**

516) கலப்பு முறை பின்பற்றப்படும் நாட்டினைக் குறிப்பிடுக?
- ❖ **ஜேர்மன்**

517) கலப்பு பிரதிநிதித்துவ முறையின் நன்மைகள் இரண்டைத் தருக?
- ❖ **வாக்குகள் மத்தியில் விகிதாசாரம் பேணப்படும்**
- ❖ **இருவகையான உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படுகின்றனர்.**

518) கேர் முறை என அழைக்கப்படும் பிரதிநிதித்துவ முறை யாது?
- ❖ **தனிமாற்று வாக்கு முறை**

519) விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் பங்காற்றிய அறிஞர்கள் இருவரைத் தருக?
- ❖ **ஜே.எஸ்.மில்**
- ❖ **ஆந்திரே**

## நேரடி ஜனநாயக உத்திகள்

520) நேரடி ஜனநாயக கருவி என்றால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
- **ஆட்சியில் அல்லது அரசாங்க நடவடிக்கைகளில் மக்களை நேரடியாக பங்கு கொள்ள செய்வதற்கு பயன்னடுத்தப்படும் முறைமைகள் ஆகும்.**

521) நேரடி ஜனநாயக கருவி இரண்டைக் குறிப்பிடுக?
- **ஒப்பங்கோடல்**
- **திருப்பி அழைத்தல்**

522) ஒப்பங்கோடல் என்றால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
- **அரசாங்கம் கொண்டுவருகின்ற தீர்மானங்களை மக்கள் விரும்புகின்றார்களா? அல்லது விரும்பவில்லையா? என்பதனை அறிந்து கொள்வதற்காக நடாத்தப்படுகின்ற தேர்தல் முறையாகும்.**

523) ஒப்பங்கோடலின் நன்மைகள் இரண்டைக் குறிப்பிடுக?
- **சட்டத்துறையில் கட்சி சார்பின் அடிப்படையில் நிறைவேற்று மசோதாக்களை தடுக்கலாம்.**
- **சமூகமானது முரண்பட்ட குழுவாக பிளவுபடும் தன்மை தவிர்க்கப்படுகின்றது.**

524) ஒப்பங்கோடலின் தீமைகள் இரண்டைக் குறிப்பிடுக?
- **சட்டவாக்கம் செய்யும் இறுதி அதிகாரம் மக்களுக்கு வழங்கப்படுவதால் சட்டத்துறையின் முக்கியத்துவம் குறையும். ஆதிக செலவு வீண் காலதாமதம் ஏற்படும்**
- **அடிக்கடி ஒப்பங்கேடல் நடத்தும் போது மக்களின் தேர்தல் மீதலான ஆர்வம் குறையும்.**

525) ஒப்பங்கோடல் நடைமுறையில் உள்ள நாடுகள் இரண்டிணை குறிப்பிடுக?
- **சுவிட்சர்லாந்து**
- **இலங்கை**

526) ஒப்பங்கோடலின் வகைப்பாடுகளை குறிப்பிடுக?
- **யாப்புசார் ஒப்பங்கோடல்**
- **மனு ஒப்பங்கோடல்**
- **தெரிவுக்குரிய ஒப்பங்கோடல்**

527) ஆரம்பித்து வைத்தல் என்றால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
- **மக்களுக்கு அவசியமாகத் தேவைப்படுகின்ற ஓர்சட்ட மூலம் பெரும்பாண்மையான மக்களது ஒப்பங்கள் மூலம் இயற்றப்படும் முறையாகும்**

528) ஆரம்பித்து வைத்தலின் நன்மைகள் இரண்டைக் குறிப்பிடுக?
- **மக்களின் சட்டவாக்கம் தொடர்பான அறிவு வளர்ச்சியடையும்**
- **மக்கள் இறைமை பலப்படுத்தப்படும்**

529) ஆரம்பித்து வைத்தலின் தீமைகள் இரண்டைக் குறிப்பிடுக?
- **மக்கள் சட்டங்களை உருவாக்குவதால் சட்டத்துறையின் முக்கியத்துவம் குறைவடையும்**
- **அரசியல் யாப்பிற்கு சாவாலாக இம்முறை அமைகின்றது**

530) திருப்பியழைத்தலின் நன்மைகள் இரண்டைக் குறிப்பிடுக?
- **மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மீது மக்களின் கட்டுப்பாடு அதிகாரிக்கின்றது.**
- **ஆட்சியாளர்கள் மனம் போன போக்கில் செயற்படுவதை தடுக்க உதவுகின்றது.**

531) திருப்பியழைத்தலின் தீமைகள் அடங்கிய பட்டியல் இரண்டைத் தருக?
- **மக்கள் பிரதிநிதிகள் சுதந்திரமாக செயற்பட தடையாக உள்ளது.**
- **அரசியல் கட்சிகள் சுயலாபங்களுக்காக இதனை பயன்படுத்திக்கொள்ளலாம்.**

532) திருப்பியழைத்தல் பின்பற்றும் நாடுகள் இரண்டைக் குறிப்பிடுக?
- **சுவிட்சர்லாந்து**
- **அமெரிக்கா**

533) தற்காலத்தில் ஒப்பங்கோடலை நடாத்துவதற்கு சவாலாக உள்ள காரணிகள் இரண்டு தருக?
- **சனத்தொகை பெருக்கம்**
- **மக்கள் ஒன்று கூடுவதில் உள்ள சிரமங்கள்**

## நூல்களும் அவற்றை எழுதிய ஆசிரியர்களும்

534) அரசியல் வரலாறு**(ஜெங்ஸ்)**
535) பூர்வீகசமுதாயம் **(மெக்லெனன்)**
536) புராதன வரலாற்றுகல்வி**(மோர்கன்)**
537) அரசியலமைப்புசட்டம் **(ஏ.வி.டைசி)**
538) சட்டவியல் பற்றியசொற்பொழிவுகள் **(ஜோன் ஒஸ்ரின்)**
539) இளவரசன் **(மாக்கியவள்ளி)**
540) சட்டத்தின் உயிர் **(மொண்டஸ்கியூ)**
541) பொதுத்துறைநிர்வாகம் **(வூற்றோவில்சன்)**
542) the politics of developing areas**(கெப்ரியல் ஆல்மண்ட்)**
543) சர்வதேச சட்டம் (பேராசிரியர் லோரன்ஸ்)

## சிவில் சமூகம்

544) சிவில் சமூகம் என்பதற்கு சரியான வரைவிலக்கணம் தருக?
- ❖ **அரசாங்கம்,குடும்பம்,சந்தைத் தாபனங்கள் ஆகிய மூன்றையும் தவிர்ந்த சமூகத்தில் செயற்படும் ஏனைய அமைப்புக்களின் ஒருங்கினைப்பு ஆகும்**

545) சிவில் சமூகத்தின் பிரதான இயல்புகள் இரண்டை தருக?
- ❖ **கூட்டுச் செயற்பாடுகள் :- சிவில் சமூகத்தின் செயற்பாடுகள் கூட்டுநோக்கத்திற்காகவன்றிக் தனிப்பட்ட நோக்கங்களுக்காகவோ நலன்களுக்காகவோ இடம்பெறமாட்டாது.**
- ❖ **அடையாளம் :- கோட்பாட்டு ரீதியாகச் சிவில் சமூகம் தனக்கே உரிய அடையாளத்தைக் கொண்டுள்ளது. இது அரசு, குடும்பம், சந்தை நிறுவனங்கள் என்பவற்றிலிருந்து வேறுபட்டதாகும்.**

546) சிவில் சமூகம் என்ற கருத்து 20ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியின் முன்னிலைக்கு வருவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணி இரண்டைத் தருக?
- ❖ **மூன்றாம் உலக நாடுகளின் அரசாங்கங்கள் பலவீன மடைந்திருந்தமை**
- ❖ **மூன்றாம் உலகில் இயற்கை மற்றும் மானிட வளங்கள் காணப்பட்டாலும் பொருளாதார விருத்தியை மேற்கொள்ள முடியாமல் போனமை**

547) நல்லாட்சியை உருவாக்குவதில் சிவில் சமூகம் ஆற்றும் பணிகள் இரண்டைத் தருக?
- ❖ **சமூகத்தின் நலன்களின் அக்கறையுடன் செயற்படல்**
- ❖ **மனிதர்களை கூட்டுச் சமூக வாழக்கைக்குப் பயிற்றுவித்தல்.**

548) சிவில் சமூக வலையமைப்பினுள் உள்ளடங்கும் அமைப்புக்கள் இரண்டினை குறிப்பிடுக?
- ❖ **நன்கொடை நிறுவனங்கள்**
- ❖ **அரசசார்பற்ற அமைப்புக்கள்**

549) சிவில் சமூகம் அவசியம் தேவைப்படுவதற்கான காரணிகள் இரண்டு தருக?
- ❖ **நாட்டில் நல்லாட்சியை கட்டியெழுப்புவதற்கு**
- ❖ **சில்லோராட்சி தனியுரிமையாக மாறுவதனை தடுப்பதற்கு**

550) சிவில் சமூகத்தின் பங்குதாரர்களாக விளங்கும் அமைப்புக்கள் இரண்டு தருக?
- ❖ **தொழிற்ச் சங்கங்கள்**
- ❖ **வர்த்தக சங்கங்கள்**

551) சிவில் சமூகம் ஒன்றினை உருவாக்க உம்மால் மேற்கொள்ளக்கூடிய இரு நடவடிக்கைகளை குறிப்பிடுக?
- ❖ **பல சமூக நலப்பணிகளை மேற்கொள்ளல்**
- ❖ **மக்களை கூட்டு வாழ்க்கைக்கு பழக்கப்படுத்தல்**

552) சிவில் சமூகம் பற்றி ஆய்வு செய்த ஆய்வாளர்கள் இருவரைக் குறிப்பிடுக?
- ❖ **எமில் துர்ஹைம்** (Emile Durkheim)
- ❖ **ஹெகல்** (Hegel)

## அரசியல் சமூகமயமாக்கல்

553) அரசியல் சமூகமயமாக்கல் என்பதற்கு சரியான வரைவிலக்கணம் தருக?
- ❖ **ஒரு மனிதன் அரசியல் சமுதாயத்தினுள் இணைந்து கொள்வதற்கு அல்லது அதில் ஒரு உறுப்பினராவதற்கு அவர் அச்சமுதாயத்தின் அரசியல் வழிமுறைகள் நடவடிக்கைகள் செயற்பாடுகள் போன்றவற்றை கற்கும் செயற்பாடு ஆகும்**

554) அரசியல் சமூகமயமாக்கல் பற்றி கருத்து வெளியிட்ட ஆய்வாளர்கள் இருவரைத் தருக?
- ❖ **பிரட் கிறீன்ஸ்டைன்**
- ❖ **கிறீன்ஸ்**

555) அரசியல் சமூகமயமாக்கலால் ஏற்படும் பயன்பாடுகள் இரண்டு தருக?
- ❖ **தேசிய அரசியல் முறைமைக்கு மக்கள் தயாராகுதல்**
- ❖ **பங்குபற்றுதல் அரசியல் கலாசாரத்தினை மேன்மையடையச் செய்தல்**

556) அரசியல் சமூகமயமாக்களை ஏற்படுத்தும் காரணிகள் இரண்டைத் தருக?
- ❖ **குடும்பம்,பாடசாலை**
- ❖ **அரசியற்கட்சிகள்,தொடர்பு சாதனங்கள்**

557) அரசியல் அறிவுமிக்கவர்களுக்குரிய பண்புகள் இரண்டைத் தருக?
- ❖ **அரசியல் பங்கேற்பு உயர்ந்த மட்டத்தில் காணப்படுதல்**
- ❖ **அரசியல் தகவல்களை சேகரிப்பதில் அதிக ஆர்வம் காட்டுதல்**

558) அரசியல் சமுதாயப்படுத்தலினால் ஏற்படும் விளைவுகள் இரண்டைத் தருக?
- ❖ **அரசியல் பதவிகளுக்கு தேவையான மக்களை பயிற்றுவித்தல்**
- ❖ **அரசியல் முறையமைவிற்கு தேவையான அரசியல்வாதிகளுக்கு பயிற்சியளித்தல்**

559) அரசியல் சமூகமயமாக்கல் பற்றி கோடொன் ஆல்டர் குறிப்பிட்டுள்ள நான்கு பிரிவுகளையும் குறிப்பிடுக?
- ❖ **அனுபவங்கள் ஒன்று குவிதல்**
- ❖ **மனப்பாங்குகளை மாற்றுதல்**
- ❖ **விசேட நிகழ்வுகள்,நியமங்கள்**
- ❖ **பெற்றோர்,நண்பர்களிடம் இருந்து அரசியல் தரவுகளை பெறல்**

## அரசியல் கலாசாரம்

560) அரசியல் கலாசாரம் என்றால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
- ❖ **அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்த மனித சமூகத்தில் அரசியல் பிராணி என்ற வகையில் மக்களின் நடத்தைகள் ஓடாக வெளிப்படும் அரசியல் விழுமியங்கள் ஆகும்.**

561) அரசியல் கலாசாரத்தின் வகைகள் இரண்டைக் குறிப்பிடுக?
- ❖ **குறுகிய அரசியல் கலாசாரம்**
- ❖ **பங்கேற்பு அரசியல் கலாசாரம்**

562) அரசியல் கலாசாரத்தினால் ஏற்படும் நன்மைகள் இரண்டைத் தருக?
- ❖ **அரசியல் பகுப்பாய்வில் முக்கியம் வாய்ந்த ஒரு கோட்பாடு**
- ❖ **கொள்கை உருவாக்கத்தில் மக்கள் பங்களிப்பை வலியுறுத்துகின்றது**

563) அரசியல் கலாசாரத்தினால் ஏற்படும் தீமைகள் இரண்டைத் தருக?
- ❖ **இது பழமைவாத ஒரு கோட்பாடாகும்**
- ❖ **உண்மையில் தனிமனித நடத்தையை சரியான முறையில் அளவிட முடியாது**

564) அரசியல் ஆற்றுப்பயிற்சி என்றால் என்ன?
- ❖ **தனி மனிதனுக்கும் அரசியல் முறையமைவுகளுக்குமிடையிலான உறவு பற்றிய அறிவை குறிக்கும்**

565) பங்கேற்பு அரசியல் கலாசாரம் சிறப்பாக இடம்பெறும் நாடுகள் இரண்டு தருக?
- ❖ **அமெரிக்கா**
- ❖ **ஐரோப்பியா**

566) வளர்ச்சியடைந்த அரசியல் கலாசாரத்தை எத்தகைய அரசு முறைகளில் சிறப்பாக காணலாம்?

- **அரசியல் ரீதியாக நவீனத்துவம் அடைந்த தாராள ஜனநாயக அரசுகளில் ஆகும்**

**567)** அரசியல் கலாசாரம் எனும் சொல்லினை முதன்முதல் பயன்படுத்தியவர் யார்?
- **ஜீ. அல்மன்ட்** (1956)

**568)** அரசியல் கலாசாரம் கொண்டுள்ள முக்கிய கூறுகள் இரண்டினை குறிப்பிடுக?
- **நம்பிக்கை**
- **உணர்வு பூர்வ மனப்பாங்கு**

**569)** குறுகிய அரசியல் கலாசாரம் என்பதன் விளக்கம் யாது?
- **அரசியல் ரீதியாக நவீனத்துவமடையாத மரபுசார் அரசியல் முறைகளை கொண்ட நாடுகள் குறுகிய அரசியல் கலாசாரம் ஆகும்**

**570)** கலவை அரசியல் கலாசாரம் என்பதன் விளக்கம் யாது?
- **குறுகிய அரசியல் கலாசாரம், கீழ்படிந்த செல்லக்கூடிய அரசியல் கலாசாரம், பங்கேற்பு அரசியல் கலாசாரம் என்பன மூன்றும் ஒன்றுடன் ஒன்று கலந்திருக்கும் நிலைமை கலவை கலாசாரமாகும்**

**571)** வளர்ச்சியடைந்த அரசியல் கலாசாரத்தின் பிரதான பண்புகள் இரண்டு தருக?
- **அரசியல் முறைமை**
- **பெறுமதிகளை தீர்மானிப்பதில் மக்களின் உயர் அறிவு**

**572)** குடிமைக் கலாசாரம் எனும் நூலின் ஆசிரியர் யார்?
- **கப்ரியல் ஆல்மண்ட,சிட்னி வெர்பா**

## அரசியல் வன்முறை

**573)** வன்முறை என்றால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
- **பௌதீக ரீதியான காயப்படுத்தலை வன்முறை என்பர்**

**574)** அரசியல் வன்முறையை தீர்மானிக்கும் காரணிகள் இரண்டைத் தருக?
- **இனப்பாகுபாடுகள்**
- **அரசியல் அதிகார துஂபிரயோகம்**

**575)** **பேராசிரியர்** நைபூர் அரசியல் வன்முறைபற்றி எவ்வாறு குறிப்பிட்டுள்ளார்?
- **இருக்கின்ற ஒழுங்கமைப்புக்களை குழப்புவதும்,அழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் ஆட்களை அல்லது இடங்களை தாக்குவது அரசியல் வன்முறையாகும்.**

**576)** அரசியல் வன்முறையால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இரண்டைத் தருக?
- **உயிர் இழப்பு**
- **பொருள் இழப்பு**

**577)** வன்முறைகள் பல வடிவங்களில் இடம்பெறுகின்றன அவ்வடிவங்களில் இரண்டினை குறிப்பிடுக?
- **சமயப்புரட்சி**
- **கடத்தல்கள்**

**578)** அரசியல் வன்முறைகள் இடம்பெறுவதற்கான காரணிகள் இரண்டு தருக?
- **அரசியல் அதிகார துஸ்பிரயோகங்கள்**
- **இனப்பாகு பாடுகள்**

**579)** தற்கால ஜனநாயக நாடுகளில் ஊடகங்கள் மக்களுக்கு ஆற்றும் சேவைகள் இரண்டு தருக?
- **மக்களின் அரசியல் பங்கேற்பை அதிகரித்தல்**
- **பக்கச்சார்பற்ற நடுநிலையான ஆய்வாளர்களை உருவாக்குதல்**

**580)** தற்காலத்தில் ஊடகங்கள் எதிர்நோக்கும் பிரச்சிணைகள் இரண்டு தருக?
- **உயர்குழாம் வர்க்கத்தினரின் ஆதிக்கம் நிலவுதல்**
- **அரசியல் வாதிகளின் மிதமிஞ்சிய தலையீடு நிலவுதல்**

**581)** அரசியலில் ஊடகங்களின் பங்களிப்புக்கள் இரண்டு தருக?
- **அரசியல் பற்றிய தகவல்களை மக்களுக்கு வழங்குதல்**
- **அரசாங்கத்தை பதவி ஏற்றல்,பதவி இறக்குதல்**

**582)** நவீண ஊடக அரசியல் தத்துவம் வளர்ச்சியடைவதற்கு பங்காற்றிய ஆய்வாளர்கள் இருவரை குறிப்பிடுக?
- **வேல்டர் லிப்மென்**
- **ஜோன் டிவேய்**

## அரசியல் நடத்தை

583) அரசறிவியலில் அரசியல் நடத்தை என்பதற்கு சரியான வரைவிலக்கணம் தருக?

- ❖ **அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்த மனித சமுதாயத்தில் தனிநபர்கள் அரசியல் அதிகார பீடங்களுடன் இணைந்து செயற்பட்டு நடந்துகொள்ளும் விதம் அரசியல் நடத்தையாகும்**

584) அரசியல் நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் இரண்டைத் தருக?

- ❖ **பொருளாதாரம்,மதம்**
- ❖ **மக்களின் சமூகதரம்**

585) அரசியல் நடத்தைகளை மக்கள் விளங்கிக் கொள்ளகூடிய சந்தர்ப்பங்கள் இரண்டைத் தருக?

- ❖ **தேர்தல்களில் மக்களின் வாக்களிப்பின் போது**
- ❖ **மக்களின் பொதுஜன அபிப்பிராயங்களின் போது**

**அரசியல் உயர் குழாம் வகுப்பு**

586) அரசியல் உயர் குழாம் என்பதன் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது?

- ❖ **ஒவ்வொரு சமூகத்திலும் அரசியலிலும் கூடுதலான தகுதி நிலையினைப் பெற்று உயர்ந்து விளங்கும் பிரிவினர் உயர்குழாமினர் எனலாம்.**

587) அரசியல் உயர்குழாம் வகுப்பினர் தோன்றுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் இரண்டைத் தருக?

- ❖ **பரம்பரை,செல்வம்**
- ❖ **கல்வி,மதம்**

588) நவீண காலத்தில் அரசியல் உயர்குழாம் வகுப்பினை கோட்பாடாக வடிவமைத்த சிந்தணையாளர்கள் இருவரைத் தருக?

- ❖ **வில்பிரடோ பரேடோ**
- ❖ **மொஸ்கா**

589) தற்காலத்தில் உயர்குழாமினரில் ஆதிக்கம் எவ்வாறான காரணிகளுக்கு ஊடாக தோற்றம் பெறுகின்றன?

- ❖ **பரம்பரை**
- ❖ **வசீகர தலைமைத்துவம்**

590) இலங்கை அரசியலில் உயர்குழாம் ஆட்சி இடம்பெற்றதற்கான சான்றுகள் இரண்டினை குறிப்பிடுக?

- ❖ **S.W.R.D பண்டாரநாயக்கா பரம்பரையின் ஆட்சி**
- ❖ **மகிந்த ராஜபக்ச பரம்பரையின் ஆட்சி**

591) அரசியல் நவீணத்துவம் என்பதன் விளக்கம் யாது?

- ❖ **அரசியலில் துரித வளர்ச்சி,பரந்த சிந்தணை வளர்ச்சி,கைத்தொழில் மயமாக்கம்,கல்வி வளர்ச்சி,ஜனநாயகத் தன்மை போன்ற பல மாற்றங்களை உள்வாங்கியிருத்தல் ஆகும்**

592) அரசியல் நவீணத்துவம் பற்றி ஆய்வு செய்த ஆய்வாளர்கள் இருவரைக் குறிப்பிடுக?

- ❖ **லுசியன் டபிள்யு. பை**
- ❖ **மெக்ஸ்வெபர்**

593) அரசியல் நவீணத்துவத்தின் பிரதான பண்புகள் இரண்டினை குறிப்பிடுக?

- ❖ **நகரமயமாதல்**
- ❖ **கைத்தொழில் மயமாதல்,மக்கள் பங்குபற்றுதல்**

594) அரசியல் நவீணத்துவ முகவர்கள் இரண்டினைத் தருக?

- ❖ **உயர்குழாமினர்**
- ❖ **அரசியற்கட்சிகள்,புரட்சிகர அரசியல் தலைவர்கள்**

595) அரசியல் நவீணத்துவத்தினை அடிப்படையாகக் கொண்டு அரசியல் முறைமை வேறுபடும் இருவிதங்களை குறிப்பிடுக?

- ❖ **அரசியல் ஜனநாயகம்**
- ❖ **நவீனத்துவம் அடையும் சிலராட்சி**

596) அரசியல் நவீணத்துவத்திற்கு துணை புரியும் காரணிகள் இரண்டு தருக?

- ❖ **விஞ்ஞானத்தினதும் தொழிநுட்பத்தினதும் வளர்ச்சி**
- ❖ **ஜனநாயக நிறுவனங்களின் வெற்றிகர செயற்பாடுகள்**

597) அரசியல் அபிவிருத்தியின் பண்புகள் இரண்டு தருக?
- ❖ **தேசிய உறுதிப்பாடு நிலவுதல்**
- ❖ **அரசியல் நிறுவனங்களின் வினைதிறன் மிக்க செயற்பாடுகள்**

598) அரசியல் அபிவிருத்தியின் நேர்கணிய பண்புகள் இரண்டு தருக?
- ❖ **ஜனநாயகத்தைக் கட்டியெழுப்புதல்**
- ❖ **ஊடகங்களின் சுதந்திரமான நடத்தை**

599) அரசியல் அபிவிருத்தியின் எதிர்கணிய பண்புகள் இரண்டு தருக?
- ❖ **தேர்தல்களில் ஒழுங்கற்ற தன்மை,ஊழற் செயற்பாடுகள்**
- ❖ **செயற்திறன் குன்றிய நிர்வாகம் காணப்படல்**

600) அரசியல் அபிவிருத்தியின் போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் இரண்டு தருக?
- ❖ **அரசைக் கட்டியெழுப்புவது தொடர்பான பிரச்சினைகள்**
- ❖ **அரசியல் பங்குபற்றுதல் தொடர்பான பிரச்சினைகள்**

601) அரசியல் அபிவிருத்தியிலும் அரசியல் நவீணத்துவத்திலும் பொதுவாக தாக்கம் செலுத்தும் காரணிகள் இரண்டு தருக?
- ❖ **மரபுகள்,காலம்**
- ❖ **தலைமைத்துவம்**

602) பால்நிலை அரசியல் என்பதன் விளக்கம் யாது?
- ❖ **ஆண்பால்,பெண்பால் எனும் வேறுபாடு பாராமல் இருபாலாரும் அரசியலில் பங்குகொள்ளும் முறையே ஆகும்**

603) பால்நிலை அரசியல் பற்றி ஆய்வு செய்த ஆய்வாளர்கள் இருவரைக் குறிப்பிடுக?
- ❖ **மேரி வோல்ஸ்டன் கிராப்ட்**
- ❖ **டேலிங்கர் கில்கலட்றி**

604) பெண்கள் அரசியலில் சமத்துவமற்ற நிலையில் காணப்படுவதற்கான காரணிகள் மூன்றினைக் குறிப்பிடுக?
- ❖ **அரசியல் விழிப்புனர்வு காணப்படாமை**
- ❖ **மரபுகள்,கலாசாரத்திற்குட்பட்ட வாழ்க்கை முறைமை**

605) பெண்ணியம் பற்றிய சிந்தணையை ஆய்வு செய்த ஆய்வாளர்கள் இருவரைக் குறிப்பிடுக?
- ❖ **பார்பரா ஸ்மித்**
- ❖ **டாக்டர் தேவதாத்தா**

606) பெண்ணியம் தற்காலத்தில் எவ்வாறு பாகுபடுத்தப்படுகின்றது?
- ❖ **தாராள பெண்ணியம்,மாக்சிச பெண்ணியம்**
- ❖ **சோசலிச பெண்ணியம்,தீவிர பெண்ணியம்**

607) தீவிர பெண்ணியத்தினை சிறப்பித்துக்கூறும் நூல்கள் இரண்டு தருக?
- ❖ **பாலியல் அரசியல்**
- ❖ THE FEMALE EUNCH

608) பெண்ணியத்தில் பெண்களின் நிலை எவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ளது?
- ❖ **ஆண்களுக்க வழங்கப்படும் அதிகாரம் பெண்களுக்கும் வழங்கப்படல் வேண்டும்**
- ❖ **பெண்கள் அடிமைத்தனத்தில் இருந்து விடுவிக்கப்படல் வேண்டும்**

609) பசுமை அரசியல் என்பதன் விளக்கம் யாது?
- ❖ **மனித சமூகமும் இயற்கையும் அரசியலில் தாக்கம் செலுத்துவது ஆகும்**

610) பசுமை அரசியல் பற்றி ஆய்வுசெய்த ஆய்வாளரைக் குறிப்பிடுக?
- ❖ **றேசல் கார்சன்**

611) பசுமை அரசியல் கவனம் செலுத்தம் ஆய்வு விடயங்கள் மூன்றினை குறிப்பிடுக?
- ❖ **சூழல் மாசடைதல்**
- ❖ **புவி வெப்பமடைதல்**

612) பசுமை அரசியலை மையப்படுத்தி முதன்முதல் தோற்றம் பெற்ற அரசியற்கட்சிகள் மூன்றினை குறிப்பிடுக?
- ❖ 1972 – **அவுஸ்திரேலிய பசுமைக்கட்சி**
- ❖ 1972 – **நியூசிலாந்து பசுமைக்கட்சி**

**613)** பசுமை அரசியற்கட்சிகளின் பிரதான பணிகள் இரண்டு தருக?

- ❖ **சூழலின் சமநிலையினைப் பேணுதல்**
- ❖ **சூழல் பிரச்சினைகளை தீர்த்தல்**

**614)** ஜேர்மனிய பசுமைக்கட்சியானது வலியுறுத்தும் முக்கிய நான்கு விடயங்களை குறிப்பிடுக?

- ❖ **சூழலியல்**
- ❖ **வன்முறையின்மை அல்லது அகிம்சை**
- ❖ **சமூக நீதி சமசந்தர்ப்பம்**
- ❖ **அடிமட்ட ஜனநாயகம்**

**615)** அமெரிக்க பசுமைக்கட்சியானது வலியுறுத்தும் விடயங்களை குறிப்பிடுக?

- ❖ **பன்முகவாக்கம்**
- ❖ **பெண்ணியவாதம்,பால்நிலை சமத்துவம்**
- ❖ **எதிர்கால நோக்கம்,நிலைத்திருப்பு தன்மை**

**616)** பசுமைக்கட்சிகளின் நோக்கங்கள் பல நாடுகளில் எக்காரணிகளை அடிப்படையாகக் கொண்டு மாற்றமடைகின்றன?

- ❖ **அரசியல்,சமூக காரணிகள்**
- ❖ **பொருளாதாரக் காரணிகள்**

## ஜனநாயகம்

**617)** ஜனநாயகம் என்பதற்கு சரியான வரைவிலக்கணம் தருக?

- ❖ **மக்களே இறைமையாளர்கள்,உயர்ந்த அதிகாரம் மக்களிடம் உண்டு என வலியுருத்தம் சிந்தணை ஆகும்**

**618)** ஜனநாயகத்தின் பிரான இயல்புகள் இரண்டு தருக?

- ❖ **ஆட்சியில் மக்கள் நேரடியாக பங்குபற்றுதல்**
- ❖ **சமமான பிரஜைகள் சமமான வாய்ப்புக்கள் எனும் சித்தாந்தம் பேணப்படல்**

**619)** அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் ஜனநாயகம் வெற்றி பெறாமைக்கான காரணிகள் இரண்டு தருக?

- ❖ **பொருளாதார மந்தம்**
- ❖ **கல்வியறிவு இன்மை**

**620)** நேரடி ஜனநாயகம் என்றால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

- ❖ **ஆட்சியில் அல்லது அரசாங்க நடவடிக்கைகளில் மக்கள் நேரடியாக பங்கு கொள்ளும் முறைமையாகும்**

**621)** மறைமுக ஜனநாயகம் என்பதன் பொருள் என்ன?

- ❖ **மக்கள் தேர்தல் மூலம் தமக்கான பிரதிநிதியினை தெரிவு செய்து அவர் மூலம் தமது தேவைகளை தீர்த்துக் கொள்ளும் முறைமையாகும்**

**622)** ஜனநாயகம் சரியாகவும் நுட்பமாகவும் செயற்படுவதற்கு அதற்கு இருக்க வேண்டிய இயல்புகள் இரண்டைத் தருக?

- ❖ **அரசியல் அறிவு படைத்த மக்கள்**
- ❖ **சுதந்திரமான ஊடகங்கள்,இருகட்சி முறைமை**

**623)** ஜனநாயகத்தில் ஆபிரஹாம் லிங்கன் கூறிய வரைவிலக்கணத்தை தெளிவுபடுத்துக?

- ❖ **மக்களால் மக்களுக்கான மக்களின் ஆட்சி ஜனநாயகம்**

## உரிமைகள்

**624)** உரிமை போராட்டத்துடன் தொடர்புடைய முக்கிய புரட்சிகள் இரண்டு தருக?

- ❖ **1688 – பிரித்தானிய புரட்சி**
- ❖ **1789 – பிரான்ஸிய புரட்சி**

625) உரிமைகளின் தோற்றத்திற்கு துணை புரிந்த காரணிகள் இரண்டு தருக?

- ❖ **பகுத்தறிவு**
- ❖ **அளவுக்கதிகமான அடக்கமுறைகள்**

626) உரிமைகள் என்றால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

- ❖ **திருப்திகரமான குடியியல் மற்றும் அரசியல் வாழ்க்கையினை வாழ்வதற்குத் தேவையான நிபந்தனைகளே உரிமைகள் எனப்படும்**

627) உரிமைகளின் நடைமுறை முக்கியத்துவம் இரண்டைத் தருக?

- ❖ **அபிவிருத்தியினை அளவிடும் ஓர் அளவு கோளாக காணப்படுகின்றது**
- ❖ **மனித ஆளுமையினை விருத்தி செய்யும் அம்சமாக விளங்குகின்றது**

628) உரிமைக்கு இருக்க வேண்டிய பண்புகள் இரண்டைத் தருக?

- ❖ **சமூகத்தில் இருந்தே உரிமைகள் தோற்றம் பெறுகின்றது**
- ❖ **கடமைகளுடன் நெருக்கமான தொடர்புடையது**

629) உரிமைகளை இரண்டு விதமாக வகைப்படுத்துக?

- ❖ **சிவில் அல்லது குடியியல் உரிமைகள்**
- ❖ **அரசியல் உரிமைகள்**

630) உரிமையைப் பாதுகாப்பதற்காக அரசுகள் மேற்கொள்ளும் நடவடிக்கை ஏற்பாடு இரண்டைத் தருக?

- ❖ **அரசியல் யாப்பில் உரிமைகளை வரைதல்**
- ❖ **நீதித்துறையின் சுயாதீனத் தன்மையினைப் பேணுதல்**

631) உரிமைகளுக்கான மட்டுப்பாடுகள் இரண்டைத் தருக?

- ❖ **மற்றவர்களுக்கு இடையூறு இன்றி உரிமைகள் அனுபவிக்கப்படல் வேண்டும்**
- ❖ **நடைமுறையில் உள்ள சட்ட முறைகளுடன் ஒருமித்ததாக அமைதல் வேண்டும்**

632) உரிமைகளைப் பாதுகாக்க சர்வதேச சமூகம் மேற்கொள்ளும் வழிமுறைகள் இரண்டைத் தருக?

- ❖ **ஐக்கிய நாடுகள் தாபனம்**
- ❖ **சர்வதேச மனித உரிமை ஆணைக்குழு**

633) அடிப்படை உரிமை என்றால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

- ❖ **ஒவ்வொரு அரசும் தனது அரசியல் யாப்பில் சட்ட ரீதியாக வரையப்பட்டுள்ள உரிமைகள் அடிப்படை உரிமைகளாகும்**

634) மனித உரிமையை சரியாக வரைவிலக்கணப்படுத்துக?

- ❖ **ஒரு சமூகத்தில் மனிதன் மனிதனாக வாழ்வதற்குத் தேவைப்படும் அத்தியாவசிய நிபந்தனைகள மனித உரிமைகளாகும்**

635) மனித உரிமைக்கும் அடிப்படை உரிமைக்குமுள்ள வேறுபாடுகள் இரண்டைத் தருக?

- ❖ **அடிப்படை உரிமைகள் அரசியல் யாப்பில் வரையப்பட்டிருப்பதுடன் நாட்டிற்கு நாடு அவை வேறுபடும் ஆனால் மனித உரிமைகள் மனிதனாக பிறந்த ஒவ்வொருவருக்கும் அத்தியாவசியமானவை அனைவருக்கும் பொதுவானவை**
- ❖ **மனித உரிமைகள் முழுமையானதொன்றாக காணப்பட அதில் ஒரு பகுதியாகவே அடிப்படை உரிமைகள் விளங்குகின்றது**

636) மனித உரிமையில் பொருளாதார உரிமை என்றால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

- ❖ **ஒரு மனிதன் தான் வாழும் சமுதாயத்தில் பொருளாதார விடயங்களில் பங்கேற்க அவனுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள் ஆகும்**

637) மனித உரிமையில் பொருளாதார உரிமையில் உள்ளடக்கப்படுகின்ற விடயங்கள் இரண்டைத் தருக?

- ❖ **விரும்பிய தொழிலை மேற்கொள்ளல்**
- ❖ **தொழிலுக்கு ஏற்ப ஊதியம் பெறுதல்**

638) மனித உரிமையில் அரசியல் உரிமை என்றால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

- ❖ **ஒரு மனிதன் தான் வாழும் சமுதாயத்தில் சேர்ந்து வாழ்ந்து சமூக நலநன விருத்தி செய்து கொள்ள அவனுக்கு வழங்கப்படும் சுதந்திரங்கள் ஆகும்**

639) அரசியல் உரிமையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் இரண்டைத் தருக?

- ❖ **குறித்த வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை**
- ❖ **அரசியற்கட்சியில் இணைதல் அல்லது அமைத்தல்**

640) மனித உரிமையில் சமூகவியல் உரிமைகள் இரண்டு தருக?

- ❖ **பேச்சுரிமை,எழுத்துரிமை**
- ❖ **வாழும் உரிமை,கல்வி கற்கும் உரிமை**

641) மனித உரிமையைப் பாதுகாக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை இரண்டு தருக?
- ❖ **மனித உரிமைகள் ஆணைக்குழுவினை தாபித்தல்**
- ❖ **அதிகாரப்பிரிவினை கோட்பாட்டை நடைமுறைப்படுத்தல்**

642) கடமை என்றால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
- ❖ **ஒரு மனிதன் ஏதேனும் ஒன்றினை செய்வதற்கு அல்லது செய்யாதிருப்பதற்குத் உள்ள ஆளுமையே கடமையாகும்**

643) சட்டவியல் சார்ந்த கடமைகள் இரண்டு தருக?
- ❖ **அரசாங்கத்திற்கு கட்டுப்படல்**
- ❖ **வரி செலுத்துதல்**

644) ஒழுக்கவியல் சார்ந்த கடமைகள் இரண்டு தருக?
- ❖ **பெற்றோரை மதித்தல்**
- ❖ **முதியோரை மதித்தல்**

645) கடமைக்கும் உரிமைக்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டைத் தருக?
- ❖ **உரிமைகளை சட்ட ரீதியாக நடைமுறைப்படுத்த முடியும் ஆனால் கடமைகளை அவ்வாறு நடைமுறைப்படுத்த முடியாது**
- ❖ **உரிமைகள் சமூகத்திற்கு பொதுவானவையாக இருக்க கடமைகள் சமூகத்திற்கு சமூகம் மாறுபடும்**

646) கடமைகளின் வகைகள் இரண்டைத் தருக?
- ❖ **ஒழுக்க ரீதியான கடமைகள்**
- ❖ **சட்ட ரீதியான கடமைகள்**

647) சுதந்திரம் என்றால் என்ன?
- ❖ **பிறருக்கு இடஞ்சல் இன்றி தான் விரும்பியதை தடையின்றி அனுபவிக்கும் நிலைப்பாடு சுதந்திரமாகும்**

648) சுதந்திரத்தின் இயல்புகள் இரண்டைத் தருக?
- ❖ **சுதந்திரமும் அதிகாரமும் ஒன்றுக்கொன்று எதிரானவை**
- ❖ **தடையின்றி அனுபவிக்கும் உரிமைகளே சுதந்திரம்**

649) சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு நவீன அரசுகளில் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் இரண்டைத் தருக?
- ❖ **சுதந்திரமான நீதித்துறை**
- ❖ **அதிகாரப்பிரிவினை கோட்பாடு**

650) சுதந்திரத்தின் வகைகள் இரண்டைத் தருக?
- ❖ **நேர்கணிய சுதந்திரம்**
- ❖ **எதிர் கணிய சுதந்திரம்**

651) ஜனநாயக சமூகமொன்றில் சுதந்திரத்தை அனுபவிப்பதில் நடைமுறை கட்டுப்பாடுகள் உள்ளன. அந்தக் கட்டுப்பாடுகள் இரண்டைத் தருக?
- ❖ **சமூகம் பாதுகாக்கப்படுவதற்கு சுதந்திரம் கட்டுப்படுத்தப்படல் வேண்டும்**
- ❖ **மற்றவர்களின் உரிமைகள் மீறப்படுவதனை தடுப்பதற்கு சுதந்திரம் கட்டப்படுத்தப் படல் வேண்டும்**

652) சுதந்நிரமும் இறைமையும் ஒத்தியங்கக் கூடியவை என்பதற்கான ஆதாரங்கள் இரண்டு தருக?
- ❖ **சுதந்திரத்தை நிலை நாட்டுவதற்கான வழி இறைமை**
- ❖ **வரையறையற்ற சுதந்திரம் இறைமையின் மூலம் கட்டுப்படுத்தப்பட்டாலே முழுமையான சுதந்திரங்களை அனுபவிக்க முடியும்**

653) நேர்கணிய சுதந்திரம் என்பதன் விளக்கம் யாது?
- ❖ **சமூக நலநன கருத்திற் கொண்டு சில கட்டுப்பாடுகளுடன் மனிதன் அனுபவிக்கும் சுதந்திரம் ஆகும்**

654) எதிர்கணிய சுதந்திரம் என்பதன் விளக்கம் யாது?
- ❖ **சமூக நலநன கருத்திற் கொள்ளாது எந்தவிதமான கட்டுப்பாடுகளும் இன்றி மனிதன் அனுபவிக்கும் சுதந்திரம்**

655) சமத்துவம் என்பதன் விளக்கம் யாது?
- ❖ **திறமைகளை விருத்தி செய்து கொள்வதற்குரிய வாய்ப்புக்களே சமத்துவம்**

656) சமத்துவத்தின் பிரதான பண்புகள் இரண்டைத் தருக?

❖ **சமமான பிரஜைகள் சமமான வாய்ப்புக்கள் எனும் சித்தாந்தம் பேணப்படல்**

❖ **அனைவருக்கும் சிறப்புச் சலுகைகளை வழங்குகின்றது**

**657)** சுதந்திரத்துக்கும் சமத்துவத்துக்குமிடையிலான தொடர்புகள் இரண்டைத் தருக?

❖ **சுதந்திரத்தை முழுமையாக அனுபவிக்க சமத்துவம் அவசியம்**

❖ **சுதந்திரத்தை நிலைநாட்டுவதற்கான வழி சமத்துவம்**

**658)** சமத்துவத்தின் வகைகள் இரண்டைத் தருக?

❖ **சிவில் சமத்துவம்**

❖ **அரசியல் சமத்துவம்**

**659)** அரசியல் சமத்துவத்தின் வெளிப்பாடுகள் இரண்டு தருக?

❖ **வாக்களித்தல்**

❖ **தேர்தலில் போட்டியிடுதல்**

**660)** சமத்துவம் பற்றி காள்மாக்ஸ் குறிப்பிட்ட கருத்து யாது?

❖ **வர்க்கப் பிரிவுகள் உள்ள வரை சமத்துவம் இருக்க மாட்டாது**

**661)** சமத்துவத்தை ஏற்படுத்த சோசலிச நாடுகள் மேற்கொள்ளும் வழிமுறைகள் இரண்டு தருக?

❖ **தொழிலுக்கு எற்ற ஊதியம் வழங்குதல்**

❖ **சொத்துக்கள் தேசிய மயப்படுத்தல்**

## சட்டம்,சட்டவாட்சி

**662)** சட்டம் என்பதற்கு சரியான வரைவிலக்கணம் தருக?

❖ **சமூக நலனுக்கு முரனாக செயற்படும் மனித நடத்தைகளை கட்டுப்படுத்துவதற்கு அரசு பிறப்பிக்கும் விதிமுறைகளே சட்டமாகும்**

**663)** நியாயம் என்றால் என்ன?

❖ **சமுதாயத்தில் பாரபட்சமின்றி செயற்படும் தன்மையாகும்**

**664)** சட்டத்திற்கு மூலாதாரங்கள் இரண்டைத்தருக?

❖ **மரபுகள் வழக்காறுகள்**

❖ **மதம்,நீதிமன்ற தீர்ப்புக்கள்**

**665)** சட்டத்திற்கு இருக்க வேண்டிய அடிப்படை இயல்புகள் இரண்டு தருக?

❖ **மனிதனது வெளிவாரியான செயற்பாடுகளை கட்டுப்படுத்தம் வல்லமை கொண்டது**

❖ **சமூக நலனை அலக்காக கொண்ட அரசின் விதி முறைகள்**

**666)** சர்வதேச சட்டத்திற்குள் அடங்கப்படும் விடயங்கள் இரண்டைத் தருக?

❖ **சர்வதேச சமாதான சட்டம்**

❖ **சர்வதேச யுத்தச் சட்டம்**

**667)** சட்டத்திற்கும் ஒழுக்கத்திற்குமிடையிலான தொடர்புகள் பற்றிய கருத்துக்கள் இரண்டைத் தருக?

❖ **ஒழுக்கக் கோட்பாட்டை கருத்தில் கொண்டே அரசு சட்டங்களை உருவாக்குகின்றது**

❖ **மனிதர்களின் ஒழுக்க ரீதியிலான எண்ணங்களைெ சட்டங்களாக்கப்படுகின்றது**

**668)** சட்டத்திற்கும் ஒழுக்கத்திற்குமிடையிலான வேறுபாடு இரண்டைத் தருக?

❖ **சட்டம் இறைமையதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டது மீறினால் தண்டிக்கப் படுவோம் ஆனால் ஒழுக்க ரீதியான சட்டங்களை மீறினால் தண்டிக்கப்படுவதில்லை**

❖ **சட்டம் மனிதனின் வெளிவாரியான நடத்தைகளை கட்டுப்படுத்த ஒழுக்கம் மனிதனின் உள்வாரியான நடத்தைகளை கட்டுப்படுத்துகின்றது**

**669)** சட்டம் பற்றிய இயற்கை கோட்பாடு கூறும் கருத்து யாது?

❖ **சட்டம் முடிவற்றது எக்காலத்திற்கும் சக்தி கொண்டது அது மாற்றம் அடையாதது**

**670)** சட்டம் பற்றிய இயற்கைக் கோட்பாட்டினை விளக்கிய சிந்தணையாளர்கள் இருவரைத் தருக?

❖ **பிளேட்டோ**

❖ **ஜோன் லொக்**

**671)** சிவில் சட்டம் என்பதற்கு சரியான வரைவிலக்கணம் தருக?

❖ **பிரஜைகளுக்கும் அரசிற்கும் இடையிலான உறவுகள் பிரஜைகளுக்கும் பிரஜைகளுக்கும் இடையிலான உறவுகள் பற்றி தீர்மானிக்கும் சட்டமாகும்**

**672)** குற்றவியல் சட்டம் என்பதற்கு சரியான வரைவிலக்கணம் தருக?

- ❖ **ஒவ்வொரு வகையான குற்றங்களைப் பற்றியும் அக்குற்றங்களுக்கு உரிய தண்டனைகளைப் பற்றியும் விளக்கிக் கூறும் சட்டமாகும்**

**673)** மனிதன் ஏன் சட்டத்திற்கு அடிபணிகின்றான் என்பதற்கு ஆதாரங்கள் இரண்டைத்தருக?
- ❖ **கல்வியறிவு,பாதுகாப்பு**
- ❖ **தண்டனை,நேர்மையானது**

**674)** தேசியச் சட்டத்தில் இடம்பெறும் உட்பிரிவுகள் இரண்டைத்தருக?
- ❖ **தனிச்சட்டம்**
- ❖ **பொதுச்சட்டம்**

**675)** சட்டவாட்சி (சட்ட இறைமை) என்பதற்கு வரைவிலக்கணம் தருக?
- ❖ **ஒரு நாட்டை சட்டமே ஆளுகின்றது இச்சட்டமே அனைத்தையும் விட மேலானது என விளக்கிக் கூறும் கோட்பாடு ஆகும்**

**676)** சட்டவாட்சி யாரால் முன்வைக்கப்பட்டது?
- ❖ **ஏ.வி.டைசி**

**677)** சட்டவாட்சியின் முக்கியத்துவங்கள் இரண்டைத்தருக?
- ❖ **மக்களின் உரிமைகள் சுதந்திரங்கள் மதிக்கப்படல்**
- ❖ **அரசியல் யாப்பின் உர்தன்மை பேணப்படல்**

**678)** A.V.டைசியின் சட்டவாட்சியில் உள்ளடக்கப்பட்ட விடயங்களைத்தருக?
- ❖ **சட்டத்தின் முன் சகலரும் சமமானவர்கள்**
- ❖ **சட்டத்தின் படியேயன்றி எவரும் கைது செய்யப்படவோ தடுப்புக் காவளில் வைக்கப் படவோ கூடாது**
- ❖ **பொதுச் சட்டத்திற்கு எவரும் விதிவிலக்கல்ல**

**679)** பேராசிரியர் A.V.டைசியினால் கூறப்பட்ட சட்டவாட்சி கோட்பாடடை தற்காலத்தில் நடைமுறைப்படுத்த முடியாமைக்கான காரணிகள் இரண்டைத் தருக?
- ❖ **பயங்கரவாததடைச் சட்டம்**
- ❖ **ஊடக சுதந்திரம் இன்மை**

## பொதுத்துறை நிருவாகம்

**680)** நிர்வாகம் என்பதற்கு சரியான வரைவிலக்கணம் தருக?
- ❖ **எல்லா விவகாரங்களையும் முகாமை செய்வது அல்லது மக்களை கவனித்துக் கொள்வது ஆகும்**

**681)** பொதுத்துறை நிர்வாகம் என்பதற்கு சரியான வரைவிலக்கணம் தருக?
- ❖ **பொது மக்களின் விருப்பங்களையும் குறிக்கோள்களையும் நடைமுறைப்படுத்தும் வகையில் மக்கள் பிரதிநிதிகள் சபைகளின் ஊடாக சட்டங்களை உருவாக்கி அரசாங்கம் செயற்படுத்தும் செயன்முறையே ஆகும்**

**682)** பொதுத்துறை நிர்வாகத்தின் இயல்புகள் இரண்டைக் குறிப்பிடுக?
- ❖ **பொது மக்களின் நலன்களை அடிப்படையாகக் கொண்ட கொள்கைகள்**
- ❖ **அரசாங்கத்தால் வடிவமைக்கப்படும் கொள்கைகள்**

**683)** பொதுத்துறை நிர்வாகத்திற்கு பங்களிப்பு செய்த அறிஞர்கள் இருவரைத் தருக?
- ❖ **வூற்றோ வில்சன்**
- ❖ **குட்நௌ**

**684)**பொதுத்துறை நிர்வாகத்தின் லூதர் குல்லிக் என்பவர் "ழளன ஊழசடி பற்றிய எண்ணக்கருவை அறிமுகப்படுத்தினார். ஆவற்றின் ஒவ்வொரு எழுத்துக்கும் உரிய பொருளைத் தருக?
- ❖ **திட்டமிடல்**
- ❖ **ஒழுங்கமைப்புக்களை தாபித்தல்**
- ❖ **ஆளனியினரை சேர்த்துக் கொள்ளல்**
- ❖ **வழிப்படுத்தல்**
- ❖ **இணைத்து வைத்தல்**
- ❖ **அறிக்கையிடல்**
- ❖ **நிதி முகாமைத்துவம்**

**685)** லொனால்ட் வைட் பொதுத்துறை நிருவாகம் பற்றி கூறிய கருத்து யாது?

❖ **இயக்கத் தன்மை மிக்க ஒரு கலையே பொதுத்துறை நிருவாகம்**

**686)** கென்றி பொலட் கூறும் பொதுத்துறை நிர்வாகத்தின் படிநிலைகள் யாவை?

❖ **திட்டமிடல்**
❖ **ஒழுங்கமைத்தல்**
❖ **கட்டளையிடுதல்**
❖ **இணைத்தல்**
❖ **கட்டுப்படுத்தல்**

**687)** பொதுத்துறை நிர்வாகத்தின் அடிப்படை முக்கியத்துவங்கள் இரண்டைத் தருக?

❖ **பொது மக்களுக்கு பாரிய சேவைகளை வழங்குகின்றது**
❖ **சட்டவாக்கம் செய்வதன் மூலம் சட்டத்துறைக்கு உதவுகின்றது**

**688)** பொதுத்துறை நிர்வாகத்தின் இடம் பெறும் முக்கிய படிநிலைகள் மூன்றைத் தருக?

❖ **தீர்மானம் எடுத்தல்**
❖ **நடைமுறைப்படுத்தல்**
❖ **நிறைவேற்றுதல்**

**689)** பொதுக்கொள்கைக்கும், நிர்வாகத்துக்கும் இடையிலான தொடர்புகள் இரண்டைத் தருக?

❖ **அரச இயந்திரம் இயங்குவதற்கு பொதுத்துறை நிருவாகம் அவசியம் அதுபோல நிருவாகத்தின் இயக்கத்திற்கு பொதுக் கொள்கை அவசியம்**
❖ **நாட்டு மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய இவ்விரண்டு நிறுவனங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு பட்டு இயங்க வேண்டும்**

**690)** பொதுக் கொள்கை என்றால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

❖ **அரசாங்கம் தனது ஆட்சிக்காலத்தில் எதனைச் செய்ய வேண்டும் எதனைச் செய்யக்கூடாது எனக்கூறும் கொள்கைகளை ஆகும்**

**691)** பொதுக் கொள்கையின் பிரதான பண்புகள் இரண்டு தருக?

❖ **இலக்கை அடிப்படையாகக் கொண்டது**
❖ **செயல் வழிமுறையுடன் தொடர்புபட்டது**

**692)** பொதுகொள்கை உருவாக்கத்தின் போது தகவல்களை பெறக்கூடிய வழிமுறைகள் இரண்டு தருக?

❖ **உள்ளக வழிமுறை**
❖ **வெளியக வழிமுறை**

**693)** அரசியல் நிருவாகத்தையும் பொதுத்துறை நிருவாகத்தையும் பிரித்தாராய்ந்த அறிஞர் யார்?அவரால் எழுதப்பட்ட நூல் யாது?

❖ **வூற்றோ வில்சன்**
❖ **நூல் - பொதுத்துறை நிருவாகம்**

**694)** பொதுக் கொள்கை உருவாக்கத்தில் ஈடுபடும் நபர்கள் இருவரைத் தருக?

❖ **அரசின் தலைவர்கள்**
❖ **பொது மக்கள்**

**695)** பொதுக் கொள்கையினை வகுப்பதில் ,ஈடுபடும் நிறுவனங்கள் இரண்டைத் தருக?

❖ **சட்டமன்றம்**
❖ **சிவில் சமூகம்**

## மோதல்களும் மோதல் முகாமைத்துவங்களும்

**696)** முகாமைத்துவம் என்றால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

❖ **வளங்களை உத்ததமமாகவும் வினைதிறன் மிக்க வகையிலும் பயன்படுத்துவதன் மூலம் வினைதிறனான குறிக்கோள்களையும் இலக்குகளையும் அடைந்து கொள்வதற்குரிய பணிகளை கொண்ட செயன்முறையாகும்**

**697)** முகாமைத்துவத்தால் மக்களுக்கு கிடைக்கும் நன்மைகள் இரண்டைத் தருக?

❖ **பாரிய பொதுநல சேவைகளை பெற்றுக் கொள்ளல்**
❖ **மக்கள் மத்தியில் உருவாகும் கருத்து வேறுபாடுகளை நீக்குதல்**

**698)** மோதல் என்பதற்கு சரியான வரைவிலக்கணம் தருக?

- ❖ **இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட நபர்களிடையே அல்லது தரப்பினரிடையே அல்லது நாடுகளிடையே நிலவும் உடன்பாடின்மை மோதல் ஆகும்**

699) முரண்பாட்டின் முதன்மையான இயல்புகள் இரண்டைக் குறிப்பிடுக?
- ❖ **இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட தரப்புக்கள் பங்குபற்றல்**
- ❖ **நடத்தை அழிவு தாக்கத்தை ஏற்படுத்துவதாகவோ அல்லது மற்ற தரப்பினை நீக்குவதாகவோ இருக்கும்**

700) மோதலின் பிரதான மூலங்களை தருக?
- ❖ **சமூக கலாசார காரணிகள்**
- ❖ **பொருளாதார காரணிகள்**
- ❖ **அரசியல் காரணிகள்**

701) ஓர் அரசினுள் ஏற்படும் முரண்பாட்டின் வகைகள் இரண்டைத்தருக?
- ❖ **சமூக அல்லது இனத்துவ முரண்பாடு**
- ❖ **அரசியல் அல்லது கருத்தியல் முரண்பாடு**

702) முரண்பாடு ஏற்படுவதற்கான பிரதான காரணங்கள் இரண்டைத்தருக?
- ❖ **வளங்கள்**
- ❖ **நலன்கள்**

703) ஒருநாட்டின் மோதல்களை தீர்ப்பதன் மூலம் ஏற்படக்கூடிய நன்மைகள் இரண்டைத் தருக?
- ❖ **இரு தரப்பினரதும் அடிப்படை பிரச்சினைகள் தீர்க்கப்படும் போது உடன்பாடான மனப்பாங்கினை உருவாக்க முடியும்**
- ❖ **இரு தரப்பினருக்கும் வெற்றி கிடைப்பதனால் பரஸ்பர நம்பிக்கை,கூடிவாழும் எண்ணம்,புரிந்துணர்வு அதிகம் வளர்ச்சியடையும்**

704) மோதல் தவிர்ப்பின் போது ஒருவரிடம் இருக்க வேண்டிய அடிப்படை பண்புகள் இரண்டைத் தருக?
- ❖ **முன் எச்சரிக்கை செய்யும் பண்புடையவராக இருக்க வேண்டும்**
- ❖ **சிறந்த பேச்சாற்றல் கொண்டவராக இருக்க வேண்டும்**

705) மோதல்கள் மூலம் ஏற்படும் சாதகமான விளைவுகள் இரண்டு தருக?
- ❖ **மனித உரிமைகளை உணரச்செய்தல்**
- ❖ **பரஸ்பர புரிந்துணர்வுக்கு வழிவகுத்தல்**

706) மோதல்கள் மூலம் ஏற்படும் பாதக விளைவுகள் இரண்டு தருக?
- ❖ **மனித உரிமைகள் மீறப்படல்**
- ❖ **பொருளாதார சமூக சீரழிவுகள் இடம்பெறல்**

707) மோதல் இணக்கப்பாடு என்றால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
- ❖ **முரண்பாட்டில் ஈடுபடுகின்ற இருதரப்பினரும் அழிவை ஏற்படுத்தாத வகையில் உடன்பாடடைதல் ஆகும்**

708) மோதல் முகாமைத்துவம் என்பதற்கு வரைவிலக்கணம் தருக?
- ❖ **வேறுபாடுகளையும் பிரிவினைகளையும் ஆக்கபூர்வமானதாகவும் ஆரோக்கியமானதாகவும் விவேகத்துடன் கையாண்டு சிறந்த தீர்வினைப்பெறல் ஆகும்**

709) ஒப்பந்தம் மூலம் முரண்பாடு இணக்கப்பாட்டினை ஏற்படுத்திய சந்தர்பங்கள் இரண்டினை குறிப்பிடுக?
- ❖ **1996 பெரிய வெள்ளி வடஅயர்லாந்து ஒப்பந்தம்**
- ❖ **2002 தமிழீழ விடுதலை புலிகளும் இலங்கை அரசுக்குமிடையிலான ஒப்பந்தம்**

710) முரண்பாட்டு நிலைமாற்றம் என்பதை வரைவிலக்கணப்படுத்துக?
- ❖ **முரண்பாட்டில் பங்குபெறும் தரப்பினர்களின் ஆர்வங்கள்,பிரச்சினைகள்,செயற்பாடுகள் என்பவற்றில் மாற்றங்களை ஏற்படுத்துவதே முரண்பாட்டு நிலைமாற்றம் எனப்படும்**

711) பல்லின கலாசாரம் நிலவும் நாடுகளில் மோதல்கள் ஏற்படுவதற்கான காரணிகள் இரண்டு தருக?
- ❖ **பக்கம் சார்பான அரச கொள்கைகள்**
- ❖ **இன ரீதியான பாகுபாடுகள்**

712) மோதல் முக்கோணியில் இடம்பெறும் மூன்று அம்சங்களை குறிப்பிடுக?
- ❖ **கட்டமைப்பு**
- ❖ **உளப்பாங்கு**
- ❖ **நடத்தை**

713) ஜொகான் கல்துங்கின் வன்முறை வடிவங்கள் மூன்றில் இரண்டினை குறிப்பிடுக?

- **நேரடி வன்முறை**
- **கட்டமைப்பு வன்முறை**
- **கலாசார வன்முறை**

**714)** முரண்பாட்டினை அகிம்சை மூலம் தீர்பதனால் ஏற்படும் விளைவுகள் இரண்டு தருக?
- **உயிர்ச்சேதம் தவிர்க்கப்படும்**
- **தீர்வு நிரந்தரமானதாக இருக்கும்**

**715)** முரண்பாட்டுடன் தொடர்புடைய பொருளாதார காரணிகள் இரண்டு தருக?
- **வறுமை**
- **பொருளாதார ஏற்றத்தாழ்வு**

**716)** மத்தியஸ்தத்தின் பயன்பாடுகள் இரண்டைத் தருக?
- **மோதல் தரப்பினரிடையே உடன்பாடான மனப்பாங்கை வருவாக்க முடியும்**
- **மோதல் வளர்ச்சியடைவதை தடுக்க முடியும்**

**717)** ஒரு மத்தியஸ்தரிடம் இருக்க வேண்டிய பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக?
- **வயதிற்கு வராதவர்கள்,மனரீதியான நோய்,அல்லது ஊனமுற்றவர்கள் பங்குபற்ற முடியாது**
- **இரு தரப்பினருக்கும் வெற்றி தரும் வகையிலான சூழலை உருவாக்குதல் வேண்டும்**

**718)**ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு மோதலினால் ஏற்படும் பாதிப்புக்கள் இரண்டைக் குறிப்பிடுக?
- **தேசிய ஒருமைப்பாட்டை கட்டியெழுப்ப முடியாமை**
- **வீனான பொருளாதார செலவுகள்**

**719)** ஒரு நாட்டின் மோதல்களை முடிவுக்கு கொண்டுவர முடியாவிட்டால் ஏற்படக் கூடிய தீமைகள் இரண்டைக் குறிப்பிடுக?
- **சமூகத்தில் அமைதியின்மை ஏற்படும்**
- **அரசியல் சமூக பொருளாதார சீரழிவுகள் ஏற்படும்**

## தேசிய அரசியல்,சர்வதேச அரசியல்

**720)** சர்வதேச அரசியல் என்பதற்கு சரியான வரைவிலக்கணம் தருக?
- **இறைமை அதிகாரம் பொருந்திய பல தேசங்களுக்கு இடையிலான தொடர்புகள் உறவுகள்**

**721)** சர்வதேச அரசியலைப் பற்றி பல்வேறு அறிஞர்கள் பல்வேறு கருத்துக்களைக் கூறியுள்ளனர் அவர்களில் இருவரின் கருத்துக்களைத் தருக?
- **கான்ஸ் ஜே.மொகந்தே –"அரசுகளுக்கு இடையில் அதிகாரத்தைப் பயன்படுத்தி நடாத்தப்படுகின்ற போராட்டம் ஆகும்**
- **தோம்ஸன் - "தேசங்களுக்கு இடையிலான போட்டி மற்றும் அவற்றுக்கு இடையிலான தொடர்புகளை சீராக்கி மேம்படுத்தும் நிலைகள் நிறுவனங்கள் பற்றிய கல்வி ஆகும்**

**722)** தேசிய அரசியலுக்கும் சர்வதேச அரசியலுக்கும் உள்ள வேறுபாடுகள் அடங்கிய பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக?
- **தேசிய அரசியலில் ஓழுங்கு நியமங்கள் பின்பற்றப்படும் ஆனால் சர்வதேச அரசியலில் கபடகம்நாசகரம்,ஏமாற்று போன்ற விடயங்கள் முக்கியம் பெறுகின்றது**
- **தேசிய அரசுகள் தமது நலன்களை நிலை நாட்ட போரை ஆயுதமாக பயன்படுத்துகின்றது ஆனால் சர்வதேச அரசியல் சமாதான வழிமுறைகளே பயன்படுத்தப்படுகின்றது**

**723)** சர்வதேச அரசியல் பாடப்பரப்பில் இடம்பெறும் விடயங்கள் இரண்டு தருக?
- **தேசிய அதிகாரம்**
- **வெளிநாட்ட கொள்கைகள்**

**724)** சர்வதேச அரசியலை வேறு எவ்வாறு அழைப்பர்?
- **சர்வதேச உறவுகள்**
- **பன்னாட்டு அரசியல்**

**725)** சர்வதேச அரசியலில் தேசிய அரசின் பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக?
- **அரசின் அல்பலம்**
- **அரசின் இறைமை அதிகாரம்**

**726)** சர்வதேச அரசியலில் அரசல்லாத செயற்பாட்டாளர்களின் பெயர்கள் இரண்டைத்தருக?
- **பிராந்திய நிறுவனங்கள்**
- **உயர் தேச நிறுவனங்கள்**

727) சர்வதேச அரசியல் கருவிகள் இரண்ட தரக?

- ❖ **இராஜதந்திரம்**
- ❖ **சர்வதேச வர்த்தகம்**

728) சர்வதேச அரசியலின் உயர்தேச நிறுவனங்களினதின் பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக?

- ❖ **தனிப்பட்ட நாடுகளை தனது உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது**
- ❖ **உயர் அதிகாரத்தை கொண்டமைந்தள்ளது**

729) சர்வதேச அரசியலில் அரச சார்பான நிறுவனங்கள் இரண்டைக் குறிப்பிடுக?

- ❖ **உலக சுகாதார தாபனம்**
- ❖ **உலக தபால் யூனியன்**

730) சர்வதேச அரசியலில் அரசசார்பற்ற இரண்டு நிறுவனங்களைக் குறிப்பிடுக?

- ❖ **சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்**
- ❖ **சர்வதேச மன்னிப்பு சபை**

731) சர்வதேச அரசியலில் அரசுகளின் வெளிவாரியான நோக்கங்கள் இரண்டைத் தருக?

- ❖ **தேசிய பாதுகாப்பு**
- ❖ **தேசிய கௌரவம்**

732) தேசிய பாதுகாப்பு என்றால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

- ❖ **ஓர் நாட்டை வெளி அச்சுருத்தல் மற்றும் ஆக்கிரமிப்புக்களில் இருந்து பாதுகாப்பது ஆகும்**

733) சர்வதேச அரசியலில் தேசிய கௌரவம் என்பதற்கு வரைவிலக்கணம் தருக?

- ❖ **பல அரசுகளுக்கு மத்தியில் தான் பலமிக்கவனாக எழுச்சி பெறவதும் அந்நிலையினை தொடர்ந்தம் தக்கவைத்தக் கொள்வதும் ஆகும்**

734) தேசிய கௌரவத்தை நிர்ணயிக்கும் காரணிகள் இரண்டைத்தருக?

- ❖ **ஏனைய அரசுகளின் தேசிய கௌரவம் அங்கிகரிக்கப்படல்**
- ❖ **பொருளாதார சக்தி.இராணுவம் போன்றவற்றின் நிகழ்கால திறன்**

735) சர்வதேச அரசியலில் வெளிநாட்டுக் கொள்கையை வரைவிலக்கணப்படுத்துக?

- ❖ **சர்வதேச அரசியலில் தேசிய நலன்களின் செயற்பாட்டையும் செயல் முறையையும் இயக்கம் சக்கரம் அகும்**

736) வெளிநாட்டுக் கொள்கையினை நிர்ணயிக்கும் காரணிகள் இரண்டைத்தருக?

- ❖ **உள்ளக காரணிகள் - புவியியல் நிலை.தேசிய ஆற்றல்**
- ❖ **வெளியகக் காரணி - சர்வதேச நிறுவனங்கள்,சர்வதேச பொதுசன அபிப்பிராயம்**

737) சர்வதேச அரசியலில் இராஜதந்திரம் என்றால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

- ❖ **சர்வதேச அரசியலில் பேச்சுவார்த்தைகள் மூலம் சர்வதேச உறவைமுகாமைப்படுத்தல் அல்லது அரச உறவுகளை சந்தர்பங்களுக்கு ஏற்ப ஒழுங்கமைத்துக் கொள்வது ஆகும்**

738) தற்கால இராஜதந்திர முறையின் பிரதான் பண்புகள் இரண்டைத் தருக?

- ❖ **பாராளுமன்ற இராஜதந்திரம்**
- ❖ **திறந்த இராஜதந்திரம் - நேரடி பேச்சு வார்த்தைகள்**

739) சர்வதேச அரசியலின் வெளிநாட்டுத் தூதுவர்களின் கடமைகள் இரண்டைக் குறிப்பிடுக?

- ❖ **வெளியுறவுக் கொள்கைகளை தீர்மானித்தல்**
- ❖ **வெளிநாட்டில் தமது நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தல்**

740) போர் என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

- ❖ **சர்வதேச அரசியலில் தேசிய அரசுகள் தமது தேசிய நலன்களையும்,வெளிவாரிளான நோக்கங்களையும் பூர்த்தி செய்ய பயன்படுத்தும் ஓர் கருவியாகும்**

741) சர்வதேச அரசியலின் போரின் வகைகள் இரண்டைக் குறிப்பிடுக?

- ❖ **முழுமையான போர்,வரையறுக்கப்பட்ட போர்**
- ❖ **கொரில்லா போர்,சிவில் போர்**

742) போரை உருவாக்கும் காரணிகள் இரண்டைக் குறிப்பிடுக?

- ❖ **உளவியல் காரணிகள்**
- ❖ **பொருளாதார,அரசியல் காரணிகள்**

743) சர்வதேச அரசியலில் அரசுகள் தமது அரசியல் இலக்குகளை அடைய பல்வேறு பொருளாதார கருவிகளை பயன்படுத்துகின்றனர். அக்கருவிகள் இரண்டைத் தருக?

- ❖ **பங்குகளும் அனுமதிப் பத்திரங்களும்**
- ❖ **கடன்களும் பணக்கொடைகளும்**

744) கூட்டுப்பாதுகாப்பின் இரு வடிவங்களும் எவை?

- ❖ **கற்பனை ரீதியான கூட்டுப்பாதுகாப்பு**
- ❖ **யதார்த்த பூர்வமான கூட்டுபாதுகாப்பு**

745) சர்வதேச நாடுகளை கட்டுப்படுத்துகின்ற உத்திகள் இரண்டைத் தருக?
- ❖ **சர்வதேச சட்டங்கள்**
- ❖ **வலுச்சம நிலை**

746) சர்வதேச சட்டம் என்பதற்கு சரியான வரைவிலக்கணம் தருக?
- ❖ **சர்வதேச ரீதியாக அரசுகளை கட்டுப்படுத்தி ஒழுங்கபடுத்தவும் அரசுகளுக்க இடையிலான உறவுகளை கட்டுப்படுத்தவும் பயன்படுத்தப்படுகின்ற ஒழுங்குவிதிகளின் தொகுப்பு ஆகும்**

747) சர்வதேச சட்டம் ஏன் நாடுகளுக்கு அவசியம் என்பதற்கான காரணம் இரண்டினைத் தருக?
- ❖ **நாடுகளுக்கிடையில் இடம்பெறுகின்ற மோதல்களை தடுப்பதற்கு**
- ❖ **பலம் பொருந்திய நாடகளின் தான்தோன்றித் தனமான செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு**

748) சர்வதேச சட்டத்தின் மூலாதாரங்கள் இரண்டிணைத் தருக?
- ❖ **உரோமனியச் சட்டம்**
- ❖ **மரபுகளும் வழக்காறுகளும்**

749) சர்வதேச அரசியலில் சர்வதேச சட்டத்தின் பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக?
- ❖ **ஒழுங்கு நியமம்,சட்ட நியமங்களின் அடிப்படையில் உருவாக்கப்படுகின்றது**
- ❖ **ஒழுங்கு,உறுதிப்பாடு போன்றவற்றை நிலைநாட்டுகின்றது**

750) சர்வதேச சட்டத்தின் குறைபாடுகள் இரண்டினைத் தருக?
- ❖ **சர்வதேச சட்டம் யாரால்?நடைமுறைப்படுத்தப்படுகின்றது யாருக்காக பயன்படுத்தப்படுகின்றது எனும் வினா தோற்றம் பெற்றுள்ளமை**
- ❖ **அரசுகளின் வெளிவாரியான நடத்தைகளை கட்டப்படுத்தும் அதிகாரம் அற்ற நிலையில் காணப்படுதல்**

751) சர்வதேச அரசியலில் ஆயுதப்பரிகரணம் என்றால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
- ❖ **சர்வதேச சமூகத்தில் போர்களை தடுத்து சமாதானத்தை நிலைநிருத்துவதற்காக பயன்படுத்தும் ஓர் கட்டுப்பாட்டு பொறிமுறையே ஆகும்**

752) சர்வதேச அரசியலில் உள்ள நாடுகளுக்கு ஆயுதப் பரிகரணம் ஏன் தேவை என்பதற்காக ஆதாரங்கள் இரண்டினைத் தருக?
- ❖ **உயர்குழாம் வகுப்பினரின் இருப்பிறகு**
- ❖ **பொருளாதார,சமூக தேவைகள்**

753) ஆயுதப்பரிகரணம் கொண்டிருக்க வேண்டிய பண்புகள் இரண்டினைத் தருக?
- ❖ **திடீர் போர் வருவதனை தடுப்பதாக அமைதல் வேண்டும்**
- ❖ **போரை மனிதாபிமானமாக்கும் வகையில் சில ஆயுதங்களை கட்டுப்படுத்த வேண்டும்**

754) வலுச்சமனிலை என்பதற்கு சரியான வரைவிலக்கணம் தருக?
- ❖ **சர்வதேச அரசியலில் தேசிய அதிகாரத்தை ஒரு குறிப்பிட்ட வழியில் ஒழுங்குபடுத்தும் செயன்முறையே வலுச்சமநிலை ஆகும்**

755) வலுச் சமனிலையைப் பற்றி ஆய்வு செய்த இரு அறிஞர்களைத் தருக?
- ❖ **ப்பை**
- ❖ **டிக்கினொன்**

756) வலுச் சமனிலை நுட்பமாக பேணுவதற்கு பல உபாயங்கள் உள்ளன. அவ் உபாயங்கள் வழிமுறைகள் இரண்டினைத் தருக?
- ❖ **ஆயுதபாணியாக்கம்,ஆயுதபரிகரணம்**
- ❖ **தலையிடலும்,தலையிடாமையும்**

757) அதிகார சமனிலையின் வகைப்பாடுகள் இரண்டைத் தருக?
- ❖ **சாதாரண வலுச்சமநிலை**
- ❖ **பல்தன்மை வலுச்சமநிலை**

758) வலுச்சமநிலையின் இயல்புகள் இரண்டு தருக?
- ❖ **அரசுகளுக்கு இடையில் அதிகாரம் சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டிருத்தல்**
- ❖ **சமாதானத்திற்கும்,உறுதிப்பாட்டிற்கும் உரிய அதிகாரமாக இருத்தல்**

759) சர்வதேச அரசியலைக் கற்பதனால் நாம் அடையும் பயன்பாடுகள் இரண்டு தருக?
- ❖ **சர்வதேச அரசியல் போக்குகளை அறிந்து கொள்ள முடியும்**
- ❖ **சர்வதேச அபிப்பிராயங்களை அறிந்து கொள்ள முடியும்**

**நூல்களும் அவற்றின் ஆசிரியர்களும்**

760) உளவியலும் அரசியலும் **(டபிள்யூ.எச்.ஆர்.றிவர்ஸ்)**
761) உளநோயியலும் அரசியலும்**(றொல்ட் லாஸ்வெல்)**
762) நான்காம் உலகத்தின் வளப்பிரச்சிணை**(ஆர்.ஜி.றிட்கெர்)**
763) சர்வதேசசட்டம் **(கால்வோ)**
764) the general theory of interest and money**(கெயின்ஸ்)**
765) எனதுபோராட்டம் **(கிட்லர்)**
766) நிருவாக நடத்தை **(ஏ.சைமன்)**

**பிரித்தானிய அரசியல் திட்டம்**

767) பிரித்தானிய மக்களின் கலாசார அம்சங்கள் இரண்டிணைக் குறிப்பிடுக?
- **பழமையினைப் போற்றும் பண்புடையவர்கள்**
- **அமைதியில் நாட்டம் கொண்டவர்கள்**

768) பிரித்தானிய அரசியல் யாப்பின் உள்ளுறுப்புக்கள் இரண்டு தருக?
- **உரிமை விண்ணப்பம்**
- **உரிமைச் சட்டம்**

769) பிரித்தானியாவில் மரபுகளாக பின்பற்றப்பட்டு வரும் விடயங்கள் இரண்டு தருக?
- **முடியாட்சிமுறை (மகாராணி)**
- **பிரபுக்கள் சபை**

770) பிரித்தானிய அரசியலமைப்பு பல சிறப்புத் தன்மைகளைக் கொண்டுள்ளது அவற்றில் இரண்டு தன்மைகளைக் குறிப்பிடுக?
- **மரபுகள் சம்பிரதாயங்களை பின்பற்றி வளர்ச்சியடைந்து வருகின்றது**
- **வரையப்படாத நெகிழும் அரசியல் திட்டம்**

771) பிரித்தானிய ஒற்றையாட்சி முறையின் இயல்புகள் இரண்டு தருக?
- **வரையப்படாத அரசியல் யாப்பு**
- **அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்பு**

772) முடியாட்சிமுறை பிரித்தானியாவில் தனித்துவம் வாய்ந்தது இதற்கான ஆதாரங்கள் இரண்டு தருக?
- **பழமையினைப் போற்றும் சின்னம்**
- **ஆளுகின்ற ஆனால் ஆட்சி புரியாத நடுநிலைமை முறைமை**

773) பிரித்தானிய பாராளுமன்றத்தின் இரு சபைகளையும் குறிப்பிடுக?
- **பொது மக்கள் சபை**
- **பிரபுக்கள் சபை**

774) பிரித்தானிய பாராளுமன்றம் அதி உயர் அதிகாரத்தன்மை கொண்டது. அதற்கான ஆதாரங்கள் இரண்டைத் குறிப்பிடுக?
- **பாராளுமன்றம் இயற்றும் சட்டங்களை எந்த அமைப்பும் தடுத்து நிறுத்தி விளக்கம் அளிக்க முடியாது**
- **பாராளுமன்றம் எச்சட்டங்களையும் உருவாக்கும் நடைமுறையில் உள்ள சட்டங்களை நீக்கும் அதிகாரம் பெற்றது**

775) பிரித்தானியாவில் மரபுகளாக பின்பற்றப்பட்டு வரும் விடயங்கள் இரண்டு தருக?
- **அமைச்சரவை சார்ந்த மரபுகள் வழக்காறுகள்**
- **பொதுநலவாய தொடர்புகள்**

776) பொதுமக்கள் சபையின் சிறப்பியல்புகள் இரண்டைத் தருக?
- **சபை உறுப்பினர்கள் தமது விண்ணப்பங்களையும் மக்களின் விண்ணப்பங்களையும் அரசுக்கு விண்ணப்பிக்க முடியும்**
- **அதிகாரம் கூடிய,மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஓர் மன்றம்**

777) பிரித்தானிய பொதுமக்கள் சபையின் அதிகாரங்கள் இரண்டைத் தருக?

- ❖ **சட்டவாக்க அதிகாரம்**
- ❖ **நிருவாக,நிதி சார்ந்த அதிகாரம்**

**778)** பிரித்தானிய பொதுமக்கள் சபைக்கு தெரிவு செய்யப்படுவோர் கொண்டிருக்க வேண்டிய தகமைகள் இரண்டினை குறிப்பிடுக?
- ❖ **21 வயதினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்**
- ❖ **குற்றச்செயல்கள் புரியாத நீதிமன்றங்களால் தண்டிக்கப்படாதவராக இருத்தல் வேண்டும்**

**779)** பிரித்தானியப் பாராளுமன்றத்தின் சபாநாயகரின் அதிகாரங்கள் இரண்டைத் தருக?
- ❖ **சபையின் கூட்டத் தொடர்களை நடாத்துதல்**
- ❖ **சபையில் கட்சி சார்பின்றி தீர்மானங்களை நிறைவேற்றுதல்**

**780)** பிரித்தானியப் பாராளுமன்றத்தின் இயல்புகள் இரண்டு தருக?
- ❖ **பாரளுமன்ற இறைமைக் கோட்பாட்டின் படி தாபிக்கப்பட்டது**
- ❖ **பழமை வாய்ந்த பாராளுமன்றம்**

**781)** பிரித்தானியாவில் பாராளுமன்ற ஜனநாயகம் தோற்றம் பெற்றமைக்கு செல்வாக்குச் செலுத்திய இரு காரணிகள் தருக?
- ❖ **1688 மான்புறு புரட்சி**
- ❖ **மக்களின் பகுத்தறிவு**

**782)** பிரித்தானிய பாராளுமன்றத்தின் பிரபுக்கள் சபையின் தன்மைகள் இரண்டு தருக?
- ❖ **பழமையினை போற்றும் ஓர் இரண்டாம் மன்றமாக விளங்குதல்**
- ❖ **தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படாத உறுப்பினர்களை உள்ளடக்கியது**

**783)** பிரித்தானிய பிரபுக்கள் சபையின் அதிகாரங்கள் குறைக்கப்பட்ட இரு சந்தர்பங்களை தருக?
- ❖ **1911ம் ஆண்டு திருத்தம்**
- ❖ **1948ம் ஆண்டு திருத்தம்**

**784)** பிரித்தானிய பிரபுக்கள் சபையில் அங்கம் வகிக்கும் பிரபுக்களுள் இருவகையான பிரபுக்களை குறிப்பிடுக?
- ❖ **பரம்பரைப் பிரபுக்கள்**
- ❖ **சட்டப்பிரபுக்கள்**

**785)** பிரித்தானிய பிரபுக்கள் சபையின் குறைபாடுகள் இரண்டைத் தருக?
- ❖ **அவசர தீர்மானத்தை தடுத்து நிறுத்தி தடைகளை உண்டுபண்ணும் ஓர் இரண்டாம் மன்றமாக காணப்படுகின்றது**
- ❖ **மக்களுக்கு பொறுப்பு கூறுவதில் இருந்து விடுபட்டு செயற்பட்டனர்**

**786)** பிரித்தானிய பிரபுக்கள் சபையின் நன்மைகள் இரண்டைத் தருக?
- ❖ **1ம் மன்றத்தின் தான்தோன்றித் தனமான செயற்பாடுகளை கட்டுப்படுத்துகின்றது**
- ❖ **பாண்டித்திய சேவைகளை மக்களுக்கு வழங்குகின்றது**

**787)** பிரித்தானிய மகாராணியின் மரபு ரீதியான பணிகள் இரண்டு தருக?
- ❖ **கௌரவ விழாக்களில் கலந்து கொண்டு சிறப்பித்தல்**
- ❖ **பொது நலவாய மாநாட்டில் பிரித்தானியாவை பிரதிநிதித்துவப்படுத்தல்**

**788)** மகாராணியின் சட்ட ரீதியான பணிகள் இரண்டு தருக?
- ❖ **பாராளுமன்றத்தை கூட்டுதல்,கலைத்தல்,ஒத்திவைத்தல்**
- ❖ **சட்ட மசோதாக்களுக்கு இசைவளித்தல்**

**789)** பிரித்தானிய மகாராணியின் பாதுகாப்பு தொடர்பான அதிகாரங்கள் இரண்டு தருக?
- ❖ **முப்படைத் தளபதிகளை நியமித்தல்**
- ❖ **போர் சமாதானம் தொடர்பாக இருதி தீர்மானம் எடுத்தல்**

**790)** பிரித்தானிய நாமநிருவாகியின் நிர்வாகத்துறை சார்ந்த அதிகாரம் இரண்டு தருக?
- ❖ **பிரதமரை தெரிவு செய்தல்**
- ❖ **உயர் நிர்வாக திணைக்கள தலைவர்களை தெரிவு செய்தல்**

**791)** பிரித்தானிய நாமநிருவாகியின் பாராளுமன்றம் சார்ந்த அதிகாரங்கள் இரண்டைத் தருக?
- ❖ **சட்டமன்றத்தில் சிம்மாசன பிரசங்க உரையினை நிகழ்த்துதல்**
- ❖ **சட்டத்துறையினை கூட்டுதல்,கலைத்தல்,ஒத்திவைத்தல்**

**792)** பிரித்தானிய நாமநிருவாகியின் நீதித்துறை சார்ந்த அதிகாரங்கள் இரண்டைத் தருக?
- ❖ **சட்டப்பிரபுக்கள் 12பேரை நீதிபதிகளாக நியமனம் செய்தல்**
- ❖ **குற்றவாளிகளுக்கு பொது மன்னிப்பு வழங்குதல்**

**793)** பிரித்தானியாவில் மன்னா் பதவி நீடிப்பது ஏன் என்பதற்கான ஆதாரங்கள் இரண்டினைத் தருக?

- ❖ **அரசியலில் கட்சி சார்பின்றி தமது செயற்பாடுகளை மேற்கொள்கின்றார்**
- ❖ **முடி ஆளுகின்றார் ஆனால் ஆட்சி புரிவதில்லை**

**794)** பிரித்தானிய அமைச்சரவையின் தன்மைகள் இரண்டைத் தருக?

- ❖ **கூட்டுப்பொறுப்புடன் செயற்படும் அமைச்சர்கள்**
- ❖ **அரசாங்கத்தின் முக்கிய பங்கதாரர்களாக செயற்படுதல்**

**795)** பிரித்தானிய அமைச்சரவை பற்றி வூற்றோ வில்சன் குறிப்பிட்டுள்ள கருத்தினை தருக?

- ❖ **"நட்சத்திரங்கள் சூழவுள்ள சந்திரனைப் போன்றவரே பிரித்தானிய பிரதமர்"**

**796)** பிரித்தானிய அமைச்சரவையினை கட்டுப்படுத்தவதற்க பாராளுமன்றத்திற்க இருக்கும் சந்தர்பங்கள் இரண்டு தருக?

- ❖ **சிம்மாசன பிரசங்க உரை மீதான வாக்கெடுப்பு**
- ❖ **வரவு செலவு திட்டம் தொடர்பான வாக்கெடுப்பு**

**797)**பிரித்தானிய மந்திரியை முறையின் வெற்றிக்கு அடிப்படையாகவுள்ள காரணிகள் இரண்டைத் தருக?

- ❖ **சிறந்த கூட்டுப்பொறுப்பு**
- ❖ **வளர்ச்சியடைந்த இருகட்சி முறைமை**

**798)** பிரித்தானிய பிரதம மந்திரியின் தன்மைகள் இரண்டு தருக?

- ❖ **அரசாங்கத்தின் தலைவர்**
- ❖ **உண்மை நிரவாகத்தின் தலைவர்**

**799)** பிரித்தானியப் பிரதமரைப் பற்றி பல்வேறு அறிஞர்கள் பல்வேறு விதமான கருத்துக்களை கூறிகின்றனர். அவர்களில் இருவரைக் குறிப்பிடுக?

- ❖ **வூற்றோ வில்சன்**
- ❖ **மைக் ஐவர்**

**800)** பிரித்தானியப் பிரதமரின் அமைச்சரவை சார்ந்த அதிகாரங்கள் இரண்டைக் குறிப்பிடுக?

- ❖ **அமைச்சரவைக்குத் தேவையான உறுப்பினர்களின் எண்ணிக்கையை தீர்மானித்தல்**
- ❖ **அமைச்சரவையினை காலத்திற்கு காலம் மாற்றியமைத்தல்**

**801)** பிரித்தானியப் பிரதமரின் நிர்வாகத்துறை சார்ந்த அதிகாரங்கள் இரண்டைக் குறிப்பிடுக?

- ❖ **அரசாங்கத்திற்கு தேவையான கொள்கைகளை வகுத்தல்**
- ❖ **சட்டங்களை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தல்**

**802)** பிரித்தானியப் பிரதமரின் சட்டத்துறை சார்ந்த அதிகாரங்கள் இரண்டு தருக?

- ❖ **சட்டமன்றிை கூட்டுதல் கலைத்தல் ஒத்திவைத்தல்**
- ❖ **சில சட்ட மசோதாக்களை உருவாக்கிக்கொள்ளல்**

**803)** பிரித்தானியப் பிரதம மந்திரியின் வெளிநாடுகள் தொடர்பான அதிகாரங்கள் இரண்டு தருக?

- ❖ **பொது நலவாய மாநாட்டிற்கு தலைமை தாங்குதல்**
- ❖ **வெளிநாடுகளுடன் ஒப்பந்தங்கள் உடன்படிக்கைகளை மேற்கொள்ளல்**

**804)** பிரித்தானிய நீதித்துறையின் தன்மைகள் இரண்டைத் தருக?

- ❖ **நீதித்துறை அரசியல் தலையீடுகளில் இருந்து விலகியிருத்தல்**
- ❖ **நாட்டின் உயர் அமைப்பாக தொழிற்படல்**

**805)** நீதித்துறையின் குறைபாடுகள் இரண்ட தருக?

- ❖ **நீதிப்புனராய்வு அதிகரத்தை இழந்து செயற்பட்டது**
- ❖ **சட்டத்துறையின் செல்வாக்கு அதிகம் காணப்பட்டதது**

**806)** பிரித்தானியாவில் உள்ள அரசியல் கட்சிகள் இரண்டைத் தருக?

- ❖ **பழமை பேணும் கட்சி**
- ❖ **தொழிற்கட்சி**

**807)** பிரித்தானிய அரசியற் கட்சிமுறையின் முக்கிய இயல்புகளை இரண்டினைக் குறிப்பிடுக?

- ❖ **இருகட்சி முறைப் போக்கு காணப்படல்**
- ❖ **நீண்ட கால அரசியல் வரலாற்றைக் கொண்டிருத்தல்**

**808)** பிரித்தானிய தொழிற்கட்சியின் கொள்கைகள் இரண்டு தருக?

- ❖ **தொழிலாளர்களின் நலன்களைப் பெணுதல்**

- ❖ **முதலாளித்துவக் கொள்கையினைப் பரப்புதல்**

809) பிரித்தானிய பழமை பேணும் கட்சியின் கொள்கைகள் இரண்டைத் தருக?
- ❖ **பழமைப் பாரம்பரியங்களை போற்றுதல்**
- ❖ **தேசிய மயமாக்கல் கொள்கை**

810) பிரித்தானியாவில் சட்டவாட்சி காணப்படுவதற்கான ஆதாரங்கள் இரண்டு தருக?
- ❖ **சுதந்திரமான நீதித்துறை**
- ❖ **பொதுச்சட்டத்திற்கு அனைவரும் கடடுப்படும் நிலை காணப்படல்**

811) பிரித்தானிய அரசியற் கட்சிகளுடன் தொடர்புடைய குழுக்களின் இரண்டைத் தருக?
- ❖ **டோரிக் குழு**
- ❖ **விக் குழு**

812) பிரித்தானியாவில் செயல்படும் அமுக்க குழுக்கள் இரண்டைக் குறிப்பிடுக?
- ❖ **வர்த்தக சங்கங்கள்**
- ❖ **தொழிற் நிறுவனங்கள்**

## அமெரிக்க அரசியல் திட்டம்

813) அமெரிக்க மக்களின் கலாசார அம்சத்தினை குறிப்பிடுக?
- ❖ **சுய முயற்சியினால் தனிமனிதன் உயர்நிலைக்குச் செல்லலாம் என்ற நம்பிக்கை**
- ❖ **சமயம் சார்பில்லாத நடத்தை கோலங்கள்.**

814) அமெரிக்க அரசியல் யாப்பினை உலக நாடுகள் ஆராய்வதற்கான காரணிகள் இரண்டு தருக?
- ❖ **எழுதப்பட்ட அரசியல் யாப்பின் தொடக்கம்**
- ❖ **வல்லரசு ஆதிக்கம் பொருந்திய நாடு**

815) அமரிக்க கூட்டாட்சியின் இயல்புகள் இரண்டு தருக?
- ❖ **சிறந்த அதிகாரப் பங்கீடு**
- ❖ **எழுதப்பட்ட நெகிழா அரசியல் யாப்பு**

816) அமெரிக்கா அரசியல் திட்டம் வரையப்பட்ட இடத்தினையும் அவ்யாப்பின் மொத்த அத்தியாயங்களையும் குறிப்பிடுக?
- ❖ **பிலடெல்பியா**
- ❖ **07 அத்தியாயங்களும் ஒரு முன்னுரையும்**

817) அமெரிக்க அரசாங்க முறையின் சிறப்பியல்புகள் இரண்டினைக் குறிப்பிடுக?
- ❖ **எழுதப்பட்ட அரசியல் திட்டம்**
- ❖ **சிறந்த சமஸ்டியாட்சி முறை**

818) அமெரிக்க அரசாங்க முறையில் சிறந்த சமஸ்டியாட்சி முறை நிலவுகின்றமையை எடுத்துக்காட்டுகின்ற ஆதாரங்கள் இரண்டு தருக?
- ❖ **ஈரங்கமன்ற சட்டத்துறை**
- ❖ **மாநில அரசுகளுக்கு இடையே சமமான உறுப்புரிமை**

819) அமெரிக்கா சட்டமன்றத்தின் இருசபைகளதும் பெயர்களை குறிப்பிடுக?
- ❖ **சனப்பிரதிநிதிகள் சபை**
- ❖ **செனற்சபை**

820) அமெரிக்கா ஜனாதிபதி தெரிவு செய்யப்படும் முறைகளின் தன்மைகள் இரண்டைத் தருக?
- ❖ **மக்களால் மறைமுகமாக தேர்வாளர்கழகம் மூலம் தெரிவு செய்யப்படல்**
- ❖ **அறுதிப்பெரும்பாண்மை அடிப்படையில் ஜனாதிபதி தெரிவு செய்யப்படல்**

821) அமெரிக்கா ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளருக்குரிய தகமைகள் இரண்டைத் தருக?
- ❖ **அமெரிக்க பிரஜையாக இருத்தல் வேண்டும்**
- ❖ **35 வயதினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்**

822) அமெரிக்கா ஜனாதிபதியின் சட்டத்துறை சார்ந்த அதிகாரம் இரண்டைத் தருக?
- ❖ **சட்ட மசோதாக்களுக்கு இருதி அங்கீகாரம் வழங்குதல்**
- ❖ **சட்டமன்ற கூட்டங்களின் போது செய்திகளை அனுப்புதல்**

**823)** அமெரிக்கா ஜனாதிபதி செனட் சபையுடன் இணைந்து நிறைவேற்றுகின்ற அதிகாரங்கள் இரண்டினைத் தருக?

- ❖ **உயர் பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை நியமனம் செய்தல்**
- ❖ **வெளிநாடுகளுடன் ஒப்பந்தங்கள் உடன்படிக்கைகளை மேற்கொள்ளல்**

**824)** அமெரிக்க ஜனாதிபதியின் வெளிவிவகாரம் சார்ந்த அதிகாரங்கள் இரண்டு தருக?

- ❖ **வெளிநாட்டு தூதுவர்களை நியமனம் செய்தல்**
- ❖ **வெளிநாடுகளில் அமெரிக்காவை பிரதிநிதித்துவப்படுத்தல்**

**825)** அமெரிக்கா ஜனாதிபதி அதிகாரங்களை மேற்கொள்ளும் போது அவருக்கு துணை புரியும் நிறுவனங்கள் இரண்டைத்தருக?

- ❖ **வெள்ளை மாளிகை அலுவலகம்**
- ❖ **வரவு செலவு திட்டம் தயாரிக்கும் குழு**

**826)** அமெரிக்கா ஜனாதிபதியின் நிருவாகத்துறை தொடர்பான அதிகாரங்கள் இரண்டைத் தருக?

- ❖ **அமெரிக்க அரசியல் திட்டத்தை பாதுகாத்தல்**
- ❖ **முப்படைகளுக்கும் கட்டளை இடும் தளபதியாக விளங்குதல்**

**827)** அமெரிக்கா ஜனாதிபதியின் அதிகாரங்கள் அதிகரித்துச் செல்வதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் இரண்டு தருக?

- ❖ **அமெரிக்காவில் ஜனாதிபதிபதவி வகித்தவர்களின் ஆளுமை**
- ❖ **அரசியற்கட்சி முறைமையின் வளர்ச்சி**

**828)** அமெரிக்கா ஜனாதிபதியின் நீதித்துறை தொடர்பான அதிகாரங்கள் இரண்டைத் தருக?

- ❖ **உயர்நீதிமன்ற,சமஸ்டி நீதிமன்ற நீதியரசர்களை நியமனம் செய்தல்**
- ❖ **குற்றவாளிகளுக்கு பொது மன்னிப்பு வழங்குதல்**

**829)** அமெரிக்கா ஜனாதிபதியின் அதிகாரங்களை செனட்சபை கட்டுப்படுத்தும் சந்தர்பங்கள் இரண்டினைத்தருக?

- ❖ **உயர்நிர்வாக அதிகாரிகளை நியமனம் செய்யும் போது**
- ❖ **வெளிநாடுகளுடன் தொடர்புகளை மேற்கொள்ளும் போது**

**830)** ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதியின் ஆட்சிமுறைக்கு சாதகமாக கூறப்படுகின்ற வாதங்கள் இரண்டைத்தருக?

- ❖ **உறுதியான வினைதிறன் மிக்க ஆட்சிமுறையாக விளங்குகின்றது**
- ❖ **அமெரிக்காவின் அபிவிருத்திக்கும் பாதுகாப்பிற்கும் துணைபுரிகின்றது**

**831)** ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதியின் ஆட்சி முறைக்கு எதிராகக் கூறப்படுகின்ற பாதகமான வாதங்கள் இரண்டைத் தருக?

- ❖ **தேர்தல் முறைமை மக்களது ஜனநாயகத்திற்கு முரணானது**
- ❖ **அதிகாரங்கள் வரம்பற்ற சர்வாதிகார ஆட்சிமுறைமைக்கு வித்திடும்**

**832)** அமெரிக்க ஜனாதிபதியினை பதவி நீக்கம் செய்யும் முறையினை குறிப்பிடுக?

- ❖ **சனப்பிரதிநிதிகள் சபையினால் நிறைவேற்றப்படும் குற்றப்பிரேரணை நிறைவேற்றப்படும் சந்தர்பத்தில் ஜனாதிபதி பதவி நீக்கப்படுவர்**

**833)** அமெரிக்க ஜனாதிபதி பதவி வெற்றிடமாகும் சந்தர்பங்கள் இரண்டு தருக?

- ❖ **இறக்கும் போது**
- ❖ **தானாக இராஜினாமா செய்யும் போது**

**834)** ஐக்கிய அமெரிக்காவின் சட்டத்துறைக்குப் பொறுப்பான காங்கிரசின் இயல்புகள் இரண்டைத் தருக?

- ❖ **இரு சபைகளை உள்ளடக்கிய சட்டமன்றம்**
- ❖ **அதிகார பலம் பொருந்திய இரண்டாம் மன்றம் காணப்படல்**

**835)** ஐக்கிய அமெரிக்காவின் அமைச்சரவையின் தன்மைகள் இரண்டைக் குறிப்பிடுக?

- ❖ **அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கமாட்டார்கள்**
- ❖ **மரபு ரீதியாக தோற்றம் பெற்ற தாபனமாகும்**

**836)** அமெரிக்க அமைச்சரவை 12 அமைச்சுக்களை கொண்டுள்ளது இவற்றுள் எவையேனும் மூன்றினை குறிப்பிடுக?

- ❖ **அரசதுறை**
- ❖ **காவல்த்துறை**
- ❖ **நீதித்துறை**

**837)** ஐக்கிய அமெரிக்காவின் காங்கிரசின் 2ம் மன்றமான செனட் சபையின் சட்டத்துறை தொடர்பான அதிகாரங்கள் இரண்டைக் குறிப்பிடுக?

- ❖ **சட்டமசோதாக்களை தடுத்து நிருத்தி ஆலோசனை வழங்குதல்**
- ❖ **அரசியல் திட்டத்தில் திருத்தம் மாற்றம் செய்தல்**

**838)** ஐக்கிய அமெரிக்காவின் காங்கிரசின் 2ம் மன்றமான செனட் சபையின் நிருவாகத்துறை சார்ந்த அதிகாரங்கள் இரண்டைக் குறிப்பிடுக?
- ❖ **ஜனாதிபதியின் வெளிநாட்ட ஒப்பந்தங்களுக்கு அனுமதி அளித்தல்**
- ❖ **ஜனாதிபதியினை கன்கானித்தல் கட்டப்படுத்தல்**

**839)** அமெரிக்க செனட்சபை உறுப்பினர் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய தகமைகள் இரண்டு தருக?
- ❖ **அமெரிக்க பிரஜையாக இருத்தல் வேண்டும்**
- ❖ **30 வயதினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்**

**840)** அமெரிக்க செனட் சபையின் தன்மைகள் இரண்டைத்தருக?
- ❖ **மாநில அரசுகளை பிரதிநிதித்துவப்படுத்தல்**
- ❖ **அதிகார பலம் பொருந்திய மன்றமாக தொழிற்படல்**

**841)** ஐக்கிய அமெரிக்காவின் உயர்நீதிமன்றத்தின் இயல்புகள் இரண்டைத்தருக?
- ❖ **நீதிப்புனராய்வு அதிகாரம் கொண்ட நீதித்துறை**
- ❖ **நடுநிலைத் தன்மையுடன் தொழிற்படும் நீதித்துறை**

**842)** ஐக்கிய அமெரிக்காவின் உயர்நீதிமன்றத்தின் அதிகாரங்கள் இரண்டைத்தருக?
- ❖ **அரசியல் திட்டத்தை பாதுகாத்தல்**
- ❖ **மத்திய மாநில அரசுகளுக்கு இடையிலான முரண்பாடுகளை தீர்த்து வைத்தல்**

**843)** ஐக்கிய அமெரிக்காவின் மத்திய அரசின் நீதித்துறையில் அடங்கும் நீதிமன்றங்கள் இரண்டைக் குறிப்பிடுக?
- ❖ **உயர் நீதிமன்றம்**
- ❖ **மாவட்ட நீதிமன்றம்**

**844)** ஐக்கிய அமெரிக்காவின் கட்சிமுறையின் இயல்புகள் இரண்டைத்தருக?
- ❖ **இருகட்சி முறை போக்கு**
- ❖ **தேர்தல் காலங்களில் மாத்திரம் செயற்படும் தன்மையுடையது**

**845)** ஐக்கிய அமெரிக்காவில் செயல்படும் பிரதான அரசியல் கட்சிகள் இரண்டைத்தருக?
- ❖ **ஜனநாயகக் கட்சி**
- ❖ **குடியரசு கட்சி**

**846)** ஐக்கிய அமெரிக்காவின் அமுக்கக்குழுக்கள் இரண்டைத்தருக?
- ❖ **தொழிற்ச்சங்கங்கள்**
- ❖ **வர்த்தக சங்கங்கள்**

**847)** அமெரிக்காவில் தொழிற்படும் அமுக்கக்குழுக்களின் இயல்புகள் இரண்டைக்குறிப்பிடுக?
- ❖ **சுயசார்பு தன்மையுடன் செயற்படுகின்றது**
- ❖ **அரசியற்கட்சிகளின் செயற்பாடுகளை தீர்மானிக்கின்றது**

**848)** ஐக்கிய அமெரிக்காவவின் மத்திய அரசின் அதிகாரம் அதிகரித்துச் செல்வதில் தாக்கம் செலுத்தும் காரணிகள் இரண்டு தருக?
- ❖ **அரசியல் சமூக கொருளாதார மாற்றம்**
- ❖ **நிலப்பரப்பு மக்கள் தொகையின் பெருக்கம்**

**849)** ஐக்கிய அமெரிக்காவின் மாநில அரசுகளின் அதிகாரங்கள் இரண்டினைத்தருக?
- ❖ **வரி விதித்தல்**
- ❖ **கடன் வாங்குதல் கடன் வழங்குதல்**

## இந்திய அரசியல் திட்டம்

**850)** இந்திய அரசியல் யாப்பு உருவாக்கத்தில் முக்கியம் பெறும் இரு அறிஞர்களை குறிப்பிடுக?
- ❖ **டாக்டர் அம்பேத்தக்கர்**
- ❖ **ரவீந்திரநாத் தாகூர்**

**851)** இந்திய அரசியல் யாப்பின் மூலங்கள் இரண்டைக் குறிப்பிடுக?
- ❖ **மதம் சார்பற்ற அரசு**
- ❖ **பாராளுமன்ற அரசாங்க முறைமை**

852) இந்திய அரசியல் யாப்பின் சிறப்பியல்புகள் இரண்டினைத் தருக?

- ❖ **அரைகுறை சமஸ்டி அரசியல் திட்டம்**
- ❖ **அடிப்படை உரிமைகள் பற்றிய நீண்ட பட்டியலை கொண்டிருத்தல்**

853) இந்திய யாப்பின் கூட்டாட்சி முறையின் இயல்புகள் இரண்டினைக் குறிப்பிடுக?

- ❖ **ஒற்றைக்குடியுரிமை காணப்படல்**
- ❖ **மத்திய மாநில அரசுகளுக்கிடையில் அதிகாரப் பங்கீடு**

854) இந்திய கூட்டாட்சி முறைக்கு எதிராகக் கூறப்படுகின்ற விமர்சனம் இரண்டினைக் குறிப்பிடுக?

- ❖ **மாநில அரசுகளுக்கு இடையே சமமற்ற உறுப்புரிமை காணப்படல்**
- ❖ **இரட்டை குடியுரிமை காணப்படாமை**

855) இந்தியா ஒரு அரைகுறை சமஸ்டியாகும் இதற்கான ஆதாரங்கள் இரண்டு தருக?

- ❖ **ஒற்றை குடியுரிமை**
- ❖ **மாநிலங்களிடையே சமமற்ற தன்மை**

856) இந்திய ஜனாதிபதியின் தன்மைகள் இரண்டினைத் தருக?

- ❖ **அரசின் தலைவராக விளங்கினார்**
- ❖ **நாம நிருவாகியாக காணப்பட்டார்**

857) இந்திய ஜனாதிபதியின் வேட்பாளருக்குரிய தகைமைகள் இரண்டினைத் தருக?

- ❖ **இந்திய பிரஜையாக இருத்தல் வேண்டும்**
- ❖ **35 வயதினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்**

858) இந்திய ஜனாதிபதியின் சட்டத்துறை தொடர்பான அதிகாரங்கள் இரண்டினைக் குறிப்பிடுக?

- ❖ **மாநில அவைக்கு 12 உறுப்பினர்களை நியமனம் செய்தல்**
- ❖ **சட்டமன்றத்தை கூட்டுதல் கலைத்தல் ஒத்திவைத்தல்**

859) இந்திய ஜனாதிபதியின் நிருவாகத்துறை தொடர்பான அதிகாரங்கள் இரண்டினைக் குறிப்பிடுக?

- ❖ **பிரதமரையும் ஏனைய அமைச்சர்களையும் நியமனம் செய்தல்**
- ❖ **தேர்தல் அதிகாரிகளை நியமனம் செய்தல்**

860) இந்திய ஜனாதிபதியின் நீதித்துறை தொடர்பான அதிகாரங்கள் இரண்டினைக் குறிப்பிடுக?

- ❖ **பிரதம நீதியரசரை நியமனம் செய்தல்**
- ❖ **குற்றவாளிகளுக்கு பொது மன்னிப்பு வழங்குதல்**

861) இந்தியப் பாராளுமன்றத்தின் தன்மைகள் இரண்டினைக் குறிப்பிடுக?

- ❖ **ஈரங்கமன்றங்களை உள்ளடக்கிய சட்டமன்றம்**
- ❖ **சமமான அதிகாரங்களை கொண்ட சட்டமன்றம்**

862) இந்தியப் பாராளுமன்றத்தில் இரண்டு சபைகள் காணப்படுகின்றன. அச் சபைகள் இரண்டினைத் தருக?

- ❖ **லோக்சபா**
- ❖ **இராஜ்ஜிய சபா**

863) இந்தியப் பாராளுமன்றத்தில் லோக் சபாவின் இயல்புகள் இரண்டினைக் குறிப்பிடுக?

- ❖ **மத்திய அரசினை பிரதிநிதித்துவப்படுத்தல்**
- ❖ **மக்களின் பொதுஜன அபிப்பிராயத்தை பிரதிபலித்தல்**

864) இந்தியப் பாராளுமன்றத்தின் லோக் சபாவின் அதிகாரங்கள் இரண்டினைக் குறிப்பிடுக?

- ❖ **சட்வாக்கம் செய்யும் அதிகாரங்கள்**
- ❖ **நிர்வாக,நீதித்துறை தொடர்பான அதிகாரங்கள்**

865) இந்தியப் பாராளுமன்றத்தின் இரண்டாம் மன்றமான ராஜ்யசபாவின் தன்மைகள் இரண்டினை எழுதுக?

- ❖ **மாநில அரசுகளை பிரதிநிதித்துவப்படுத்தல்**
- ❖ **கலைக்கப்படாத நிரந்தர சபை**

866) இந்தியப் பாராளுமன்றத்தின் இரண்டாம் சபையான ராஜ்யசபாவின் அதிகாரங்கள் இரண்டைத் தருக?

- ❖ **சட்ட மசோதாக்களை தடுத்து நிருத்தி ஆலோசனை வழங்குதல்**
- ❖ **ஜனாதிபதி மீதான குற்ற விசாரணைகளை மேற்கொள்ளல்**

867) இந்திய அமைச்சரவையின் இயல்புகள் இரண்டைக் குறிப்பிடுக?

- ❖ **சட்டமன்றத்திற்கு பொறுப்பு கூறும் தன்மை**
- ❖ **கபினட் அமைச்சர்கள்,இராஜாங்க அமைச்சர்கள்,துணை அமைச்சர்களை உள்ளடக்கியது**

868) இந்திய அமைச்சரவையின் பணிகள் இரண்டைக் தருக?

- ❖ **முக்கிய அதிகாரிகளை பதவி நீக்கம் செய்வதற்கு பரிந்துரை வழங்குதல்**
- ❖ **தமக்கு ஒதுக்கப்ட்ட துறைகளை சிறந்த முறையில் நிருவகித்தல்**

869) இந்திய மத்திய அரசின் அரசியல் யாப்பின் பிரதமரின் தன்மைகள் இரண்டைக் குறிப்பிடுக?

- ❖ **அரசாங்கத்தின் தலைவர்**
- ❖ **உண்மை நிருவாகியாக விளங்கினார்**

870) இந்திய பிரதமரின் நிருவாகத்துறை தொடர்பான அதிகாரங்கள் இரண்டு தருக?

- ❖ **அமைச்சர்களை நியமனம் செய்தல் பதவி நீக்குதல்**
- ❖ **அமைச்சரவை கூட்டங்களுக்கு தலைமை தாங்குதல்**

871) இந்தியப் பிரதமரின் பாராளுமன்றம் தொடர்பான அதிகாரங்கள் இரண்டைக் குறிப்பிடுக?

- ❖ **அரசின் கொள்கைகளை சட்டமன்றத்தில் வெளியிடல்**
- ❖ **சட்டமன்றத்தில் இடம்பெறும் விவாதங்களில் கலந்து கொள்ளல்**

872) இந்தியப் பாராளுமன்றத்தின் ஓர் அங்கமாக விளங்குகின்ற லோக் சபா அதனுடைய பதவிக்காலம் முடிவதற்கு முன் கலைக்கப்படலாம் அவ்வாறு கலைக்கப்படும் சந்தர்ப்பங்கள் இரண்டினைக் குறிப்பிடுக?

- ❖ **பிரதமர் சிபார்சுபடி ஜனாதிபதியினால்**
- ❖ **சிம்மாசன பிரசங்க உரை தோல்வியடையும் சந்தர்பத்தில்**

873) இந்திய அரசியல் யாப்பின் படி உச்ச நீதிமன்றத்தின் இயல்புகள் இரண்டைத்தருக?

- ❖ **நீதிப்புனராய்வு அதிகாரம் கொண்ட நீதித்தறை**
- ❖ **பக்கம்சாராத வலுவான நீதிமன்றம்**

874) இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதிகளுக்கு உரிய தகமைகள் இரண்டிணை குறிப்பிடுக?

- ❖ **இந்திய பிரஜையாக இருத்தல் வேண்டும்**
- ❖ **உயர் நீதிமன்ற நீதிபதியாக 5 வருடங்கள் பதவி வகித்திருத்தல் வேண்டும்**

875) இந்திய உச்ச நீதிமன்றத்தின் அதிகாரங்கள் இரண்டைத்தருக?

- ❖ **மத்திய மாநில அரசுகளுக்கு இடையிலான முரண்பாடுகளை தீர்த்து வைத்தல்**
- ❖ **அரசியல் யாப்பினை பாதுகாத்தல்**

876) இந்திய உயர் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் இரண்டைத்தருக?

- ❖ **நீதிப்பனராய்வு அதிகாரம்**
- ❖ **மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாத்தல்**

877) இந்திய அரசியல் கட்சிகளின் இயல்புகள் இரண்டைத்தருக?

- ❖ **பலகட்சி முறையினை கொண்டிருத்தல்**
- ❖ **வர்க்க,கொள்கை,பிரதேச அடிப்படையில் பிளவுபட்டிருத்தல்**

878) இந்தியாவில் முக்கியமான அரசியல் கட்சிகள் காணப்படுகின்றன அக்கட்சிகள் இரண்டைக் குறிப்பிடுக?

- ❖ **பாரதீய ஜனதா கட்சி**
- ❖ **இந்திய தேசிய காங்கிரஸ்**

879) இந்தியக் பாரதீய ஜனதாக் கட்சியின் கொள்கைகள் இரண்டைக் குறிப்பிடுக?

- ❖ **காலாசாரத்தில் தேசிய வாதம்**
- ❖ **மனித நேயம்,இந்து கலாசரார மேன்மைத்துவம்**

880) இந்தியாவின் மாநிலங்களில் அதிகமான கட்சிகள் காணப்படுகின்றன. அவற்றில் இரண்டைக் குறிப்பிடுக?

- ❖ **அண்ணா திராவிட முன்னேற்ற கழகம்**
- ❖ **ஜனநாயக முன்னனி**

881) இந்திய அரசியல் திட்டத்தில் உள்ளடக்கப்படும் அடிப்படை உரிமைகள் இரண்டைக˙ குறிப்பிடுக?

- ❖ **சிந்தனை செய்யும் சுதந்திரம்**
- ❖ **எழுத்துச் சுதந்திரம்**

882) இந்தியக் கட்சிமுறையின் பிரதிகூலங்கள் இரண்டைத் தருக?

- ❖ **இன ரீதியான பாகுபாடு,முரண்பாடுகள்**
- ❖ **மதத்தின் ஆதிக்கம் அரசியலில் காணப்படல்**

883) இந்திய அரசியலில் அமுக்கக் குழுக்களின் இயல்புகள் இரண்டைத்தருக?

- ❖ **தேசிய ரீதியான ஒருமைப்பாடு**

- **வர்கக் நலண்களும் பாகுபாடுகளும்**

884) இந்தியாவில் முக்கியமான அமுக்கக் குழுக்கள் காணப்படுகின்றன. அவற்றின் பெயர்கள் இரண்டைத் தருக?

- **தொழிற் சங்கங்கள்**
- **மத நிறுவனங்கள்**

885) இந்தியாவில் 29 மாநிலங்கள் உள்ளன. அவற்றில் ஏதாவது இரண்டு மாநிலத்தின் பெயரைத் தருக?

- **தமிழ் நாடு**
- **ராஜஸ்தான்**

886) இந்திய மத்திய அரசின் பாராளுமன்றத்தின் லோக்சபா இராஜ்ய சபாவுடன் இணைந்து பிரயோகிக்கும் அதிகாரங்கள் இரண்டினைத் தருக?

- **சட்டவாக்கம் செய்தல்**
- **நிர்வாகத்துறையினை கட்டுப்படுத்தல்**

## பிரான்ஸிய அரசியல் திட்டம்

887) பிரான்ஸிய மக்களின் அரசியல் கலாசார அம்சங்கள் இரண்ட தரக?

- **தனி மனிதனுக்கு முக்கியத்துவம் கொடக்க வேண்டும் எனும் பண்பு**
- **மக்களால் தெரிவு செய்யப்படும் இரு அவைகளும் உயர்வான அதிகாரத்தை கொண்டிருத்தல் வேண்டும்**

888) பிரான்ஸில் ஐந்தாவது குடியரசின் அரசியல் யாப்பில் சிறப்பியல்புகள் இரண்டினைத்தருக?

- **ஜனாதிபதித்துவ,மந்திரிசபை ஆட்சிமுறைகள் இரண்டும் கலந்த ஓர் கலப்பாட்சி முறைமை**
- **பாராளுமன்ற அரசாங்க முறைமையை விட அதிபர் பதவிக்கு முக்கியத்தவம் வழங்குதல்**

889) பிரான்ஸிய அரசியல் யாப்பினைத் திருத்தும் முறையினைச் சுருக்கமாக தருக?

- **பாராளுமன்றத்தின் இர சபைகளினதும் பெரும்பாண்மையுடன் நிறைவேற்றப்பட்டு பின்னர் மக்கள் தீர்ப்பு ஒன்றின் மூலம் மக்களது கருத்துக்களையும் அறிந்து கொள்ளல் வேண்டும்**

890) பிரான்ஸின் 5ம் குடியரசு யாப்பு நடைமுறைக்குவந்த காலப்பகுதியினையும் அதன் உருவாக்கத்திற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவரையும் குறிப்பிடுக?

- **1958 ஒக்டோபர் 04**
- **சார்ல்ஸ் டிகோல்**

891) பிரான்ஸிய பாராளுமன்றத்தின் தன்மைகள் இரண்டினைக் குறிப்பிடுக?

- **இரு மன்றங்களை உள்ளடக்கிய சட்டமன்றம்**
- **மக்களின் பொதுஜன அபிப்பிராயத்தை பிரதிபலித்தல்**

892) பிரான்ஸியப் பாராளுமன்றத்தில் இரு சபைகள் காணப்படுகின்றது. அச் சபை இரண்டினைத் தருக?

- **தேசியப்பேரவை**
- **செனட்சபை**

893) பிரான்ஸியப் பாராளுமன்றத்தின் தேசிய சபையின் இயல்புகள் இரண்டினைக் குறிப்பிடுக?

- **மக்களால் தெரிவ செய்யப்பட்ட உறுப்பினர்களை மாத்திரம் உள்ளடக்கியுள்ளது**
- **அமைச்சரவையினை கட்டப்படுத்தம் வல்லமை கொண்டது**

894) பிரான்ஸியப் பாராளுமன்றத்தின் தேசிய சபையின அதிகாரங்கள் இரண்டினைக் குறிப்பிடுக?

- **நிதிமசோதாக்களை ஆரம்பித்த வைத்தல்**
- **நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைத்தல்**

895) பிரான்ஸிய அரசியல் அமைப்பின் 16வது விதி எதனை சிறப்பிக்கின்றது?

- **அவசரகால பிரகடனம் பற்றி குறிப்பிடுகின்றது**

896) பிரான்ஸியப் பாராளுமன்றத்தின் இரண்டாம் சபையான செனட் சபையின் இயல்புகள் இரண்டினைக் குறிப்பிடுக?

- **தேர்வாளர் கழகம் மூலம் சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படல்**
- **கலைக்கப்படாத நிரந்தரமான ஓர் சபையாகும்**

897) பிரான்ஸியப் பாராளுமன்றத்தின் செனட்சபையின் அதிகாரங்கள் இரண்டினைக் குறிப்பிடுக?

- ❖ அமைச்சரவை தொடர்பாக கேள்விகளை கெட்டல்
- ❖ சாதாரண சட்ட மசோதாக்களை உருவாக்குதல்

898) பிரான்ஸிய ஜனாதிபதியின் தன்மைகள் இரண்டினைக் குறிப்பிடுக?
- ❖ **அதிகார பலம் பொருந்திய ஓர் பதவி முறையாகும்**
- ❖ **மக்களால் நேரடியாக வாக்களிப்பு மூலம் தெரிவு செய்யப்படுகின்றார்**

899) பிரான்ஸிய ஜனாதிபதியின் சட்டத்துறை சார்ந்த அதிகாரம் இரண்டினைக் குறிப்பிடுக?
- ❖ **தேசிய பேரவையினை கலைத்தல்**
- ❖ **பாராளுமன்ற சட்டங்களை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தல்**

900) பிரான்ஸிய ஜனாதிபதிக்கு அரசியல் யாப்பினால் உரித்தாகும் அதிகாரங்கள் உள்ளன. அவற்றில் இரண்டினைக் குறிப்பிடுக?
- ❖ **பிரான்ஸிய குடியரசினை பிரதிநிதித்தவப்படுத்தல்**
- ❖ **அரசியல் யாப்பினை பாதுகாத்தல்**

901) பிரான்ஸிய ஜனாதிபதியின் நிருவாகத்துறை தொடர்பான அதிகாரங்கள் இரண்டினைக் குறிப்பிடுக?
- ❖ **போர் சமாதானம் தொடர்பாக தீர்மானம் எடுத்தல்**
- ❖ **முழு அரசாங்க சேவையினையும் கட்டுப்படுத்தல்**

902) பிரான்ஸிய ஜனாதிபதியின் நீதித்துறை சார்ந்த அதிகாரங்கள் இரண்டினைக் குறிப்பிடுக?
- ❖ **நீதித்தறையின் சுதந்திரத்தை பாதுகாத்தல்**
- ❖ **குற்றவாளிகளுக்கு பொது மண்னிப்பு வழங்குதல்**

903) பிரான்ஸ் நாட்டு அமைச்சரவையின் இயல்புகள் இரண்டினைக் குறிப்பிடுக?
- ❖ **நாட்டை ஆளும் பொறுப்புடையது**
- ❖ **பாராளுமன்றத்திற்க பொறுப்பு கூறும் தன்மையுடையது**

904) பிரான்ஸ் அரசியல் யாப்பில் பிரதமரின் இயல்புகள் இரண்டைக்குறிப்பிடுக?
- ❖ **குறைந்த அதிகாரங்களை பிரயோகிக்கம் ஓர் நபராவார்**
- ❖ **தானாக தனது பதவியினை இராஜினாமா செய்யும் தன்மையுடையவர்**

905) பிரான்ஸ் நாட்டு அமைச்சரவையின் பணிகள் இரண்டினைக் குறிப்பிடுக?
- ❖ **வரவு செலவு திட்டத்தை தயாரித்தல்**
- ❖ **நாட்டின் ஆட்சி தொடர்பான முடிவுகளை எடுத்தல்**

906) பிரான்ஸ் ஜனாதிபதி அமைச்சரவை மீது கொண்டுள்ள அதிகாரங்கள் இரண்டு தருக?
- ❖ **பிரதமரை நியமனம் செய்தல்**
- ❖ **அமைச்சரவையின் தீர்மானங்களை அங்கிகரித்தல்**

907) பிரான்ஸ் அரசியல் யாப்பின் பிரதமரின் அதிகாரங்கள் இரண்டைக் குறிப்பிடுக?
- ❖ **அமைச்சரவை நியமனம் பதவி நீக்கம் தொடர்பாக ஜனாதிபதிக்க ஆலோசனை வழங்குதல்**
- ❖ **சிவில்,இராணுவ பதவிகளை நியமனம் செய்தல்**

908) பிரான்ஸியப் பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் இரண்டைக் குறிப்பிடுக?
- ❖ **பாராளுமன்ற உறப்பினர்கள் மீது உரிமைக் கட்டளைகளை விதிக்க முடியாது**
- ❖ **பாராளுமன்ற கூட்டம் நடைபெறும் போது பாராளுமன்ற உறுப்பினர்களக்க எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது**

909) பிரான்ஸ் நீதித்துறைகளின் இயல்புகள் இரண்டினைக் குறிப்பிடுக?
- ❖ **ஆட்சித்தறைச் சட்டத்தை அடியொற்றியதாக ஸ்தாபிக்கப்பட்டிருத்தல்**
- ❖ **சாதாரண மற்றும் நிருவாக நீதிமன்றங்கள் எனும் இரு வகையான நீதிமன்றங்கள் காணப்படல்**

910) பிரான்ஸிய நீதித்துறையின் குடியியல் நீதிமன்றங்கள் இரண்டைக்குறிப்பிடுக?
- ❖ **முதல்நிலை நீதிமன்றங்கள்**
- ❖ **முதல்நிலை உயர் நீதிமன்றங்கள்**

911) பிரான்ஸிய நீதித்துறையின் குற்றவியல் நீதிமன்றங்கள் இரண்டினைத் தருக?
- ❖ **காவல்துறை நீதிமன்றங்கள்**
- ❖ **அசைஸ் நிதிமன்றம்**

912) பிரான்ஸிய உயர் நீதிக்குழுவின் இரண்டினைக் குறிப்பிடுக?
- ❖ **நீதிபதிகளை நியமனம் செய்தல்**
- ❖ **நீதிபதிகளை பதவி நீக்கம் செய்தல்**

913) பிரான்ஸியக் கட்சி முறையின் இயல்புகள் இரண்டினைக் குறிப்பிடுக?
- ❖ **பல கட்சி முறைப்போக்கு**
- ❖ **அடிக்கடி கட்சிகள் தோன்றி மறையும் தன்மை**

914) பிரான்ஸில் பிரதானமாகச் செயல்படும் அரசியல் கட்சிகள் இரண்டைக் குறிப்பிடுக?
- ❖ **பொதுவுடைமைக்கட்சி**
- ❖ **சோசலிஸகட்சி**

915) பிரான்ஸில் பலகட்சி முறைமை நிலவுவதற்கான காரணிகள் இரண்டு தருக?
- ❖ **பல்லின காலசார பண்புடைய மக்கள்**
- ❖ **மக்கள் மத்தியில் காணப்பட்ட வெவ்வேறுபட்ட சிந்தனைகள்**

916) பிரான்ஸிய அமுக்கக் குழுக்களின் இயல்புகள் இரண்டைத் தருக?
- ❖ **வர்க்கநலண் பேணும் தன்மை**
- ❖ **பொருளாதார அபிவிருத்தி தொடர்பான இலக்கு**

917) பிரான்ஸில் உள்ள அமுக்கக் குழுக்கள் இரண்டைத்தருக?
- ❖ **தொழிலாளர் குழுக்கள்**
- ❖ **விவசாயிகள் குழுக்கள்**

## சுவிட்சர்லாந்து அரசியல் திட்டம்

918) சுவிட்சர்லாந்தின் அரசியலமைப்பின் சிறப்பியல்புகள் இரண்டைத் தருக?
- ❖ **எழுதப்பட்ட யாப்பு**
- ❖ **கூட்டாட்சி அரசியல் அமைப்பு**

919) சுவிட்சர்லாந்து அரசியல் திட்டம் உருவாக்கப்பட்ட,திருத்தியமைக்கப்பட்ட ஆண்டுகளை முறையே குறிப்பிடுக?
- ❖ **1848**
- ❖ **1874**

920) சுவிஸ் நாட்டின் பிராந்தியங்களை எவ்வாறு அழைப்பர்?எத்தனை பிராந்தியங்கள் உள்ளன?
- ❖ **கன்ரன்கள் அல்லது மாநில அரசுகள்**
- ❖ **26 பிராந்தியங்கள்**

921) சுவிட்சர்லாந்து சமஸ்டி முறையின் தனித்துவமான பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக?
- ❖ **எழுதப்பட்ட நெகிழா அரசியல் திட்டம்**
- ❖ **மத்திய மாநில அரசுகளுக்கிடையில் அதிகாரப் பங்கீடு**

922) சுவிட்சர்லாத்தின் நிறைவேற்றுத் துறையின் விசேட அம்சங்கள் இரண்டினைக் குறிப்பிடுக?
- ❖ **கூட்டாட்சி குழுவாக செயற்படல்**
- ❖ **ஒரு வருடகால பதவிக்காலம் கொண்ட தலைமைத்தவம்**

923) சுவிட்சர்லாந்தின் நிர்வாகத்துறைக்குப் பொறுப்பான கூட்டாட்சிக்குழுவின் இயல்புகள் இரண்டினைத் தருக?
- ❖ **ஜனாதிபதித்தவ,மந்திரிசபை அரசாங்க முறைகளின் கலப்பு**
- ❖ **கட்சிசார்பற்ற அமைப்பாக தொழிற்படல்**

924) சுவிட்சர்லாந்தின் உத்தியோக பூர்வ மொழிகள் இரண்டினை குறிப்பிடுக?
- ❖ **ஜேர்மன்**
- ❖ **இத்தாலி**

925) சுவிட்சர்லாந்தின் கூட்டாட்சிக் குழுத் தலைவரின் அதிகாரங்கள் இரண்டினைக் குறிப்பிடுக?
- ❖ **உள்நாட்டு வெளிநாட்டு அலுவல்களில் கலந்த கொண்ட செற்படல்**
- ❖ **கூட்டாட்சி குழுவில் சமநிலை ஏற்படும் பொது தனது முடிவு வாக்கை வழங்குதல்**

926) சுவிட்சர்லாந்தின் கூட்டாட்சிக் குழுவின் பொருப்பில் உள்ள 7 துறைகளில் எவையேனும் இரண்டினை குறிப்பிடுக?
- ❖ **வெளிநாட்டு அரசுகள்**
- ❖ **நீதியும் காவல் துறையும்**

927) சுவிட்சர்லாந்தின் சமஸ்டி மன்றத்தின் இரு அவைகளினதும் உத்தியோக பூர்வ பெயரைக் குறிப்பிடுக?
- ❖ **தேசிய சபை**

- ❖ **மாநிலங்களின் சபை**

**928)** சுவிட்சர்லாந்தின் சட்டத்துறையின் அதிகார கட்டமைப்புக்குள் இரண்டினைக் குறிப்பிடுக?

- ❖ **சட்வாக்க அதிகாரம்**
- ❖ **நிருவாக,நீதித்துறை சார்ந்த அதிகாரம்**

**929)** சுவிட்சர்லாந்தின் சமஸ்டி சபையின் இரண்டாம் மன்றமான மாநிலங்கள் சபையின் அதிகாரங்கள் இரண்டினைக் குறிப்பிடுக?

- ❖ **மசோதாக்களை தடுத்து நிருத்தி ஆலோசணை வழங்குதல்**
- ❖ **அரசியல் யாப்பினில் திருத்தம் மாற்றம் மேற்கொள்ளல்**

**930)** சுவிட்சர்லாந்தின் சமஸ்டி சபையின் அதிகாரங்கள் இரண்டினைக் குறிப்பிடுக?

- ❖ **சட்ட மசோதாக்களை உருவாக்குதல்**
- ❖ **அரசாங்கத்திற்கான கொள்கைத் திட்டங்களை வகுத்தல்**

**931)** சுவிட்சர்லாந்தின் சமஸ்டி நீதித்துறைக் கட்டமைப்பில் இடம்பெறும் இரண்டு உயர்நீதிமன்றங்களைப் பெயரிடுக?

- ❖ **அரசியலமைப்பு சட்ட நீதிமன்றம்**
- ❖ **கூட்டாட்சி நீதிமன்றம்**

**932)** சுவிட்சர்லாந்தின் நீதித்தறை சுதந்திரத்தை பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் இரண்டிணைக் குறிப்பிடுக?

- ❖ **நீதிபதிகள் பெடரல் அசெம்பிளியினால் தேர்ந்தெடுக்கப்படல்**
- ❖ **நீதிபதிகளின் பதவிக்காலம் 06 ஆண்டகள் என வரையறுக்கப்பட்டுள்ளது**

**933)** சுவிட்சர்லாந்தின் அரசியல் கட்சி முறையின் பிரதான பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக?

- ❖ **கட்சிகள் முக்கயத்துவம் பெறாமை**
- ❖ **எதிர்கட்சியின் செயற்பாடு பலவீனமான நிலையில் காணப்படல்**

**934)** சுவிட்சர்லாந்தில் நடைமுறையில் இருக்கும் நேரடி ஜனநாயக இரண்டைக் குறிப்பிடுக?

- ❖ **குடியொப்பம்**
- ❖ **தொடக்கவுரிமை**

**935)** சுவிஸ் மக்களாட்சிமுறையின் பண்புகள் இரண்டு தருக?

- ❖ **நேரடி மக்களாட்சிக்கு முக்கியத்துவம் அளித்தல்**
- ❖ **பூரணமான சமய சுதந்திரம்**

**936)** சுவிட்சர்லாந்தில் உள்ள மக்கள் தீர்ப்பு முறைமையின் இரு வடிவங்களை குறிப்பிடுக?

- ❖ **கட்டாய மக்கள் தீர்ப்பு**
- ❖ **விருப்பத்திற்குரிய மக்கள் தீர்ப்பு**

**937)** சுவிட்சர்லாந்து இரட்டை குழந்தைகள் என அழைக்கப்படும் நேரடி ஜனநாயக முறைமைகள் இரண்டு தருக?

- ❖ **ஒப்பங்கோடல்**
- ❖ **தொடக்கவுரிமை**

**938)** சுவிட்சர்லாந்து சட்டமன்றத்தின் இரு அவைகளும் ஒன்றாகக்கூடும் சந்தர்பங்கள் இரண்டு தருக?

- ❖ **பெடரல் கவுன்சிலர்கள் தெரிவு**
- ❖ **ஆயுதப்படைகளின் கட்டளையிடும் தளபதிகள் தெரிவு**

**939)** சுவிட்சர்லாந்தின் சம்'டி உயர்நீதிமன்றத்தின் கீழ் இயங்கும் நீதிமன்றங்கள் இரண்டைக் குறிப்பிடுக?

- ❖ **அரசியலமைப்புச்சட்ட நீதிமன்றம்**
- ❖ **ஆட்சித்துறை சட்ட நீதிமன்றம்**

**940)** சுவிட்சர்லாந்தில் நிருவாகத்துறை மாயச்சக்கரம் என அழைக்கப்படுவதற்கான காரணம் யாது?

- ❖ **தலமைத்துவப்பதவி சழற்சி முறையில் மாற்றம் அடைந்து செல்வதனாலாகும்**

**941)** சுவிட்சர்லாந்தின் செயல்படும் முக்கியமான அரசியல் கட்சிகள் இரண்டினைக் குறிப்பிடுக?

- ❖ **லிபரல் கட்சி**
- ❖ **தீவிர ஜனநாயகக்கட்சி**

**942)** சுவிட்சர்லாந்தில் செயல்படும் அமுக்கக் குழுக்கள் இரண்டைத் தருக?

- ❖ **சுவிஸ் தொழில் வர்த்தக சங்கம்**
- ❖ **சுவிஸ் உழவர் சங்கம்**

**943)** சுவிட்சர்லாந்தில் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் இரண்டைத் தருக?

- ❖ **மாநிலங்களின் சட்டவாக்கம் மற்றும் நிறைவேற்றம்**

- ❖ **மாநிலங்களின் சிவில் சேவையினை கட்டுப்படுத்தல்**

**944)** சுவிட்சர்லாந்தில் நடைமுறையில் இருக்கும் நேரடி ஜனநாயக முறையான மக்கள் தீர்ப்பின் நன்மைகள் இரண்டினைக் குறிப்பிடுக?

- ❖ **மக்களது அரசியல் ரீதியான அறிவு வளர்ச்சி**
- ❖ **மக்களின் அரசியல் ரீதியான பங்கு பற்றுதல் அதிகம்**

**945)** சுவிட்சர்லாந்தில் நடைமுறையில் இருக்கும் நேரடி ஜனநாயக முறையான மக்கள் தீர்ப்பின் தீமை இரண்டினைக் குறிப்பிடுக?

- ❖ **சட்டமன்றத்தின் அதிகாரம் பலவீனமடைந்தமை**
- ❖ **சாதாரண மக்கள் மத்தியில் பயன்னற்ற முறையாக காணப்பட்டது**

**946)** சுவிஸ் பாராளுமன்றத்தில் எதிர்கட்சி பலவீனமாக காணப்படுவதற்கான காரணிகள் இரண்டு தரக?

- ❖ **கட்சிகளின் தொழிற்பாடு குறைவு**
- ❖ **உறுப்பினர்கள் கட்சி ரீதியாக அல்லாமல் மாநில ரீதியாக சபையில் அமர்கின்றனர்**

**947)** சுவிஸ் நாட்டில் பெண்களுக்கு எத்தனையாம் ஆண்டு வாக்குரிமை வழங்கப்பட்டது?எத்தனை வயதிற்கு மேல் வழங்கப்பட்டது?

- ❖ **1992ம் ஆண்டு**
- ❖ **20 வயதிற்கு மேல்**

**948)** சுவிட்சர்லாந்தில் எத்தனை முழுக் கன்ரன்களும் அரைக் கன்ரன்களும் உள்ளது?

- ❖ **20 முழுக் கன்ரன்கள்**
- ❖ **06 அரைக் கன்ரன்கள்**

## சிந்தணைகளும் தொடர்பு படும் சிந்தணையாளர்களும்

**949)** இயற்கை உரிமைகள் -**தோமஸ் ஹொப்ஸ்**
**950)** விஞ்ஞான சோசலிசம் - **கார்ல் மார்க்ஸ்**
**951)** அதிகாரம் - **மக்கியவல்லி**
**952)** வலுப்பிரிவினை – **மொண்டஸ்கியூ**
**953)** சட்டத்தின் ஆட்சி– **ஏ.வீ. டைசி**
**954)** சட்ட இறைமை– **ஏ.வீ. டைசி**
**955)** பொதுச்சித்தம் - **ரூசோ**
**956)** மக்கள் இறைமை - **ரூசோ**
**957)** பழம் தாராண்மைவாதம் - **அடம் ஸ்மித்**
**958)** தந்தைவழி ஆதிக்கம் - **சேர் ஹென்ரி மெயின்**
**959)** தாய்வழி அதிகாரம் - **மெக்லெனன்**
**960)** லெனினிசம் - **லெனின்**
**961)** பயனுடமைவாதம் - **ஜெரமி பெந்தம்**
**962)** கற்பனா சோசலிசம் - **தோமஸ் மூர்**
**963)** பின்வந்த நடத்தைவாதம் - **டேவிட் ஈஸ்டன்**
**964)** பிரதிநிதித்துவ அரசாங்கம் - **ஜே.எஸ். மில்**
**965)** தொழிலாளர் புரட்சி– **மார்க்ஸ், லெனின்**
**966)** இலட்சிய அரசு– **பிளேட்டோ**
**967)** விவசாயிகளின் புரட்சி– **மா ஓ சேதுங்**
**968)** சத்தியாக்கிரகம் - **மகாத்மா காந்தி**
**969)** தெரிவுச்சுதந்நிரம் - **கொர்பச்சோ**
**970)** கலப்பு அரசாங்கம் - **ஜெனரல் டீ. கோல்**

## அறிஞர்களும் அவர்களுடன் தொடர்புபட்ட துறைகளும்

**971)** லூதர் குல்லிக் - **பொது நிருவாகவியல்**
**972)** வூட்ரோ வில்சன் - **பொது நிருவாகவியல் ( பொது நிருவாகத்தின் தந்தை )**
**973)** ஜீன்போடின் - **இறைமை**
**974)** டேவிட் ஈஸ்ரன் - **நடத்தையியல்வாதம்**
**975)** ஜோன் ஒஸ்ரின் - **இறைமை**

976) புனிதர் ஒகஸ்டின் - **மத்திய கால அரசியல் சிந்தனை ( கடவுகளின் நகரம்)**
977) ஜிம்மி கார்ட்டர் - **முரண்பாட்டுத் தீர்வியில் துறை ( அமெரிக்காவின் முன்னாள் அதிபர்)**
978) நெல்சன் மன்டேலா– **அரசியல் ( தென்னாபிரிக்காவில் கறுப்பர்களின் உரிமைக்காகப் போராடியவர்)**
979) மார்கிரட் தட்சர் - **அரசியல் ( பிருத்தானியாவின் பெண் பிரதமர் )**
980) எட்மண் பேர்க் - **பழமைவாதம்**
981) ஜோர்ஜ் வாஸிங்டன் - **அரசியல் ( ஐக்கிய அமெரிக்க முதல் ஜனாதிபதி**
982) மா ஓ சேதுங் - **மாவோயிசம் (சீனாவைப் சேர்ந்தவர் )**
983) பிரட்றிக் ஏங்கல்ஸ் - **மாக்ஸிசம்**
984) ஜேனரல் டிகோல் - **(பிரான்ஸின் 5ம் குடியரசு யாப்பின் ஸ்தாபகர்)**
985) ஜோர்ஜ் மிச்செல் - **முரண்பாட்டு தீர்வியல் முறைமை**
986) கான்ஸ் ஜே.மொகன்தோ - **உயர் குழாம் கோட்பாடு**
987) பால்மர் மற்றும் பேர்கின்ஸ் - **சர்வ தேச உறவுகள்**
988) மார்டின் லூதர் கிங் - **சிவில் உரிமைகள்**
989) ஜோகான் கல்துங் - **மோதல் முக்கோணம்**
990) ககன்றி பயோல் - **பொது முாமைத்துவம்**
991) எட்வர் அசார் - **முரண்பாட்டு தீர்வியல் முறைமை**
992) பீட்டர் வொலன்ஸ்டீன் - **முரண்பாட்டு தீர்வியல் துறை**
993) றொபர்ட் ஓவன் - **கற்பணா சோஸலிசம்**

**நாடுகளும் நடைமுறையில் உள்ள பிரதிநிதித்துவ முறைமைகளும்**

994) இலங்கை – **எளிய பெரும்பாண்மை பிரதிநிதித்துவ முறை**
995) இந்தியா – **விகிதாசார பிரதிநிதித்துவ முறை**
996) ஐக்கிய அமெரிக்கா – **எளிய பெரும்பாண்மை பிரதிநிதித்துவ முறை**
997) பிரான்ஸ் - **தனித் தேர்தல் தொகுதி,இரட்டை வாக்கு முறை**
998) சுவிட்சர்ராந்து – **விகிதாசார பிரதிநிதித்துவ முறை**
999) பிரித்தானியா – **எளிய பெரும்பாண்மை பிரதிநிதித்துவ முறை**
1000) ஜேர்மன் - **கலப்பு தேர்தல் முறைமை**
1001) கனடா – **எளிய பெரும்பாண்மை பிரதிநிதித்துவ முறை**
1002) சுவீடன் - **விகிதாசார பிரதிநிதித்துவ முறைமை**
1003) பெல்ஜியம் - **விகிதாசார பிரதிநிதித்துவம் பட்டியல் முறைமை**

**NEW**

**புதிய பாடத்திட்டத்தில் மேலதிகமாக உள்ளடக்கப்பட்ட பாட விடயங்கள்**

**அரசறிவியல் பாடத்துறைக்குட்பட்ட உபதுறைகள்**

1004) புராதன காலம் முதல் தற்காலம் வரை அரசறிவியல் பாடத்துறையில் காணப்படும் உபதுறைகள் எவை?
- ❖ **அரசியல் தத்துவம்**
- ❖ **அரசியல் கருத்தியல்கள்**
- ❖ **அரசியல் கோட்பாடுகள்**
- ❖ **அரசியல் நிறுவனங்கள்**
- ❖ **ஒப்பீட்டு அரசியல்**

1005) அரசியல் தத்துவம் என்பதன் பொருள் யாது?
- ❖ **இறுதி இலக்குகளை முதலில் தீர்மானித்துவிட்டு அது சார்ந்த கருத்துக்களை முன்வைத்துள்ள கருத்துக்களின் தொகுதியாகும்**

1006) அரசியல் தத்துவம் பற்றி ஆய்வு செய்த ஆய்வாளர்கள் இருவரைக் குறிப்பிடுக?
- ❖ **பிளேட்டோ**
- ❖ **காள்மாக்ஸ்**

1007) அரசியல் ஆய்வில் தத்தவ ரீதியாக விளக்கப்படும் எண்ணக்கருக்கள் இரண்டினைக் குறிப்பிடுக?

- ❖ **அரசு,அரசாங்கம்**
- ❖ **சமத்துவம்,சுதந்திரம்**

1008) அரசியல் ஆய்வில் தத்துவ ரீதியாக விளக்கப்படும் அரசியல் சார் பிரச்சினைகள் இரண்டினைக் குறிப்பிடுக?

- ❖ **அரசியல் என்றால் என்ன?**
- ❖ **மக்களுக்கு ஏன் அரசு அவசியம்?**

1009) தற்காலத்தில் அரசியல் செயற்பாடுகளுக்கு வழிகாட்டும் தத்துவக் கருத்தக்கள் இரண்டினைக் குறிப்பிடுக?

- ❖ **சமூக நீதி**
- ❖ **பெண் விடுதலை**

1010) கிரேக்கர் காலம் முதல் தற்காலம் வரை அரசியல் தத்துவம் கவனம் செலுத்தும் விடயங்கள் இரண்டு தருக?

- ❖ **நீதி**
- ❖ **நியாயம்**

1011) அரசியல் தத்துவம் வீழ்ச்சியடைவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் இரண்டு தருக?

- ❖ **நடத்தைவாதத்தின எழுச்சி**
- ❖ **விஞ்ஞான ரீதியான கருத்துக்களின் தோற்றம்**

1012) அரசியல் தத்துவம் மீண்டும் எழுச்சி பெறுவதில் தாக்கம் செலுத்தும் விடயங்கள் இரண்டு தரக?

- ❖ **மரபு ரீதியான ஆய்வின் அவசியம்**
- ❖ **ஜோன் ரோல்ஸின் நீதி பற்றிய கோட்பாட்டின் எழுச்சி**

1013) அரசியல் தத்துவத்தின் எழுச்சிக்காக எழதப்பட்ட நூலினையும் அதன் ஆசிரியரையும் குறிப்பிடுக?

- ❖ **நீதி பற்றிய கோட்பாடுகள்**
- ❖ **ஜோன் ரோல்ஸ்**

1014) அரசியல் தத்துவத்தைத் தீர்மானிக்கும் காரணிகள் இரண்டு தருக?

- ❖ **கால சூழ்நிலை**
- ❖ **ஆய்வாளர்களின் மனோநிலை**

1015) அரசியல் தத்தவத்தின் மூலம் தோற்றம் பெற்ற புதிய கற்கை நெறி யாது?

- ❖ **அரசியல் மெய்யியல்**

1016) அரசியல் கருத்தியல்கள் என்பதன் பொருள் யாது?

- ❖ **அரசியலில் பாதிப்புச் செலுத்துகின்ற அரசியல் செயற்பாட்டிற்கு வழிகாட்டுகின்ற கருத்துக்களையும் நம்பிக்கைகளையும் கொண்டதுமான கருத்தக் குவியலாகும்**

1017) அரசியல் கருத்தியல்கள் தோற்றம் பெறுவதில் செல்வாக்குச் செலுத்தும் புரட்சியையும் அது இடம் பெற்ற காலப்பகுதியையும் குறிப்பிடுக?

- ❖ **1789**
- ❖ **பிரான்ஸியப் புரட்சி**

1018) அரசியல் கருத்தியலின் பிரதான பண்புகள் இரண்டு தருக?

- ❖ **சமுதாயக் குழுக்களை அரசியல் செயற்பாட்டில் ஈடுபடவைக்கும் கருத்துக்கள்**
- ❖ **ஒன்றுடன் ஒன்று இணைந்த கருத்தத் தொகுதிகள்**

1019) அரசறிவியலில் ஆராயப்படுகின்ற அரசியல் கருத்தியல்கள் இரண்டு தருக?

- ❖ **தாராளவாதம்**
- ❖ **பெண்ணியல்வாதம்**

1020) பொருளாதார கொள்கை அடிப்படையில் அரசியலில் காணப்படுகின்ற அரசியல் கருத்தியலக் ள் இரண்டு தரக?

- ❖ **தாராளவாதம்**
- ❖ **மாக்ஸிசவாதம்**

1021) பொது மக்களை முதன்மைப்படுத்தி அரசியலில் தோற்றம் பெற்றுள்ள அரசியல் கருத்தியலக் ள் இரண்டு தருக?

- ❖ **குடியரசுவாதம்**
- ❖ **சமூக ஜனநாயகவாதம்**

1022) அரசியல் கருத்தியல்கள் பற்றி விளக்கியுள்ள சிந்தனையாளர்கள் இருவரைக் குறிப்பிடுக?

- **காள்மாக்ஸ்**
- **மொண்டஸ்கியூ**

1023) நவீண காலத்தில் தோற்றம் பெற்ற அரசியல் கருத்தியல்கள் இரண்டு தருக?

- **பின் காலனித்துவவாதம்**
- **பின் நடத்தைவாதம்**

1024) 18ம் நூற்றாண்டு காலப்பகுதியில் தோற்றம் பெற்ற அரசியல் கருத்தியலக் ள் இரண்டு தருக?

- **தாராளவாதம்**
- **பயனுடமைவாதம்**

1025) அரசியல் கோட்பாடு என்பதன் பொருள் விளக்கம் யாது?

- **சமூகத்தில் இடம்பெறுகின்ற நிகழ்வுகளையும் அரசியல் நிறுவனங்களையும் மற்றும் அவை ஏன் எவ்வாறு நிகழ்கின்றன என்பதையும் விபரிப்பதற்கு ஆய்வாளர்கள் பயன்படுத்தும் கருவியாகும்**

1026) இயற்கை விஞ்ஞானத்தில் பயன்படுத்தப்படும் கோட்பாடுகள் இரண்டு தருக?

- **நியூட்டனின் புவியீர்ப்பு கோட்பாடு**
- **சூரியமையக் கோட்பாடு**

1027) அரசியல் கோட்பாட்டின் பிரதான இரு வகைப்பாடுகளும் எவை?

- **நியமம் சார் கோட்பாடு**
- **விஞ்ஞான கோட்பாடு**

1028) அரசறிவியலில் ஆய்வு செய்யப்படுகின்ற கோட்பாடுகள் இரண்டு தருக?

- **அரசு பற்றிய கோட்பாடு**
- **சமூக ஒப்பந்தக் கோட்பாடு**

1029) அரசறிவியலில் உள்ள மரபு ரீதியான கோட்பாடுகள் இரண்டு தருக?

- **அதிகாரம் பற்றிய கோட்பாடு**
- **அரிஸ்டோட்டிலின் அரசு பற்றிய கோட்பாடு**

1030) அரசறிவியலில் உள்ள நேர்மறை சார் கோட்பாடுகள் இரண்டு தருக?

- **தாராண்மைவாத கோட்பாடு**
- **மாக்ஸிசவாத கோட்பாடு**

1031) அரசியல் கோட்பாடு விஞ்ஞானம் சார்ந்த கோட்பாடுகளில் இருந்து இரு முறைகளில் விலகிச் செல்கின்றது அவை எவை?

- **காலத்திற்கு காலம் மாற்றம் அடையும் தன்மையுடையது**
- **முடிவுகள் நம்பகத் தன்மையற்றது**

1032) அரசியல் நிறுவனங்களின் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் சமூக விஞ்ஞானத் துறைகள் இரண்டு தரக?

- **பொருளியல்**
- **கல்வியியல்**

1033) அரசியல் நிறுவனங்களின் பிரதான இரு வகைப்பாடுகளும் எவை?

- **முறைசார் நிறுவனங்கள்**
- **முறைசாரா நிறுவனங்கள்**

1034) அரசறிவியலில் செயற்படுகின்ற முறையான நிறுவனங்கள் இரண்டு தருக?

- **பாடசாலை,பல்கலைக்கழகம்**
- **பாராளுமன்றம்**

1035) அரசறிவியலில் செயற்படுகின்ற முறையற்ற நிறுவனங்கள் இரண்டு தருக?

- **குடும்பம்,குலம்**
- **வர்க்கம்**

1036) அரசாங்கத்தின் பிரதான செயற்பாட்டு நிறுவனங்கள் எவை?

- **சட்டத்துறை**
- **நிருவாகத்துறை**
- **நீதித்துறை**

1037) அரசாங்கத்திற்கு வழிகாட்டியாக செயற்படுகின்ற நிறுவனங்கள் இரண்டு தருக?

- **அமுக்கக் குழுக்கள்**

❖ **சிவில் சமூகம்**

1038) அரசாங்கத்திற்கு அழுத்தங்களைக் கொடுக்கும் நிறுவனங்கள் இரண்டு தரக?

❖ **அமுக்கக் குழுக்கள்**

❖ **சிவில் சமூகம்**

1039) பொது மக்கள் நலன் கருதி செயற்படுகின்ற அரசியல் நிறுவனங்கள் இரண்டு தருக?

❖ **அமுக்கக் குழுக்கள்**

❖ **சிவில் சமூகம்**

1040) அரசு,அரசாங்க நிறுவனங்களுக்கு இடையிலான பிரதான வேறுபாடுகள் இரண்டு தருக?

❖ **அரசு மாற்றமடையாத தாபனம் அரசாங்கம் காலத்திற்கேற்ப மாற்றமடையும்**

❖ **அரசு எஜமான் அரசாங்கம் அவ்வரசின் ஊழியன்**

1041) அரசறிவியலில் அரசு,அரசாங்கத்தினால் தோற்றுவிக்கப்படும் அரசியல் நிறுவனங்கள் இரண்டு தருக?

❖ **பாராளுமன்றம்**

❖ **நீதிமன்றங்கள்**

1042) அரசு,அரசாங்கம் எனும் நிறுவனங்களை முதன்முதலாக வேறுபடுத்திக் காட்டியவரும் அவரால் எழுதப்பட்ட நூலினையும் குறிப்பிடுக?

❖ **ஜோன் லொக்**

❖ **சிவில் அரசாங்கத்தின் இரு உடன்படிக்கைகள்**

1043) அரசு,அரசாங்கம் ஆகிய நிறுவனங்களுக்கு இடையில் எந்தவிதமான வேறுபாடுகளையும் காட்டாத மன்னர்கள் இருவரைக் குறிப்பிடுக?

❖ **14ம் லூயி மன்னன்**

❖ **ஸ்ருவட்**

## அரச மாதிரிகள்

1044) அரசறிவியல் காணப்படும் பழமை வாய்ந்த அரசு முறைகள் இரண்டைக் குறிப்பிடுக?

❖ **கோத்திர அரசு**

❖ **கிரேக்க நகர அரசு**

1045) கோத்திர அரசின் பிரதான இயல்புகள் இரண்டைக் குறிப்பிடுக?

❖ **குலத்தின் வழியாக தோன்றிய அரசு**

❖ **பரம்பரை வழியிழமைந்த தலமைத்துவம்**

1046) சிம்பாவே நாட்டில் காணப்படும் கோத்திர அரசுகள் இரண்டைக் குறிப்பிடுக?

❖ **சேனா கோத்திர அரசு**

❖ **மன்னியக்கா கோத்திர அரசு**

1047) தென்னாபிரிக்கா நாட்டில் காணப்படும் கோத்திர அரசுசினை குறிப்பிடுக?

❖ **சூலு கோத்திர அரசு**

1048) உகான்டா நாட்டில் காணப்படும் கோத்திர அரசினை குறிப்பிடுக?

❖ **கவாக்கா கோத்திர அரசு**

1049) கோத்திர அரசின் பிரதான குறைபாடுகள் இரண்டைக் குறிப்பிடுக?

❖ **முழு வடிவம் பெறாத ஓர் அரசு முறைமை**

❖ **மூடநம்பிக்கை மேலோங்கிக் காணப்பட்டமை**

1050) முடியாட்சி அரசு என்பதன் விளக்கம் யாது?

❖ **பரம்பரை வழியாக அரசியல் அதிகாரத்திற்கு வழிகோலும் தனிநபர் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் ஆட்சியாகும்**

1051) தற்காலத்தில முடியரசு முறை காணப்படும் நாடுகள் இரண்டைக் குறிப்பிடுக?

❖ **சவுதி அரேபியா**

❖ **பூட்டான்**

1052) முடியரசு முறையின் இயல்புகள் இரண்டைக் குறிப்பிடுக?

❖ **அரசன் பரம்பரை வழியாக ஆட்சி பீடம் ஏறுதல்**

❖ **ஆட்சியாளனின் தனிப்பட்ட கட்டளைகள் சட்டங்களாக்கப்படும்**

1053) முடியரசு முறையின் குறைபாடுகள் இரண்டைக் குறிப்பிடுக?

❖ **தனிமனித சர்வாதிகார ஆட்சிமுறைமை காணப்படல்**

❖ **பொது மக்கள் கருத்துக்கள் பலவீனமடைதல்**

1054) முதன்முதலில் முடியரசு முறைமை தோற்றம் பெற்ற நாடுகள் இரண்டைக் குறிப்பிடுக?

❖ **1688 பிரித்தானியா**

❖ **1789 பிரான்ஸ்**

1055) காலனித்தவ அரசு என்பதன் விளக்கம் யாது?

❖ **ஐரோப்பிய காலனியாதிக்கத்திற்கு நேரடியாக கட்டுப்பட்டிருந்த ஐரோப்பா அல்லாத நாடுகளில் விருத்தியடைந்த அரச மாதிரியாகும்**

1056) காலனித்தவ அரசின் இயல்புகள் இரண்டைக் குறிப்பிடுக?

❖ **காலனியாதிக்கதிற்கு உட்பட்டுள்ள முழுச் சமுதாயத்தையும் உள்ளடக்கியது**

❖ **குடியேற்ற நாட்டின் எந்த வர்க்கத்தையும் தனது உறுப்பினராக கொண்டிருப்பதில்லை**

1057) காலனித்தவ அரசுகள் தோற்றம் பெற்ற நாடுகள் இரண்டைக் குறிப்பிடுக?

❖ **இலங்கை**

❖ **இந்தியா**

1058) பின் காலனித்தவ அரசின் பிரதான பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக?

❖ **காலனித்தவ அரசின் குறைகளை நிவர்த்தி செய்யும் அரசு முறைமை**

❖ **வலுவான இரானுவம் சிவில் நிருவாகம் காணப்படல்**

## அரசியல் கருத்தியல்கள்

1059) மத சார்பின்மைவாதம் என்பதன் விளக்கம் யாது?

❖ **அரச நிறுவனங்களில் சமயத்தின் அழுத்தம் ஏற்படாமல் இரண்டும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட சுயாதீனமான துறைகளாக கருதப்படுவதாகும்**

1060) மதசார்பின்மைவாதம் எனும் சொற்பதத்தை முதன்முதலாக பயன்படுத்தியவர்?

❖ **ஜோர்ஜ் ஜாகப் கெலிடெக்**

1061) மதசார்பின்மை வாதத்துடன் தொடர்பு படும் அரசியல் கருத்தியல்கள் இரண்டைக் குறிப்பிடுக?

❖ **பழம் தாராண்மைவாதம்**

❖ **சமவுடமைவாதம்**

1062) மதசார்பின்மைவாதம் தோற்றம் பெறுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் இரண்டைக் குறிப்பிடுக?

❖ **ஐரோப்பிய மறுமலர்ச்சி**

❖ **திருச்சபையின் எழுச்சி**

1063) மதசார்பின்மைவாதத்தின் பிரதான அனுகூலங்கள் இரண்டைக் குறிப்பிடுக?

❖ **அரச நிறுவனங்களில் சமய ரீதியான பாகுபாடு காணப்படாமை**

❖ **மத சுதந்திரம் காணப்படல்**

1064) மதசார்பின்மைவாதத்தின் பிரதான வகைப்பாடுகள் இரண்டைக் குறிப்பிடுக?

❖ **தாராண்மை மதசார்பின்மைவாதம்**

❖ **சமவுடமை மதசார்பின்மைவாதம்**

1065) தேசியவாதம் என்பதன் பொருள் விளக்கம் யாது?

❖ **ஒரே இனம்,மொழி,சமயம்,வரலாறு,இலக்கியம்,பொருளாதாரம்,அரசியல் நாட்டம் கொண்ட மக்களிடையே காணப்படும் ஒற்றுமையான உணர்வு ஆகும்**

1066) தேசியம் NATION என்பதற்கு இரண்டு முறைகளில் பொருள் கொள்ளப்படுகின்றது அவை எவை?

❖ **பிறப்பு**

❖ **இனம்**

1067) 19ம் நூற்றாண்டில் தேசியம் என்ற பதம் விளக்கி நிற்கும் எண்ணக்கருக்கள் இரண்டைக் குறிப்பிடுக?

❖ **அரசியல் சுதந்திரம்**

❖ **ஆளுமை**

1068) தேசியவாதம் பற்றி ஆய்வு செய்த ஆய்வாளர்கள் இருவரைக் குறிப்பிடுக?

- **கான்ஸ் கோன்**
- **கார்ணர்**

1069) தேசியவாதம் எனும் சொற்பதத்தை முதன்முதலாக பயன்படுத்தியவர் யார்?
- **ஒகஸ்டின் பருவல்**

1070) தேசியவாதம் சர்வதேச கருத்தியலாக மாற்றமடைவதற்கு பங்களிப்புச் செய்த தாபனங்கள் இரண்டைக் குறிப்பிடுக?
- **ஐக்கிய நாடுகள் தாபனம்**
- **ஐரோப்பிய ஒன்றியம்**

1071) தேசியவாதத்தின் பரதான வகைப்பாடுகளைக் குறிப்பிடுக?
- **தாராண்மைவாத தேசியவாதம்**
- **பழமைவாத தேசியவாதம்**
- **விரவாக்கல் தேசியவாதம்**
- **பின்காலனித்தவ தேசியவாதம்**
- **நவீனகால தேசியவாதம்**

1072) தாராண்மைவாத தேசியவாத சிந்தனையை கட்டியெழுப்பிய சிந்தனையாளர்கள் இருவரைக் குறிப்பிடுக?
- **குஸிப்பே மஸினி**
- **சைமன் பொலிவர்**

1073) பழம் தேசியவாதத்தை கட்டியெழுப்பிய சிந்தனையாளர்கள் இருவரைக் குறிப்பிடுக?
- **பிரான்ஸிய முன்னாள் அதிபர் சார்ள்ஸ் டீகோல்**
- **பிரித்தானிய முன்னாள் பெண் பிரதமர் மார்கிரட் தட்சர்**

1074) விரிவாக்கல் தேசியவாதத்தை கடைப்பிடித்த நாடுகள் இரண்டைக் குறிப்பிடுக?
- **இந்தியா**
- **சீனா**

1075) தேசிய அடையாளச் சின்னங்கள் இரண்டைக் குறிப்பிடுக?
- **மொழி**
- **மதம்**

1076) தேசியவாத கருத்தியலின் அனுகூலங்கள் இரண்டைக் குறிப்பிடுக?
- **நாட்டு மக்கள் மத்தியில் தேசப்பற்று வளர்கின்றது**
- **சமுதாய ஒற்றுமை பேணப்படுகின்றது**

1077) தேசியவாதக் கருத்தியலின் பாதகங்கள் இரண்டைக் குறிப்பிடுக?
- **தேசிய உணர்வு மிகைப்படுத்தப்பட்டு மோதல் ஏற்படுகின்றது**
- **உலக மகா யுத்தம் ஏற்பட வழியமைக்கின்றது**

## 2015 முதல் 2019 வரையான கடந்தகால வினாத்தாள்களில் கேட்கப்பட்ட சுருக்க வினாக்கள்

### 2015 ஆகஸ்ட் பரீட்சை வினாத்தாள்

1078) அரசியல் விளையாட்டை ஆடுவதற்கு இரு வழிகளுண்டு அவ் இரு வழிகளையும் குறிப்பிடுக.
- **ஜனநாயக வழிமுறை**
- **புரட்சிகர வழிமுறை/ ஜனநாயகமல்லாத வழிமுறை**

1079) கிரேக்க நகர அரசுகளில் நேரடி சனநாயகம் இரு காரணங்களினால் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. அவ் இரு காரணங்களையும் குறிப்பிடுக.
- **அரசின் ஆள்புலப்பரப்பு சிறியதாக இருந்தது.**
- **அரசியல் அதிகாரம் பிரஜைகளுக்கு மட்டும் உரித்தாகியிருந்தமை**

1080) இரு கிரேக்க அரசியல் தத்துவஞானிகள் அரசியல் விஞ்ஞானம் ஒரு கற்கைத்துறையாக உருப்பெறவும் அபிவிருத்தியடையவும் பெரும் பங்காற்றியுள்ளனர். இவ் இரு அரசியல் தத்துவஞானிகளையும் குறிப்பிடுக.

- **பிளேட்டோ**
- **அரிஸ்டோட்டில்**

1081) (1) **பொதுச்சித்தம்** மற்றும்
(2) **சட்டத்தின் ஆட்சி** ஆகிய இரு எண்ணக்கருக்களையும் முறையாக முன்வைத்த இரு அரசியல் சிந்தனையாளர்களையும் முறையே குறிப்பிடுக.

- **ஜீன் ஜக் ரூசோ**
- **A.V. டைசி**

1082) 1) **"மக்களினால் மக்களுக்காக நடத்தப்படும் மக்களின் ஆட்சியே ஜனநாயகமாகும்."**
**2) "தற்கால அரசுகளின் நிறைவேற்றுத்துறை முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்களை முகாமைப்படுத்தும் ஒரு குழுவேயன்றி வேறொன்றுமல்ல"**
நவீன அரசுகளின் அரசாங்கம் தொடர்பான மேற்குறிப்பிட்ட இரு கூற்றுக்களையும் முன்வைத்த இரு அரசியல் சிந்தனையாளர்களையும் முறையே குறிப்பிடுக.

- **ஆபிரகாம் லிங்கன்**
- **கார்ல் மார்க்ஸ்**

1083) 1) **"நிறைவேற்றுத்துறைக்கும் சட்டத்துறைக்குமிடையிலான தொடர்பு சேய்மையானதாகும்"**
2) **"நிறைவேற்றுத்துறைக்கும் சட்டத்துறைக்குமிடையிலான தொடர்பு மிக நெருங்கியதாக இருப்பதோடு அதன் காரணமாக அவ்விரு நிறுவனங்களும் ஒன்றில் இருந்து ஒன்று தங்கியுள்ளன."**
மேற்குறிப்பிட்ட நிறைவேற்று சட்டத்துறை தொடர்புகளைக் காணக்கூடிய இரு அரசாங்க முறைகளையும் முறையே குறிப்பிடுக.

- **ஜனாதிபதி அரசாங்க முறை**
- **கேபினட் அரசாங்க முறை**

1084) 1) "அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுதல் பிரதான நோக்கமாகும்."
2) "அரசியல் அதிகாரத்தைக் கையாளுபவர்கள் மீது செல்வாக்குச் செலுத்துவதனூடாகத் தனிப்பட்ட நலன்களை மேம்படுத்துவதே பிரதான கரிசனையாகும்.
மேற்குறிப்பிட்ட இரு கூறுகளுக்கும் பொருந்தும் இரு வகை ஒழுங்கமைப்புக்களையும் முறையே குறிப்பிடுக.

- **அரசியல் கட்சிகள்**
- **அமுக்கக் குழுக்கள்**

1085) 1) ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதியின் பதவிக் காலமும் ஓர் ஆள் அப்பதவிக்குத் தெரிவு செய்யப்படக் கூடிய தவணைகளின் எண்ணிக்கையும் யாவை?
2) பிரான்சிய ஜனாதிபதியின் பதவிக்காலமும் ஓர் ஆள் அப்பதவியை வகிக்கக்கூடிய தவணைகளின் எண்ணிக்கையும் யாவை?

- **நான்கு வருடங்கள் - இரண்டு தவணைகள்**
- **ஐந்து வருடங்கள் - இரண்டு தவணைகள்**

1086) 1) பிரித்தானிய அரசாங்கத்தின் அரசியல் நிர்வாகத்தினைப் பெயரிடுக.
2) பிரித்தானிய நீதித்துறை முறைமையின் அதி உயர் நீதிமன்றத்தினைப் பெயரிடுக.

- **பிரதமர் தலைமையிலான அமைச்சரவை**
- **உயர் நீதிமன்றம்**

1087) 1) சுவிற்சர்லாந்தின் சமஷ்டிப் பேரவையின் (federal council) அமைவுச் சேர்க்கையும் அப்பேரவையின் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படும் விதமும் யாது?
2) இந்தியாவில் இராஜ்ய சபா என்றழைக்கப்படும் மத்திய அரசாங்கத்தின் இரண்டாம் மன்றம் இரு வகையான உறுப்பினர்களைக் கொண்டு அவ் இரு வகையான உறுப்பினர்களையும் குறிப்பிடுக.

- **07 உறுப்பினர்கள் - சமஷ்டிச் சட்டத்துறையினால்**
- **ஜனாதிபதியால் பெயர் குறிக்கப்பட்டு 12 பேர், மாகாண அரசுகளினால் 238 பேர்.**

## 2016 ஆகஸ்ட் பரீட்சை வினாத்தாள்

**1088)** கீழே குறிப்பிடப்பட்டுள்ள இரு கூற்றுகளும் இரு அரசியல் முறைமைகளில் அரசுக்கும் பிரசைகளுக்குமுள்ள தொடர்புகள் ஆளப்படும் விதத்தைக் குறிப்பிடுகின்றன. அவ் இரு அரசியல் முறைமைகளையும் இனங்கண்டு முறையே பெயரிடுக.

1) ‘‘இந்த அரசியல் முறைமையில் அரசாங்கப் பதவிகளுக்கு நியமனம் பெறுவதற்குப் போட்டி நிலவுகிறது. தெரிவானது அதிகாரப் பிரயோகமின்றி, எச்சமூகக் குழுவினரையும் தவிர்த்து விடாது நியாயமான, காலாகாலத் தேர்தல்கள் மூலம் நடைபெறும். தமது தலைவர்களைத் தெரிவு செய்வதிலும் பொதுக்கொள்கை உருவாக்கத்திலும் குடிகள் பங்கேற்க முடியும். அரசியல் முறைமையினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள சிவில், அரசியல் சுதந்திரங்களின் கீழ் போட்டிகளினதும் பங்கேற்பினதும் நேர்மைத்தன்மை பாதுகாக்கப்படும்.

2) ‘‘இவ்வரசியல் முறைமையில் குடிகளின் வாழ்க்கை தனிப்பட்டதாயினும் பொதுவானதாயினும் அதன் சகல அம்சங்களையும் கட்டுப்படுத்துவதிலும் வழிப்படுத்துவதிலும் அரசு தலையிடும். இதன் பொருள் அரசினால் தீர்மானிக்கப்படும் சில நோக்கங்களைப் பூர்த்தி செய்வதனை இலக்காகக் கொண்டு மக்களின் அரசியல், பொருளாதார, சமூக கலாசார புலமைசார் வாழ்க்கை அரசினால் நெறிப்படுத்தப்படும் என்பதாகும். அரசை எதிர்ப்பதற்கோ, விமர்சிக்கவோ, புதிய நோக்கமொன்றை முன்வைக்கவோ குடிகளுக்கு உரிமையில்லை.’’

- ❖ **ஜனநாயக ஆட்சி/ஜனநாயகம்/தாராள ஜனநாயக அரசியல் முறை/விபரல/மக்களாட்சி**
- ❖ **பாசிச ஆட்சி சர்வாதிகார ஆட்சி**

**1089)** கீழே தரப்பட்டடுள்ள இரு கூற்றுக்களாலும் வெளிப்படுத்தப்படும் இரு அரசியல் தாபனங்களையும் முறையே பெயரிடுக.

1) ‘‘இவ்வரசியல் தாபனம் ஆள்புலத்தில் வாழும் சகல பிரசைகளையும் உள்ளடக்கியதாகும்.’’

2) ‘‘இவ்வரசியல் தாபனம் ஆள்புலத்தில் வாழும் பிரசைகளுள் ஒரு பகுதியினரை மட்டும் உள்ளடக்கியதாகும்.

- ❖ **அரசு/தேசிய அரசு**
- ❖ **அரசாங்கம்**

**1090)** கீழே குறிப்பிடப்பட்டுள்ள இரு கூற்றுக்களாலும் வெளிப்படுத்தப்படும் இரு சங்கங்களையும் பெயரிடுக.

1) ‘‘அது ஓர் ஆள்புலத்தைக் கொண்ட ஒரு நிறுவனமாகும். அது ஒரு நிச்சயமான ஆள்புலத்தைக் கொண்டதாகும்.

2) ‘‘அது அனைத்துலக ரீதியானதாகும். அது ஆள்புல எல்லைகளைக் கொண்டதன்று’’

- ❖ **அரசு/ தேசிய அரசு**
- ❖ **அரசு**

**1091)** கீழே குறிப்பிடப்பட்டுள்ள முதற் கூற்றின் மூலம் விபரிக்கப்படும் சமூக ஒழுங்கமைப்பையும் இரண்டாம் கூற்றின் மூலம் விபரிக்கப்படும் அரசியல் ஒழுங்கமைப்பையும் முறையே பெயரிடுக.

1) ‘‘அது பொதுவான இனத்தையும், பொதுவான சமயத்தையும், பொதுவான வாழிடத்தையும், பொதுவான மொழியையும், பொதுவான வரலாற்றுப் பாரம்பரியத்தையும், பொதுவான நலன்களையும், பொதுவான அரசாங்கத்தையும், புவியியல் ஐக்கியத்தையும் கொண்டமைந்ததாகும்.’’

2) ‘‘அது ஆள்புலம், மக்கட் தொகை, அரசாங்கம், இறைமை ஆகிய நான்கு அத்தியாவசியக் கூறுகளைக் கொண்டதாகும். இந்த நான்கு கூறுகளும் நிலவும்போது அதன் இருப்பு நிகழும்’’

- ❖ **தேசம்**
- ❖ **அரசு**

**1092)** கீழே குறிப்பிடப்பட்டுள்ள இரு கூற்றுக்களின் மூலம் சுட்டப்படும் இரு அரசியல் தத்துஞானிகளையும் குறிப்பிடுக.

1) ‘‘அரசியல் சமூகக் கோட்பாட்டு வரலாற்றில் இடம்பெறும் முதல் இலட்சியவாத அரசியல் தத்துவஞானி’’

2) ‘‘அரசியல் சமூகக் கோட்பாட்டு வரலாற்றில் இடம்பெறும் முதல் யதார்த்தவாத அரசியல் தத்துவஞானி’’

- ❖ **பிளேட்டோ**
- ❖ **அரிஸ்ரோட்டில்1**

**1093)** கீழே குறிப்பிடப்பட்டுள்ள இரு கூற்றுக்களாலும் இடைத் தொடர்புடைய இரு விடயங்களின் விடயப்பரப்புக்கள் விளக்கப்படுகின்றன. அவற்றை இனங்கண்டு முறையே பெயரிடுக.

1) ‘‘அது அரசியல் விஞ்ஞானத்தின் ஒரு விடயப் பரப்பாகும். அது அரசினால் ஆக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதனை மீறுதல் ஒரு குற்றமாக இருப்பதோடு தண்டனைக்கும் ஆளாக முடியும். அது அகிலரீதியானதும் சகலர் மீதும் பிரயோகிக்கப்படக்கூடிஙயதுமாகும். அது துல்லியமானதும் நிச்சயமானதுமாகும். அது மனிதனின் வெளிவாரியான செயற்பாடுகளில் மட்டுமே கவனம் செலுத்துகிறது.’’

2) ‘‘அது அறவியலின் விடயப் பரப்பாகும். அது தனிப்பட்டோரின் மனச்சாட்சியால் நடைமுறைப்படுத்தப்படுவதனால் அது மனச்சாட்சியினால் தீர்மானிக்கவும்படுகிறது. அது மனிதரின் சிந்தனைகளையும் செயல்களையும் உள்ளடக்கிய முழு வாழ்க்கையையும் வெளிப்படுத்துகின்றது. அது வாழ்க்கையின் உள்ளக. வெளியகச் செய்கைகளையும் வெளிப்படுத்துகிறது. அதனை மீறுதல் சட்டப்படி குற்றமன்று அதனால் பௌதீகரீதியான தண்டனைக்குட்படுவதுமில்லை.’’

- ❖ **சட்டம்**
- ❖ **ஒழுக்கம்**

**1094)** கீழே குறிப்பிடப்பட்டுள்ள இரு பொருள் விளக்கங்களாலும் சுட்டப்படும் இரு அரசாங்க முறைகளையும் குறிப்பிடுக.

1) ‘‘அது ஓர் ஆட்சி முறையெனப் பொருள் கூறுப்படுவதோடு அம்முறைமையில் அரசின் சித்தமானது மக்களின் நேரடியான பங்கேற்பின் ஊடாக வெளிப்படுத்தப்படுகிறது.’’

2) ‘‘அது ஓர் அரசாங்க முறையாக இருப்பதோடு சட்ட இறைமையாளர்களான வாக்காளர்கள் நேரடியாக அரசாங்கப் பொறிமுறையில் தலைமைத்துவத்தை செயற்படுத்துவதற்குப் பதிலாக தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்தி தம் சார்பாகச் செயற்படுத்துவதற்கான இயலளவைக் கொண்ட ஓர் ஆட்சித்தாபனம் அல்லது தாபனங்கள் தாபிக்கப்பட்ட போது உருவாகியது.’’

- ❖ **நேரடி ஜனநாயக அரசாங்க முறை/ நேர் ஜனநாயக முறை**
- ❖ **பிரிதிநிதித்துவ அரசாங்க முறை/ நேரில் ஜனநாயகம்**

**1095)** கீழே குறிப்பிடப்பட்டுள்ள இரு வரைவிலக்கணங்களும் அரசாங்கத்தின் பணிகளை நடைமுறைப்படுத்தல். அரச அதிகாரத்தின் தன்மை என்பன தொடர்பாக முன்வைக்கப்பட்ட இரு அரசியல் கோட்பாடுகள் பற்றியனவாகும். அவ் இரு கோட்பாடுகளையும் இனங்கண்டு முறையே குறிப்படுக.

1) ‘‘அரசாங்கத்தின் மூன்று பணிகளான சட்டவாக்கம், நிறைவேற்றம், நீதி என்பன வேறுபட்ட ஆட்கள் குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் ஒவ்வொரு துறையும் அதற்கேயுரிய செயற்பாட்டுப் பரப்போடு வரையறுக்கப்பட வேண்டும் என்றும் அச்செயற்பாட்டுப் பரப்பு சுதந்திரமானதாகவும் உயர்தன்மை பொருந்தியதாகவும் இருக்க வேண்டும் என்றும் இக்கோட்பாடு சுட்டுகிறது.’’

2) ‘‘அது சட்டத்தால் தகைக்க முடியாத பிரசைகள் மற்றும் குடிகள் மீது பிரயோகிக்கப்படும் அரசின் உயர் அதிகாரமாகும். அது தன்னிகரற்றதும் உயர்தன்மையானதும் தனிமுதன்மையானதும் பிரிக்க முடியாததும் ஒப்படைக்க முடியாததும் நிரந்தரமானதுமாகும். இது இறுதியான ஆணையதிகாரமாக இருப்பதோடு உள்ளகமானது, வெளியகமானது என இரு வகைப்படும்.

- ❖ **வலுவேறாக்கக் கோட்பாடு/ வலுவேறாக்கம் அதிகார வேறாக்கம்**
- ❖ **இறைமைக் கோட்பாடு/ இறைமை**

**1096)** கீழே தரப்பட்டுள்ளவை இரு வேறுபட்ட அரசாங்க முறைகளில் நிறைவேற்றுத்துறை – சட்டத்துறைத் தொடர்புகளின் இயல்புகளாகும். அவ் இரு அரசாங்கங்களையும் இனங்கண்டு முறையே பெயரிடுக.

1) ‘‘சட்டத்துறையும் நிறைவேற்றுத்துறையும் வெவ்வேறாகத் தெரிவு செய்யப்படுவதோடு அவற்றுக்கு யாப்பின் மூலம் சுதந்திரமான செயற் பரப்புகள் ஒப்படைக்கப்படும். அங்கு சட்டத்துறைக்கும் நிறைவேற்றுத்துறைக்கும் ஆட்கள் உத்தியோக ரீதியாகப் பிரிக்கப்படுவர். நிறைவேற்றுத் துறை யாப்பு ரீதியாக சட்டத்துறைக்குப் பொறுப்புக் கூறக் கடமைப்படாததோடு, குற்றவிசாரணை என்ற தனித்துவமான ஒரு செயன்முறையினூடாகவன்றி சட்டத்துறையினால் நிறைவேற்றுத்துறையைப் பதவி நீக்கம் செய்ய முடியாது.’’

2) ''அங்கு நாம நிறைவேற்றுப் பகுதி, உண்மை நிறைவேற்றுப்பகுதி என்ற இரு பகுதிகள் காணப்படுவதோடு உண்மை நிறைவேற்றுப் பகுதியானது சட்டத்துறையிலுள்ள அரசியல் கட்சிகளின் பிரதிநிதித்துவத்தின் பலத்தின் அடிப்படையில் சட்டத்துறையிலிருந்து தெரிவு செய்யப்படும் ஆட்களைக் கொண்டிருக்கும். ஆகவே அங்கு வேறாகத் தெரிவு செய்யப்படும் நிறைவேற்றுத் துறை இருக்கமாட்டாது. உண்மை நிறைவேற்றுத்துறை சட்டத்துறையிலிருந்து தெரிவு செய்யப்படுவதால் அது சட்டத்துறைக்குப் பொறுப்புக் கூறக் கடமைப்பட்டதாகும். இதன்படி நிறைவேற்றுத்துறை சட்டத்துறையின் நம்பிக்கையில் தங்கியிருப்பதோடு அந்நம்பிக்கையை இழப்பின் பதவியிலிருந்து அகற்றப்படலாம்.''

- ❖ **ஜனாதிபதி அரசாங்கமுறை**
- ❖ **மந்திரி சபை அரசாங்க முறை அமைச்சரவை கபினட் வெஸ்ற்மினிஸ்ரர் மாதிரி**

**1097)** கீழே குறிப்பிடப்பட்டவை நேரடி சனநாயகத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் இரு வழிமுறைகளாகும். அவற்றை முறையே குறிப்பிடுக.

1) ''இது மசோதாக்கள் சட்டமாக நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்னர் மக்களின் தீர்ப்பினைப் பெற்றுக்கொள்வதற்காகப் பயன்படுத்தப்படும் மக்கள் அபிப்பிராயத்தைக் கோரும் ஒரு வழிமுறையாகும். அதன் படி சட்டததுறை நிறைவேற்றும் மசோதாக்கள் வாக்காளர்களுள் பெரும்பான்மையினரின் அங்கிகாரத்தினைப் பெற்றாலேயே சட்டங்களாக ஆகும்.''

2) ''இது தெரிவு செய்யப்பட்ட ஒரு பிரதிநிதி தனக்கு வழங்கப்பட்டுள்ள மக்கள் ஆணையை மீறினால் அப் பிரதி நிதியைப் பதவியகற்றுவதற்குப் பயன்படுத்தும் வழிமுறையாகும். இது தொடர்பாக முன்வைக்கப்படும் ஒரு விண்ணப்பத்தை தேர்தல் தொகுதியிலுள்ள வாக்காளர்களுள் பெரும்பான்மையினர் அங்கிகரிப்பின் அப் பிரதிநிதியைப் பதவியிலிருந்து அகற்ற முடியும்.''

- ❖ **ஒப்பங்கோடல் மக்கள் தீர்ப்பு குடியொப்பம்**
- ❖ **மீளழைத்தல் திருப்பியழைத்தல் (Recall), மீளமைத்தல்.**

## 2017 ஆகஸ்ட் பரீட்சை வினாத்தாள்

**1098)** ''அரசியல் என்பது அதிகாரத்துக்கான போராட்டமாகும்'' அப்போராட்டம் இரு வழிகளில் மேற்கொள்ளப்படுகிறது அவ்விரு வழிகளையும் பெயரிடுக.

- ❖ **ஜனநாயக வழி முறை**
- ❖ **புரட்சிகர முறை/ ஜனநாயகம் இல்லாத வழிமுறை**

**1099)** மனிதர் அரசியலைப் பல்வேறு வழிகளில் கற்றுக்கொள்கின்றனர். பரந்த அடிப்படையில், அவை இரு பிரதான வகுதிகளாக வகைப்படுத்தப்படுகின்றன. அவ்விரு வகுதிகளையும் பெயரிடுக.

- ❖ **முறைசார் வழிமுறை**
- ❖ **முறைசாரா வழிமுறை**

**1100)** கீழே தரப்பட்டுள்ள இரு கூற்றுகளும் அரசியல் விஞ்ஞானக் கற்கைக்கான இரண்டு அணுகுமுறைகளின் சில பண்புகளைச் சுட்டிக்காட்டுகின்றன. அவ் இரண்டு அணுகுமுறைகளையும் பெயரிடுக.

1) ''அது ஆட்களினதும் சமூகக் குழுக்களினதும் நடத்தைகளைப் பற்றிய அனுபவம்சார் பகுப்பாய்வில் கவனம் செலுத்துகிறது. அது சமூக உளவியல், சமூகவியல் மற்றும் கலாசார மானிடவியல் என்பவற்றோடு தொடர்பான கோட்பாடுகளையும் ஆராய்ச்சிகளையும் இணைக்க முயற்சிக்கின்றது. அது கோட்பாட்டினதும் ஆராய்ச்சியினதும் பரஸ்பரம் தங்குநிலையினை வலியுறுத்துகிறது. அது ஆழமான அனுபவம்சார் ஆராய்ச்சிச் செய்முறையினை அபிவிருத்தி செய்ய முயற்சி செய்கிறது. அது பெறுமதி சாராக் கற்கையை வலியுறுத்துகிறது.''

2) ''அது இயல்பளவில் எதிர்வுகூறுக் கூடியதும் உய்த்தறியக் கூடியதுமாகும். அது நிச்சயமான கருதுகோள்களுடன் ஆரம்பித்து அவற்றைச் சிறந்த முறையில் யாதார்த்தபூர்வமாக்கும் நிறுவனங்களை நிர்ணம் செய்கிறது. யதார்த்த உலகினில் உண்மையாக இருப்பனவற்றை விட எவை இருக்க வேண்டும் என்பதில் பிரதான கரிசனை செலுத்துகிறது.''

- ❖ **நடத்தைவாதம்**
- ❖ **தத்துவார்த்த அணுகுமுறை**

**1101)** பின்வரும் இரு கூற்றுகளும் அரசின் தோற்றம் பற்றிய இரு கோட்பாடுகளுடன் தொடர்பானவையாகும். அவற்றை இனங்கண்டு பெயரிடுக.

1) அரசு என்பது வரலாற்று வளர்ச்சியின் மெதுவான, ஆனால் தொடர்ச்சியான பெறுபேறாகும்''

2) ''அரசு என்பது இயற்கை நிலையில் வாழ்ந்த மனிதர்களால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் விளைவாகும்.''

- ❖ **படிமுறை வளர்ச்சிவாதம்**
- ❖ **சமூக ஒப்பந்தவாதம்**

**1102)** ''மனிதப் பிறிவிகளின் பௌதீக இருப்பானது இரு வேறுபட்ட மூலகங்களிலிருந்து தோற்றம்பெறும் இரு தொகுதிச் சக்திகளினால் ஆளப்பட்டுக் கட்டுப்படுத்தப்படுகின்றது.'' அவ் இரு மூலகங்களையும் அடையாளம் கண்டு பெயரிடுக.

- ❖ **சட்டம்**
- ❖ **நல்லொழுக்கம்/ ஒழுக்கம்**

**1103)** கீழே தரப்பட்டுள்ள கூற்று (1)ம் கூற்று (2)ம் குறிப்பானவற்றை அடையாளம் கண்டு பெயரிடுக.

1) '' உணர்வுபூர்வமானவையாயினும் அல்லது உணர்வுபூர்வமற்றவையாயினும் சரி, வெளிப்படையானவை யாயினும் அல்லது உள்ளார்ந்தவையாயினும் சரி அவை அரசியல் பற்றிய மனப்பாங்குகள், விழுமியங்கள், நம்பிக்கைகள் என்பவற்றின் உருவமைவாகும்''

2) ''தனிப்பட்டவர்கள் தமது அரசியல் விழுமியங்களையும் மனப்பாங்குகளையும் பழக்கங்களையும் பெற்றுக்கொள்ளும் செயன்முறை''

- ❖ **அரசியல் கலாசாரம்**
- ❖ **அரசியல் சமுதாயப்படுத்தல்**

**1104)** 1) அரசியல் நிறைவேற்றுப்பகுதியை அதன் பதவிக் காலம் முடிவுறுவதற்கு முன்னர் பதவியிலிருந்து அகற்றுவதற்கு ஜனாதிபதி அரசாங்க முறைமையில் பின்பற்றப்படும் யாப்புசார் நடபடி முறையினைக் குறிக்கும் சொற்பிரயோகம் யாது?

2) மந்திரி சபை என்றழைக்கப்படும் அரசியல் நிறைவேற்றுப் பகுதியை அதன் பதவிக்காலம் முடிவுறுவதற்கு முன்னர் பதவியிலிருந்து அகற்றுவதற்கு மந்திரி சபை அரசாங்க முறைமையில் பின்பற்றப்படும் யாப்புசார் நடபடி முறையினைக் குறிக்கும் சொற்பிரயோகம் யாது?

- ❖ **குற்றப் பிரேரனை/ ஒழுக்க வலு பிரேரணை/ பழிமட்டறைவு**
- ❖ **நம்பிக்கையில்லாப் பிரேரணை**

**1105)** கீழே தரப்பட்டுள்ள கூற்று (1) இனாலும் கூற்று (2) இனாலும் குறிக்கப்படும் அரசாங்கத்தின் துறைகளை அடையாளம் கண்டு பெயரிடுக.

1) அரசாங்கச் செயல்களை ஆரம்பிப்பதற்கும் பொதுச் கொள்கையை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதற்கும் அரச செயற்பாடுகளை இணைப்பதற்கும் பிரதானமாகப் பொறுப்பாகவுள்ள துறை

2) சட்டத்தைக் கலந்துரையாடி ஆக்கம் செய்வதற்கும் நிறைவேற்றுத்துறையின் மீது கண்காணிப்பைச் செலுத்துவதற்கும் பிரதானமாகப் பொறுப்பாகவுள்ள துறை

- ❖ **நிறைவேற்றுத் துறை**
- ❖ **சட்டத்துறை**

**1106)** 1) ஐக்கிய அமெரிக்க அரசுகளின் மத்திய அரசாங்கத்தின் சட்டத்துறையின் உத்தியோகரீதியான பெயர் யாது?

2) இந்திய மத்திய அரசாங்கத்தின் பாராளுமன்றின் கீழ்மன்றின் உத்தியோகரீதியான பெயர் யாது?

- ❖ **காங்கிரஸ்**
- ❖ **லோக் சபா**

**1107)** கீழே தரப்பட்டுள்ள கூற்று (1) இனாலும் கூற்று (2) இனாலும் கருதப்படுபவை யாவை?

1) தனது பொறுப்புகளையும் பணிகளையும் புரிவதற்காக அரசு அமர்த்திக்கொள்ளும் சிவில் அதிகாரிகளைக் கொண்ட பகுதி.

2) சட்டம் பற்றிய அதிகாரபூர்வமான வியாக்கியானத்துக்கும் அதனைக் குறிப்பிட்ட வழங்குகளுக்குப் பிரயோகிப்பதற்கும் பொறுப்பான அரசாங்கத்தின் கிளை

- ❖ **சிவில் சேவை/ குடியியல் சேவை**
- ❖ **நீதித்துறை**

**2018 ஆகஸ்ட் பரீட்சை வினாத்தாள்**

**1108)** கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களால் விபரிக்கப்படும் இரண்டு அரசியல் ஒழுங்கமைப்புக்களை இனங்கண்டு பெயர் குறிப்பிடுக?

1) எல்லா சமூக அமைப்புக்களையும் விட உயர்ந்த சர்வவல்லமை மிக்க அரசியல் ஒழுங்கமைப்பு
2) அரசின் விருப்பை நிறைவேற்றும் அரசியல் நிறுவனம்

- ❖ **அரசு**
- ❖ **அரசாங்கம்**

**1109)** கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களின் மூலம் நவீன உலகில் செயற்பாட்டில் உள்ள ஓர் அரசாங்க முறையும் ஓர் அரச முறையும் விபரிக்கப்பட்டுள்ளது அவற்றை இனங்கண்டு பெயர் இடுக?

1) மக்களினால் மக்களுக்காகவுள்ள மக்களின் அரசாங்கம்
2) அதன் பிரஜைகளுக்கு சமூக சேவைகளையும் சமூக பாதுகாப்பையும் வழங்கும் அரசு

- ❖ **ஜனநாயக அரசாங்க முறைமை**
- ❖ **நலன்பேண் அரசு அல்லது பொதுநல அரசு**

**1110)** கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களால் தெளிவுபடுத்தப்படும் நேரடி ஜனநாயகத்தின் இரு வழிமுறைகளையும் குறிப்பிடுக?

1) இது கருத்து கோரப்பட வேண்டும் என்ற பொருளைத் தரும் ஒரு பிரான்ஸியச் சொல்லாகும் இதன் பொருள் என்னவெனில் அவர்களின் தீர்ப்புக்காக ஒரு சட்ட மசோதா மக்களுக்கு அல்லது வாக்காளர்களுக்கு சமர்பிக்கப்பட வேண்டும் என்பதாகும்அது ஒரு சட்டவாக்கச் செயன்முறையாக இருப்பதுடன் சட்டத்துறையால் நிறைவேற்றப்படும் ஒரு சட்ட மசோதா வாக்காளர்களுள் பெரும்பாண்மையினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்படும் வரை சட்டமாக மாட்டாது.
2) இந்த வழிமுறையின் கீழ் யாப்பில் குறிப்பிடப்படும் மக்கள் தொகையினரால் ஒரு சட்ட மசோதா முன்மொழியப்பட்டு சட்டத்துறையின் பரிசீலனைக்காக சமர்ப்பிக்கப்படும் போது சட்டத்துறை அதனை செய்வதற்கான கடப்பாட்டை கொண்டிருக்கிறது அதன் பின்னர் சட்டத்துறை அம்மசோதாவை மக்களின் அனுமதிக்காக அல்லது நிராகரிப்புக்காக சமர்பிக்க வேண்டும் இந்த வழிமுறையின் நோக்கம் சட்டவாக்கத்தை முன்மொழிவதற்கான அதிகாரத்தை மக்களுக்கு வழங்குவதாகும்

- ❖ **ஒப்பங்கோடல்**
- ❖ **தொடக்கி வைத்தல்**

**1111)** கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களால் விபரிக்கப்படும் பெயர்களைக் குறிப்பிடுக?

1) இது மானிட ஜனசமூகத்தை விபரிப்பதற்கு பயன்படுத்தப்படும் ஒரு சொல்லாக இருப்பதுடன் அரசானது வரலாற்று ரீதியாக அதிலிருந்தே தோன்றியுள்ளது.
2) பொதுவாக பிணைப்புகள் அதாவது மொழி சமயம் இனம் ஆல்புலம் மற்றும் வரலாறு ஆகிய அடையாளங்களின் மீது கட்டியெழுப்பப்பட்ட பொது கலாசாரம் பற்றிய உணர்வைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு மக்கள் குழுவாகும்

- ❖ **சமூகம்**
- ❖ **தேசம்**

**1112)** கீழ்வரும் கூற்றுக்களால் விபரிக்கப்படும் அரசியல் கோட்பாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக?

1) அதிகளவு அதிகார குவிப்புக்கு எதிரானது முன்னெச்சரிக்கையாக அரசியல் அதிகாரமானது அரசினது பல நிறுவனங்களுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும் என்ற சித்தாந்தமாகும்
2) சகலரும் சட்டத்தின் முன் சமமானவர்கள் என்றும் சட்டத்தின் சமமான பாதுகாப்பிற்கு உரித்துடையவர்கள் என்றும் வலியுறுத்தும் அரசியல் யாப்பின் மூலக்கொள்கையாகும்

- ❖ **அதிகார வேறாக்கல் கோட்பாடு**
- ❖ **சட்டவாட்சி கோட்பாடு**

**1113)** மாக்சீய கோட்பாடானது அரசின் தோற்றம் வளர்ச்சி படிமுறை முடிவு என்பன தொடர்பான ஐந்து கட்டங்களைக் குறிப்பிடுகிறது அதன் இறுதி இரண்டு கட்டங்களைக் குறிப்பிடுக?

- ❖ **சோசலிச கமூகம்**
- ❖ **நவீன கம்யூனிச சமூகம்**

1114) சமூக ஒப்பந்தக் கோட்பாடானது அரசின் தோற்றம் பற்றிய ஓர் அரசியல் கோட்பாடாகும் இக்கோட்பாட்டின் ஓர் மூலகர்த்தா தனிமுதன்மையான முடியாட்சியை முன்மொழிந்ததோடு மற்றையவர்பிரதிநிதித்துவ அரசாங்கத்தை ஆதரித்தார். இவ்விருவரினதும் பெயர்களைக் குறிப்பிடுக?

1) தனிமுதன்மையான முடியாட்சி
2) பிரதிநிதித்துவ அரசாங்கம்

- ❖ **தோமஸ் கொப்ஸ்**
- ❖ **ஜோன் லொக்**

1115) பின்வரும் கூற்றுக்களால் விபரிக்கப்படுவனவற்றை இனங்கண்டு அவை இரண்டையும் குறிப்பிடுக?

1) அரசாங்கத்தின் குறிப்பிட்ட கொள்கைகள் மீது செல்வாக்குச் செலுத்துவதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்கு முயற்சிக்கின்ற ஆனால் அரசாங்கஅதிகாரத்தை கைப்பற்றுவதற்கோ அல்லது அரசாங்கத்தின் சகல கொள்கைகளையும் கட்டுப்படுத்துவதற்கோ முயற்சிக்காத தனியார் மற்றும் தன்னார்வ அமைப்புக்களாகும்
2) இந்த சொல் ஜனநாயகத்தைப் பாதிக்கின்ற அல்லது அதன் ஆர்வத்தை ஏற்படுத்துகின்ற விடயங்கள் பற்றி மனிதர் கொண்டுள்ள கருத்துக்களின் திரட்டினை குறிப்பதற்கே கொதுவாக பயன்படுத்தப்படுகிறது அதன்படி அது பல்வேறு கருத்துக்கள் நம்பிக்கைகள் மூடநம்பிக்கைகள் பாரபட்சங்கள் எதிர்பார்கைகள் என்பவற்றின் ஒரு கலையாகும்.

- ❖ **அமுக்கக் குழுக்கள்**
- ❖ **பொதுஜன அபிப்பிராயம்**

1116) இறைமை என்பது அரசுகளின் ஆனையதிகாரத்தின் மூலாதாரமாக கருதப்படுகிறது நவீன உலகில் இறைமை அதிகாரத்தின் நடைமுறையானது இரு அரசாங்க மாதிரிகளின் கீழ் ஒழுங்கமைக்கப்படுகிறது அவ்விரு அரசாங்க மாதிரிகளும் எவை?

- ❖ **ஒற்றையாட்சி அரசாங்கம்**
- ❖ **சமஸ்டியாட்சி அரசாங்கம்**

1117) தாராள ஜனநாயகமானது பிரதிநிதித்துவத்தின அடிப்படையில் தொழிற்படுகின்றது பிரதிநிதித்துவத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்கு அவசியமான இரு நிபந்தனைகள் காணப்படுகின்றன அவ்விரு நிபந்தனைகளும் எவை?

- ❖ **சர்வஜனவாக்குரிமை**
- ❖ **காலத்திற்கு காலம் தேர்தல்கள்**

## 2019 ஆகஸ்ட் பரீட்சை வினாத்தாள்

1118) சமஷ்டி அரசாங்க முறையின் பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.

- ❖ **இறைமை அதிகாரம் மத்திய மற்றும் பிராந்திய அரசாங்கங்களுக்கிடையே பகிரப்பட்டிருத்தல்.**
- ❖ **ஒப்பீட்டு ரீதியில் இருவகையான அரசாங்கங்கள் காணப்படல்.**

1119) சமஷ்டி அரசாங்கமுறை உருவாகுவதில் இரண்டு வழிமுறைகள் காணப்படுகின்றன. அவ்விரு வழிமுறைகளைக் குறிப்பிடுக.

- ❖ **சுயாதீன அரசுகளாகக் காணப்பட்ட அரசியல் அலகுகள் ஒன்றிணைந்து சமஸ்டி அரசாக மாறுதல்.**
- ❖ **ஒற்றையாட்சி அரசொன்று சமஷ்டி அரசாக மாறுதல்.**

1120) ஒற்றையாட்சி அரசாங்க முறையின் நன்மைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

- ❖ **ஆட்சிமுறை செயற்பாடுகளின் சிக்கல் குறைந்துள்ளமை.**
- ❖ **ஒப்பீட்டு ரீதியாக செயற்திறன்மிக்க அரசியலமைப்பாகும்.**

1121) ஜனாதிபதித்துவ அரசாங்க முறையொன்றில் சட்டத்துறைக்கும் நிர்வாகத்துறைக்கும் இடையில் இரு பிரதான வேறுபாடுகள் காணப்படுகின்றன. அவ்விரு வேறுபாடுகளையும் குறிப்படுக.

- ❖ **சட்டத்துறையும் நிறைவேற்றுத்துறையும் தனித்தனியாக தெரிவு செய்யப்படல்.**
- ❖ **சட்டத்துறை மற்றும் நிறைவேற்றுத்துறையின் பதவிகாலம் சமமற்றுக் காணப்படல்**

1122) அரசியல் விஞ்ஞான பரிசீலனைக்கான மரபுரீதியான அணுகுமுறைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

- ❖ **தத்துவ அணுகுமுறை**

❖ **ஒப்பீட்டு அணுகுமுறை**

1123) பின்வரும் கூற்றுக்களால் விபரிக்கப்படும் சமூகத்திலுள்ள இரண்டு அரசியல் தாபனங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

1) இறைமை அதிகாரத்தைக் கொண்ட மத்திய நிறுவனம்:

❖ **அரசு**

2) அரசின் பிரதான முகவர்:

❖ **அரசாங்கம்**

1124) ஜனநாயக சமூகங்களில் அரசியல் கட்சிகளின் பணிகள் இரண்டினைக் குறிப்பிடுக.

❖ **பிரதிநிதித்துவத்தின் பிரதான ஊடகமாக செயற்படுதல்.**

❖ **அரசியல் உயர் குழாமினரை உருவாக்குதல் மற்றும் ஆட்சேர்ப்பு**

1125) நவீன தேசிய அரசின் பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.

❖ **ஒரு தேசம் ஓர் அரசு எனும் சித்தாந்தத்தின் அடிப்படையில் தோற்றம்**

❖ **குறிக்கப்பட்ட ஆள்புலம் காணப்படல்**

1126) குடியரசுவாதத்தின் இரண்டு பிரதான அனுமானங்களைப் பெயரிடுக.

❖ **அரசின் தலைவர் மக்களால் தெரிவு செய்யப்படல்.**

❖ **மக்கள் இறைமையை ஏற்றுக்கொள்ளல்.**

1127) பொதுக் கொள்கை வாழ்க்கை வட்டத்தின் எவையேனும் இரண்டு கட்டங்களைப் பெயரிடுக.

❖ **கொள்கை நிகழ்ச்சி நிரலை தயாரித்தல்.**

❖ **கொள்கைத் தீர்மானம் எடுத்தல்.**

1128) அரசின் பரிணாம வளர்ச்சி தொடர்பாக மார்க்சியவாதக் கோட்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் இரண்டு கட்டங்களைக் குறிப்பிடுக.

❖ **புரதான கம்யூனிச சமூகம்/ ஆரம்ப கம்யூனிச யுகம்**

❖ **அடிமை முறை சமூகம்/ ஆண்டாள் அடிமை சமூகம்**

1129) முரண்பாடு தொடர்பான அரசியல் வகைப்படுத்துலுக்கிணங்க முரண்பாட்டின் இரு வகைகளைக் குறிப்பிடுக.

❖ **அரசுகளுக்கிடையிலான முரண்பாடு**

❖ **அரசுக்குள்ளான முரண்பாடு**

1130) ‘வரையறுக்கப்பட்ட அரசாங்கம்’ என்ற எண்ணக்கருவின் பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.

❖ **அதிகாரத்தை வரையறுத்தல்**

❖ **பொறுப்புடைமை மற்றும் நிபந்தனைகளுக்குட்படல்**